24. தைத்தீரியம்
25. பாதண்டநீயம்
26. பாரத்வாஜி
27. பாலஸ்கினம்
28. பிராச்யகடம்
29. மானவம்
30. மைத்திரயணீயம்
31. வாதூலம்
32. வர்தந்தவீயம்
33. வாராயணீயம்
34. வாராஹம்
35. வைகாநசம்
36. சாட்யாயநீ
37. சியாமாயனம்
38. சுவேதாசுவதாரம்
39. ஹாரித்திரவியம்
40. ஹாரீரதம்
41. ஹரண்யகேசி

உபநிஷத்கள் - 32 அவையாவன

20. சாரீரிகம்
21. யோகசிக்ஷை
22. ஏகாக்ஷரம்
23. அக்ஷி
24. அவதூதம்
25. கடருத்ரம்
26. ருத்ரஇதயம்
27. யோககுண்டலினி
28. பஞ்சபிரமம்
29. பிராணஅக்னிஹோத்ரம்
30. கவிசம்தரணம்
31. வராகம்
32. ஸரஸ்வதி ரகசியம்

(7 என்பது இல்லை)

மீதி சாகைகள் விவரம் தெரியவில்லை.

## 2(b) சுக்ல யஜுர் வேதம் (இவர்கள் வடக்கே அதிகம்)

15 சாகைகளும், 17 உபநிஷத்துக்களும் உள்ளதாகச் சொல்வர். அவையாவன.

| 15 சாகைகள் | உபநிஷத்துகள் - 17 |
|---|---|
| 1. வாஜசனேயம் | 1. ஜாபாலம் |
| 2. காண்வம் | 2. ஹம்ஸம் |
| 3. ஜாபாலம் | 3. பரமஹம்ஸம் |
| 4. பௌதேயம் | 4. ஸுபாலம் |
| 5. மாத்தியான்தினம் | 5. மாந்த்ரீகம் |
| 6. காபோலம் | 6. நிராலம்பம் |
| 7. வைனதேயம்** | 7. திரிசிகிப்ரமாணம் |
| 8. வைனதேயம்** | 8. மண்டலப்ரமாணம் |
| 9. பாராசரம் | 9. அத்வைதய தாரகம் |
| 10. பரமாவடிகம் | 10. பைஸ்கனம் |
| 11. ஆபடிகம் | 11. பிக்ஷு |
| 12. பௌண்டிரவத்ஸம் | 12. துரியாதீதம் |
| 13. பைஜவாபம் | 13. அத்யாத்மம் |
| 14. கௌந்தேயம் | 14. யாஜ்ஞ வல்க்யம் |
| 15. வைதேயம் | 15. சாட்யாயனி |
| | 16. தாரஸாரம் |
| | 17. முக்திகம் |

** 7, 8 வெவ்வேறு

## யஜுர் வேதம் தொடர்பான மற்ற நூல்கள்

1. தைத்திரீய ப்ராம்மணம் - தைத்திரிய மந்திரங்களின் யாக விளக்கம்
2. சதபத ப்ராம்மணம் - இது ஸுக்ல யஜுர் வேத பாஷ்யம்
3. தைத்திரீய ஆரண்யகம் - வேத மந்திரங்களிலிருந்து தொகுக்கப்பட்டது
4. ப்ரஹதாரண்யகம் - ஸுக்ல யஜுர் வேதத்திலிருந்து தொகுக்கப்பட்டது.

ஸம்ஹிதை என்றால் மந்திரங்களின் கூட்டம் என்று சொல்வர்.

தித்திரி மகரிஷி பரம்பரையால் க்ருஷ்ண யஜுர் வேத மந்திரங்களுக்கு தைத்திரீய ஸம்ஹிதை எனப் பெயர் வந்தது.

யஜுர் வேதம் - 7 காண்டம் - இந்த ஏழு காண்டமும், காண்டம், ப்ரபாடகம், ப்ரச்னம் என்று பிரிக்கப்பட்டுள்ளது.

2(b) ஸுக்ல யஜுர் வேதம் - இது வாஜஸனேய ஸம்ஹிதை என்றும் சொல்லப்படும். இது வட நாட்டில்பிரபலம். யாஜ்ஞவல்க்யர் அருளியது. இவர் வைசம்பாயனரிடமிருந்து பிரிந்தவர். இதில் 40 அத்யாயம் உள்ளது. 40வது அத்யாயம் ஈசோபனிஷத் யஜுர் வேதத்தில் உள்ளது. ப்ரஹதாரண்யக உபநிஷத். இது யஜுர் வேத சாரம்.

அஸதோ மா ஸத்கமய,
தம ஸோமா ஜ்யோதிர் கமய,
ம்ருத்யோமா அமிர்தம கமய,

இதன் அர்த்தம்:

(அஸத்திலிருந்து என்னை ஸத்திற்கு அழைத்துச் செல். இருளில் இருந்து என்னை ஒளிக்கு அழைத்துச் செல். மரணத்திலிருந்து என்னை சாகாமைக்கு அழைத்துச் செல்).

இந்த உபநிஷத்தில் யாஜ்ஞ வல்க்யர் - மைத்ரேயி இடையே நடந்த ஸம்வாதம் உள்ளது.

ஈசாவாஸ்ய உபநிஷத் (சுக்ல யஜுர் வேதம்)

அக்னே நய ஸுபதாராயே ............................பிதேம

இந்த மந்த்ரத்தின் பொருள்:

(அக்னி தேவனே, ஒளிப் பொருளே எங்களின் எல்லாச் செயல்களையும் நீ அறிபவன். நாங்கள் செய்த வினைப் பயனை அனுபவிக்க எங்களை அனுபவப் பாதையில் இட்டுச் செல். தவறு செய்யாமையை எங்களுக்கு உணர்த்து........)

அட்டவணை 1ல் சொல்லப்பட்ட ஸாம வேதம்...(3)

ஸாம வேதம் என்பது பற்பல ரிஷிகள் பற்பல தெய்வங்களைப் பற்றிச் சொன்ன ப்ரார்த்தனா கீதம் ஆகும். ரிஷிகள், இவைகளை அசரீரி போல் கேட்டு நமக்கு அளித்தார்கள். இவை இரண்டு பிரிவுகளாக உள்ளன. இதில் 1875 மந்த்ரங்கள் இருப்பதாகச் சொல்வர் மாறுபட்ட ஸ்வரங்களைக்கொண்டது

1. பூர்வார்சிதம் - ஆறு பிரிவுகள்
2. உத்தரார்சிதம் - ஒன்பது பிரிவுகள்

மொத்தம் 30 அத்தியாயம்.

446 தசதிகள் (தசதி என்றால் 10 என்று பொருள்)

1000 பிரிவுகள் (ஸாகைகள்) இருந்ததாயும் 17 சாகைகள் தான் மிஞ்சியது என்றும் சொல்வார் உண்டு மற்றும் சில பெரியோர்கள் தற்போது மூன்று தான் உள்ளது என்றும் சொல்வர். ரிக், பதஸ், பதஸ்தோமம் இப்படிப்பட்ட க்ரமத்தை உடையது ஸாமம். ஸாமம் 5 விதமாகவும், 7 விதமாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. இதற்கு "பங்க்தி" என்று பெயர். அதாவது பிரிவு. ஒவ்வொரு பங்க்திக்கும் ஒரு அதிஷ்டான தேவதை.

ஐந்து பங்க்தி என்றால்:

1 ப்ரஸ்தாவம், 2 உத்கீதம், 3 ப்ரதிஹாரம், 4 உபத்ரவம், 5 நிதனம்
.

ஏழு பங்க்தி என்றால் 6 ப்ரணவம் 7 ஹிங்காரம் என்பதை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இதில் சாந்தோக்ய உபநிஷத், கேநோபநிஷத் - இரண்டு உபநிஷத்துக்கள் உள்ளன. ஐரோப்பிய சங்கீதக் குறிகளும், ஒலியும், ஸ்வரமும் சாமகானத்துடன் ஒத்துள்ளது. இதைப் பற்றி டச்சுக்காரர்கள் நிறைய நூல்களை வெளியிட்டுள்ளார்கள். ஜெர்மானியரும் இப்படியே ஆராய்ச்சி செய்து நிறைய நூல்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

17 பிரிவுகளில், ராணாயனீயம்,கௌதமம், என்ற இரண்டும் அதிகமாகக் கானம் செய்யப்படுகிறது.

சாந்தோக்ய உபநிஷத் - இது சாந்தோக்ய ப்ராம்மணத்தைச் சேர்ந்தது.

1. உத்தாலக ஆருணி -- இவர் ஸத்வித்யையை ஸ்வேத கேதுவுக்கு உபதேசித்தார்.

2. மஹிதாஸ ஐதரேயர் -- இவர் புருஷ வித்யையை ஸ்வேத கேதுவுக்கு உபதேசித்தார்.

3. ஸத்ய காம ஜாபாலர் -- இவர் ஸம்வர்க்க வித்யையை ஸ்வேத கேதுவுக்கு உபதேசித்தார்.

4. சாண்டில்யர் -- இவர் சாண்டில்ய வித்யையை ஸ்வேத கேதுவுக்கு உபதேசித்தார்.

5. ப்ரவாஹண ஜைவலி -- இவர் பஞ்சாக்னி வித்யையை ஸ்வேத கேதுவுக்கு உபதேசித்தார்.

இவைகள் எவற்றைக் குறிப்பது என்றால் கடுக்காயின் குணங்களை அறிந்த வைத்யன், அளவும், முறையும் தெரிந்து அதை நோயாளிக்கு கொடுக்க நோயாளி வைத்யர் சொல்லியபடி அதைச் சாப்பிட்டு பலன் பெறுகிறான். இவற்றின் அளவும், முறையும் அறியாது நோயாளி தன் இஷ்டத்துக்குச் சாப்பிட்டால் முழுப் பயனை அடைய மாட்டான். கெடுதலையும் அடைவான். இது கடுக்காயின் குற்றமல்ல. மந்த்ரமும் கடுக்காயைப் போன்றதே. இதை சொல்வதற்கு உத்தாலக ஆருணி போன்ற ரிஷிகள் தேவை.

இதில் (ஸாமவேதத்தில்) தர்மத்தின் பிரிவுகள் சொல்லப் படுகின்றன.

1) யக்ஞம் 2) அத்யயனம் 3) தானம் - இது முதல் பிரிவு

தவம் - இது இரண்டாவது பிரிவு (வானப்ரஸ்தம்)

ப்ரஹ்மச்சாரி தர்மம் - இது மூன்றாவது பிரிவு

வாக்கிற்கு நான்கு பகுதி இருப்பதாக சொல்லப்படுகிறது:
1) பரா 2) பச்யந்தி 3) மத்யமா 4) வைகரீ

இதில் வைகரீ மட்டும் நடைமுறையில் விளங்குகிறது. மற்ற மூன்றும் உள்ளே மறைந்துள்ளது.

## கேநோபநிஷத்:

யாரால்? என்பது கேள்வி. உலகங்களின் இயக்கம் - யாரால்? புவி ஈர்ப்பு விதி - இது கண்டுபிடிக்கப் படுவதற்கு முன்பாகவே இருந்து கொண்டுஇருக்கிறது. சூர்யனைச் சுற்றி உள்ள வட்டப் பாதையில் பல கிரகங்கள் இயங்குகின்றன. எப்போது இயங்க ஆரம்பித்தது என்பன போன்ற கேள்விகள், பதில்கள் இதில் உள்ளன. இந்த உபநிஷத்தில் 35 மந்த்ரங்கள், 4 பகுதிகள் உள்ளன. இதற்கு ஆதிசங்கரர், ஸ்ரீமத்வர் இருவரும் "பாஷ்யம்" எழுதியிருக்கிறார்கள் (உபநிஷத் வரிசையில் 2வது உபநிஷத்தில் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன).

## சாந்தோக்ய உபநிஷத் (ஸாம வேதம்)

ஸாம கானம் செய்பவன் என்று பொருள். பத்து அத்யாயங்கள் . இதற்கு தைத்திரீய உபநிஷத்தைப் போல சிறப்பு உண்டு. அக்ஷர வித்யை, ஆகாச வித்யை, மது வித்யை, சாண்டில்ய வித்யை , ப்ராண வித்யை, பஞ்சாக்னி வித்யை, பூமா வித்யை, தஹர வித்யை என்று பல பிரிவுகள் உள்ளன.

(உபநிஷத் வரிசையில் 9வது உபநிஷத்தாக விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன)

ஸாம வேதத்தில் கௌதமம், ராணையதீயம், ஜைமினீயம் என்று மூன்று பிரிவு உண்டு.

கௌதம- தாண்ட்ய ப்ராஹ்மணம், ஸம்விதான ப்ராஹ்மணம், தேவதாத்யாய ப்ராஹ்மணம், ஸம்ஹிதோபநிஷத் ப்ராஹ்மணம், ஷட்விம்ஸ ப்ராஹ்மணம், ஆர்ஷேய ப்ராஹ்மணம், ஸாந்தோக்ய ப்ராஹ்மணம், வம்ஸ ப்ராஹ்மணம் என்று எட்டு ப்ராஹ்மணங்கள்.

ஆரண்யகம் - சாந்தோக்ய ஆரண்யகம்
உபநிஷத் - சாந்தோக்ய உபநிஷத்
ராணயதீய ஸம்ஹிதை - இதற்கு தனியாக ப்ராஹ்மணம், ஆரண்யகம், உபநிஷத் இவை இல்லை.

ஜைமனீய ஸம்ஹிதை - இதில் ஜைமனீய ப்ராஹ்மணம், ஜைமனீய ப்ராஹ்மண ஆரண்யகம், கேநோபநிஷத்து உள்ளன.

## அட்டவணை- 1ல் சொல்லப்பட்ட அதர்வண வேதம் (4)

அறியாமை என்கிற இருளை "அதர்" என்னும் அனல் எரிப்பதால் இதற்கு அதர்வ வேதம் என்று பெயர். 5987 மந்த்ரங்கள் இருப்பதாகச்சொல்வர்.
மந்த்ரங்களின் சேர்க்கை ஸம்ஹிதை. அதர்வ வேதத்திற்கு, உப வேதங்களாக சர்ப்ப வேதம், பிசாச வேதம், அசுர வேதம், இதிஹாச வேதம், புராண வேதம், ஆயுர் வேதம், யந்த்ர தந்த்ர வேதங்கள் என்று பலவாறாக இருப்பதாகச் சொல்வர்.

பொது - ஶௌனக ஸம்ஹிதை, பிப்பலாத ஸம்ஹிதை என்று இரண்டு ஸம்ஹிதைகள். கோபத ப்ராஹ்மணம், ப்ரச்னோபநிஷத், மாண்டுக்ய உபநிஷத், ந்ருஸிம்ஹ தாபநீய உபநிஷத் இவைகள் இதைச் சேர்ந்தது.

இதற்குள்ள சாகைகள் (கிளைகள்) பிப்பலாத சாகை, ஸ்தௌத சாகை, மௌத சாகை, சௌனகீய சாகை, ஜாஜல சாகை, ஜலத சாகை, ப்ரம்ம வேத சாகை, வேத சாக சாகை, சாரண வைத்ய சாகை, என்று பல சாகைகள் உள்ளன.

இதற்கு 31 உபநிஷத்துகள் இருப்பதாகச் சொல்வர். அவையாவன:

1. ப்ரச்னம்
2. முண்டகம்
3. மாண்டுக்யம்
4. அதர்வ சிரம்
5. அதர்வ சிகம்
6. ப்ரஹத்சாபாலம்
7. ந்ருஸிம்ஹ ஹத்தாபணி
8. நாரத பரிவ்ராஜம்
9. சீதா,
10. சரமம்
11. மஹாநாராயணம்
12. ராமரஹஸ்யம்
13. ராமதாபனீ
14. சாண்டில்யம்
15. ப்ரம்ம ஹம்ஸ பரிவ்ராஜகம்
16. அன்னபூர்ணம்
17. சூர்யன்
18. ஆத்மா
19. பாசுபதம்
20. பரப்ரம்மம்
21. த்ரிபுரதாபனி
22. தேவி
23. பாவனம்
24. பஸ்மசாபாலம்
25. கணபதி
26. மஹாவாக்யம்
27. கோபாலதாபணி
28. க்ருஷ்ணம்
29. ஹயக்ரீவம்
30. தத்தாத்ரேயம்
31. காரூடம்

அதர்வண மூலஸம்ஹிதை, 20 காண்டங்களாக பிரித்து பிறகு ப்ரபாடகங்கள் , அனுவாகங்கள், ஸூத்ரங்கள், மந்த்ரங்கள் என்று தொகுக்கப்பட்டுள்ளன. மொத்தம் 5847 மந்த்ரங்கள். அதர்வணம்

தெரிந்தவர்கள் காஷ்மீரில் சிலர், காசியில் சிலர் இப்போதும் இருக்கிறார்கள்.

சுமார் 1575ஆம் ஆண்டில் "பஹாவன்" என்கிற ப்ராமணன் முஸ்லிமாக மதம் மாறி அதர்வண வேதத்தை பாரசீக மொழியில் எழுதினான். இஸ்லாமியர்களுக்கு இது வரப்ரசாதமாக அமைந்து விட்டது.

நோய்களுக்கு வேண்டிய சிகிச்சைகள் இந்த வேதத்தில் உள்ளது. வானியல் ரகசியங்கள் இந்த வேதத்தில் உள்ளன. ஜலம், நிலம், காற்று, கனல் (நெருப்ப), ஆகாயம் இவற்றால் நோய்களை எப்படி குணப்படுத்தலாம் என்பதும் இதில் உள்ளது. "ஹிப்னாடிசம்" இதில் சொல்லப்பட்டுள்ளது. செல்வத்தை அடையும் வழி மூலிகைகளின் விவரம் இதில் உள்ளது.

அதர்வ வேதத்திலிருந்து ஜெர்மன் விஞ்ஞானிகள் ஆளில்லாத (பைலட்டில்லாத) (V-I, V-II, V-III)போர் விமானங்களை உருவாக்கி இங்கிலாந்தைத் தாக்கினார்கள். ப்ராண வாயு, கரியமில வாயு விஷயம் இந்த வேதத்தில் உள்ளது. ரண சிகிச்சை, அதற்கான கருவிகள் செய்யும் முறையை விளக்கும் விவரங்கள் இந்த வேதத்தில் உள்ள "சரகஸம்ஹிதை" யில் காணப்படுகிறது. (தஞ்சாவூர் சரஸ்வதி மஹாலில் இந்த நூல் உள்ளது). கண்களுக்குத் தெரியாத கிருமிகள் உடலில் வலை போல் உள்ளன என்று இந்த வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. ருத்ர ஜ்வரம் (வைரஸ் ஜ்வரம்) பற்றியும் குறிப்புகள் உள்ளன. முகம் வழியாகச் செல்லும் கிருமிகள், உடலில் புகும் கிருமிகள், மூக்கு வழியாகச் செல்பவை, தோல் வழியாகச் செல்பவை போன்ற கிருமிகள். இக்கிருமிகளால் ஏற்படும் நோய்களைப் பற்றிய விவரங்கள் உள்ளன. இயற்கை மருத்துவம் இதில் சொல்லப்படுகிறது. மூலிகைகளின் பெயர், அவற்றின் பலன் இதில் உள்ளது. மணி, மந்த்ர, ஔஷத சிகிச்சைகள், அதர்வணீ ஜபம், யாகம், தானம், ஸ்வஸ்திவாசனம், அவசேஸனம், அவமார்ஜனம், ஸ்நானம் 2 ஆஸ்கிரஸி, (மானசீக சக்தி), 3 தைவீ (வாயு, ஜலம், நிலம், சூர்ய சக்தி), 4 மானுஷி (மருத்துவர்கள்) இவை போன்ற சிகிச்சை முறைகள் சொல்லப்பட்டுள்ளன.

சாந்தி கர்மாக்கள் அதாவது நோய்க்கு தக்கவாறு சாந்தி செய்து கொள்வது, சித்தப் ப்ரமைக்கு கூட, இதில் விவரங்கள் உள்ளன. ப்ரம்ம ஔதனம்- அரிசியுடன் நல்ல ஜலம், நீர் கலக்காத பால், ஸோமம் போன்ற ஓஷதிகள் கலந்த அன்னம் இவைகளை சாப்பிட்டால் ஏற்படும் க்ஞானம், நீண்ட ஆயுள், உடல் வலு, நல்ல இல்லறம் போன்ற பலன்களுக்கான விவரம் உள்ளது. விரோதிகளை அழிப்பதற்கான மந்திரம் உள்ளது. திருமணம், வீடு எப்படி இருக்க வேண்டும், காலபைரவன், நரி, ஈக்கள், காகங்கள், ஆயுதங்கள், வில் அம்பு, மின்னல், இடி, வெள்ளம், நெருப்பு, ஜ்வரம், க்ஷயம், இவற்றால் ஏற்படும் மரணம், அன்னத்தின் பெருமை, ப்ராண வித்யை, அன்னமய, ப்ராணமய, மனோமய, விக்ஞான மய, ஆனந்த மய கோசங்கள் பற்றிய விவரங்கள் உள்ளன. ஏகாதச ருத்ரர்கள் பற்றிய விவரங்கள் உள்ளது.

அசுரர்கள்:

1. எல்லா காலத்திலும், எல்லா இடத்திலும் கடவுளை ஏற்காதவன்
2. கர்வமுள்ள நாஸ்திகன்
3. தன்னைப் பற்றி பெரிதாக நினைப்பவன்
4. சுயநலக்காரன்
5. துஷ்டன்
6. காமாந்தகன்
7. முன்கோபி
8. அக்கிரமக்காரன்
9. கொடூரன்

இவர்களெல்லாம் அசுரர்கள் என்று வேதம் சொல்கிறது.

ப்ரம்மச்சரிய ஸூக்தம் இதில் உள்ளது. மனிதர்களின் பாவங்களைப் போக்கி அவர்களை பாவமற்றவர்களாகச் செய்யும் தேவதைகள் இதில் சொல்லப்பட்டுள்ளன.

பூமியில் வசிக்கும் தேவதைகள் சொல்லப்பட்டுள்ளன - விவரம் வருமாறு:

1. அக்னி
2. வனஸ்பதி (தாவர உருவில் உள்ள தேவதை)
3. ஓஷதிகள்
4. வீருத:
5. அஹோராத்ர
6. சபய்ய
7. உஷா:
8. பார்த்திவா:பசவ:
9. ஆரண்யா:ம்ருகா:
10. பூமி
11. யக்ஷர்கள்
12. பர்வதங்கள்
13. கடல்கள்
14. நதிகள்
15. வேசன்தா:
16. பூமியில் நிலையாக இருக்கும் சக்ரங்கள்
17. வஸவ:
18. அதர்வாண:
19. அங்கிரஸா:
20. யாக தேவதைகள்
21. எஜமானன்
22. ருசன்
23. சாமாளி
24. பேஷஜானி
25. யஜூ
26. ஹோத்ரா:
27. வீருதாம் பஞ்சராஜ்யானி
28. ஸோமன்
29. தர்ப்ப:
30. யவ:
31. பங்கள்
32. ஸஹ:
33. அராத
34. ரக்ஷாம்ஸி
35. சர்ப்பம்
36. புண்ய ஜனங்கள் (புனிதமான யாகங்கள் )
37. மரணம் (11 விதமான மரணங்கள்)
38. ருதுக்கள்
39. ருதுபதி
40. ஆர்த்தவம்
41. ஹாயன
42. ஸமா:
43. ஸம்வஸ்சர:
44. மாஸா:
45. விஸ்வேதேவா: தேவ பஸ்ய:
47. பூதம்
48. பூதானாம், பூதபதி
49.பேஷஜன்

## அந்தரிக்ஷ தேவதைகள் விவரம் வருமாறு:

1. கந்தர்வர்கள்
2. அப்ஸரா:
3. சந்த்ரமா:
4. வாயு
5. பர்ஜன்யன்(மழை தேவதை)
6. அந்தரிக்ஷன்
7. திக்குகள்
8. ஸர்வா ஆசா:
9. ஸோம:
10. பக்ஷிகள்
11. சகுந்தபனி
12. பவ
13. ஸர்வ:
14. ருத்ர:
15. பசுபதி:
16. இஷு
17. யமன்
18. பிதர:
19. அந்தரிக்ஷசத: தேவா:
20. ருத்ரா:

## வானில் வசிக்கும் தேவதைகள் -

1) இந்திரன்
2) ப்ருஹஸ்பதி **
3)சூர்யன்
4) ராஜாவருண:
5) மித்ரன்
6) விஷ்ணு
7) பகன்
8) அம்சன்
9) விவஸ்வான்
10) சவிதாதேவன்
11) தாதா
12) பூஷா
13) த்வஷ்டா
14) அஸ்விதௌ
15) ப்ருஹஸ்பதி **
16) அதர்மா
17) விஸ்வே ஆதித்ய:
18) தெய்வீக பக்ஷிகள்
19) த்யௌ
20) நக்ஷத்திரங்கள்
21) சப்த ரிஷய:
22) தேவி : ஆப:
23)ப்ரஜாபதி
24) திவிஷதா:தேவா:

** 2. தேவ குரு; 15. அசுரகுரு

பூமியில் 48, அந்தரிக்ஷத்தில் 20, குருஸ்தானத்தில் 23, ஆக 91.

மேலும் இந்த வேதத்தில் யுத்தம், படைகள், தளபதி, வெடிக்கும் குண்டு, கண்ணி வெடி, கையெறி குண்டு, வானில் சென்று தாக்கும் யந்த்ரம், அம்பின் நுனியில் வைத்து எய்வது, நதிகள், குளங்களின் ஓரங்களில் மறைத்து வைக்கப்படும் குண்டுகள், மலையின் மறைவுப்பகுதிக்கும், கடலுக்குள்ளும் சென்று தாக்குவது --- இவை பற்றிய விவரங்கள் உள்ளன. தூர்வாஸ்த்ரம் (கண்ணி புகைக் குண்டு) தமஸாஸ்த்ரம் (கண்கள் மங்கி தடுமாறுதல்), சம்மோர்காநாஸ்த்ரம் (மயக்க மருந்தைப் போல) இப்படி பலப்பல அஸ்த்ரங்களின் விவரங்கள் உள்ளன.

## அட்டவணை-II ல்சொல்லப்பட்ட மந்த்ரம்( ஸம்ஹிதை) (1)

வைதீக கர்மாக்களில் சொல்லப்படும் மந்த்ரங்கள் இதில் உள்ளன. ப்ரார்த்தனா மந்த்ரங்கள், ஆசீர்வாத மந்த்ரங்கள் - இவையும் இதில் அடக்கம். தர்ம சூக்ஷ்மங்களையும் இதில் தெரிந்து கொள்ளலாம்.

ரிக் வேதத்தில் இரண்டு பிரிவு (1) சாகலப் பிரிவு (2)பாஸ்கலப் பிரிவு.

சாகல பிரிவில், ருக் வேதத்திற்கு சாகல ஸம்ஹிதை. இதற்கு ப்ராஹ்மணம், ஐதரேய ப்ராஹ்மணம். இதற்கு ஆரண்யகம், ஐதரேய ஆரண்யகம். இதற்கு உபநிஷத், ஐதரேய உபநிஷத்.

பாஸ்கலப் பிரிவு - இதற்கு பாஸ்கல ஸம்ஹிதை, கௌஷீதிகீ ப்ராஹ்மணம், ஸாங்க்யாயன ஆரண்யகம், கௌஷிதீகீ உபநிஷத் - இவை உள்ளன.

## அட்டவணை-IIல் சொல்லப்பட்ட ப்ராஹ்மணம் (2)

மந்த்ரங்களுக்கும், க்ரியைகளுக்கும் உள்ள சம்பந்தம், யாக விதிகள், யாகங்களைச் செய்யும் முறைகள், வேதாந்தக் கொள்கைகள், உதாரணக் கதைகள், நுட்பமான உபதேசங்கள், ப்ராயஸ்சித்தம், ஸ்தோத்ரங்கள், பரம்பரை பற்றிய கதைகள் இதில்

உள்ளன. யாகத்தை நடத்த, யாகத்தை நடத்தும் யஜமானனால் வரிக்கப்படும் "ரித்விக்குகள்" பற்றிய விவரம் உள்ளது. அவர்கள் 4 கணங்கள். அவையாவன:

1. ஹோத்ரு கணம் - ருக்வேத அதிகாரிகள் (ருக்வேத பாராயணம் செய்பவர்)
2. அத்வர்யு கணம் - யஜுர் வேதிகள் (யஜுர் வேத பாராயணம் செய்பவர்)
3. உத்காத்ரு கணம் - ஸாம வேதிகள் (ஸாம வேத பாராயணம் செய்பவர்)
4. ப்ரஹ்ம கணம் (யஜுர் வேதிகள்)

### அட்டவணை-IIல் சொல்லப்பட்ட ஆரண்யகம் (3)

வானப்பிரஸ்தர்கள், சன்யாஸிகள் - காட்டில் படிக்க வேண்டியவை இதில் உள்ளன. என்னென்ன யாகம் எப்படி எப்படி செய்தால் என்ன பலன் என்பன போன்ற விவரங்களும் உள்ளன.

### அட்டவணை-IIல் சொல்லப்பட்ட உபநிஷத் (4)

பகவானைப் பற்றிய தத்வங்களையும், பகவத் குண த்யானத்தையும் விவரிக்கிறது (ஸத்வித்யை, தஹர வித்யை, பூம வித்யை முதலியன). பகவானுடன் நெருங்கி இருப்பதால், அதாவது பகவானின் ஸ்வரூப, ரூப, குணம்:- இவற்றைத் தெரிவிப்பதால். "உபநிஷத்" என்றும் சொல்லப்படுகிறது. உபநிஷத்துகள் 108 என்று சொல்லப்பட்டிருந்தாலும், பத்து உபநிஷத்துகள் முக்கியமாக சொல்லப்படுகின்றன. இது "ஞானகாண்டம்" என்றும் சொல்லப்படுகிறது. பத்து உபநிஷத்துக்களின் விவரத்தை "உபநிஷத்துக்கள்" என்கிற தனியான தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.

பொது - யஜுர் வேதம் - க்ருஷ்ண யஜுர் சுக்ல யஜுர் என்று இரண்டு பிரிவு. க்ருஷ்ண யஜுர் வேதம் இரண்டு கிளைகள்.

ஒரு கிளை: தைத்திரீய ஸம்ஹிதை, ப்ராஹ்மணம், ஆரண்யகம், உபநிஷத்.

இன்னொரு கிளை:-கட ஸம்ஹிதை கடோபநிஷத், கபிஸ்தல கட ஸம்ஹிதை என்றும் ஒரு பிரிவு. மைத்ராயிணீ ஸம்ஹிதை, மைத்ராயிணீ உபநிஷத், ச்வேதாச்வதரோபநிஷத்து, என்று பிரிவுகள்.

சுக்ல யஜுர் - மாத்யந்தின பாடம், காண்வ பாடம் என்று இரண்டு பிரிவுகள். பாடத்தின் பெயரிலேயே ஸம்ஹிதைகள். உதாரணம் - மாத்யந்தின ஸம்ஹிதை, காண்வ ஸம்ஹிதை. ஈசாவாஸ்ய உபநிஷத்து. இரண்டு பாடங்களிலும் சதபத ப்ராஹ்மணம் உண்டு. ப்ருஹதாரண்யக உபநிஷத் இதில் உள்ளது.

## அட்டவணை-IIIல் சொல்லப்பட்ட வேதங்களின் சாகைகள்

### (1) ருக்வேத சாகை

21 சாகைகள் இருந்ததாகவும், தற்போது 6 சாகைகள் மட்டில் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அவையாவன:

1. சாகலம்
2. புஷ்கலம்
3. ஆச்வலாயனம்
4. சாங்காயனம்
5. ஐதரேயம்
6. மாண்டுகாயனம்

## அட்டவணை-IIIல் உள்ள க்ருஷ்ண யஜுர்வேத சாகை

101 சாகைகள் இருந்தென்றும், 86 மட்டும் இருந்ததென்றும், தற்போது 5 சாகைகளே உள்ளதென்றும் சொல்லப்படுகிறது. அவை:

1. சரகசாகை
2. காடக ஸம்உறிதை
3. கபிஷ்டல சாகை
4. மைத்ராயணி சாகை என்ற கலாப சாகை
5. தைத்திரிய சாகை

## அட்டவணை-IIIல் சொல்லப்பட்ட சுக்ல யஜுர் வேத சாகை

இதில் 17 சாகைகள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இப்போது இருப்பது 2 சாகைகள். அவை-

(1) வாஜசனேய ஸம்ஹிதை
 சதபத ப்ராஹ்மணம்
 ப்ரஹதாரண்ய உபநிஷத்
 காத்யாயன ச்ரௌத ஸூத்ரம்
 பாஸ்கர க்ருஹ்ய ஸூத்ரம்

(2) காண்வ சாகை

## அட்டவணை-IIIல் உள்ள ஸாம வேத சாகை

மூன்று சாகைகள் உள்ளன

(1) கௌதம சாகை
(2) ராணாயனீய சாகை
(3) ஜைமனீய சாகை

## அட்டவணை-IIIல் உள்ள அதர்வண வேத சாகை

இரண்டு சாகைகள் உள்ளன

(1) பிப்பலாத சாகை
(2) சௌனக சாகை

## அட்டவணை-IVல் உள்ள மந்த்ரபாகம்

ஒவ்வொரு வேதத்திலும், ஆசார்யன் சொல்ல, சிஷ்யன் திரும்பச் சொல்லும் பாகம். மனனம் செய்யும் மந்த்ரங்கள் ருக், யஜுர் ஸாம, அதர்வண என்கிற இந்த நான்கு வேதங்களிலும் உள்ளன.

## அட்டவணை-IVல் சொல்லப்பட்ட ப்ராஹ்மணபாகம்

ப்ராஹ்மண பாகத்தில், ஒவ்வொரு வேதத்திலும் உள்ள மந்த்ரங்களின் விவரம் பேசப்படுகிறது. யாகங்கள் எதற்காகச்

செய்யப்படுகின்றன, அவைகளின் பெருமை எவை என்பதும் சொல்லப்படுகிறது.

## அட்டவணை-IVல் ப்ராம்மணபாகத்தில் ருக் வேதத்தில் உள்ள (1) ஐதரேய ப்ராஹ்மணம்

இதில் 40 அத்யாயங்கள் உள்ளன. இதில் வேத காலப்பழக்க வழக்கங்கள், வேத கால நெறிமுறைகள் சொல்லப்பட்டுள்ளன. சுநச்சேபன் கதை இதில் உள்ளது. ஆச்வலாயன கல்ப ஸூத்ரம் இதில் உள்ளது. 12 அத்யாயங்கள் உள்ள "ச்ரௌதம்", 4 அத்யாயங்கள் உள்ள "க்ருஹ்ய ஸூத்ரம் " இதில் உள்ளது.

## அட்டவணை-IVல் ப்ராம்மண பாகத்தில் ருக்வேதத்தில் (2)கௌஷீதகப்ராம்மணம்

ஹவிர் யக்ஞம் - ஆறு அத்யாயங்கள் (1 முதல் 6 ), யாகத்துக்கான (யக்ஞம்) ஸாதனங்கள் - மூன்று அத்யாயங்கள் (7 முதல் 10) யாகத்துக்கான (யக்ஞங்கள்)மந்த்ரங்கள் 20 அத்யாயங்கள் (11 முதல் 30) (கௌஷீதக ஆரண்யகம் தனியாக உள்ளது. இது, அஜாதசத்ரு என்பவர் பாலகீ என்பவருக்குச் சொன்னவை.)

## அட்டவணை-IVல் ப்ராம்மண பாகத்தில் (3)க்ருஷ்ண யஜுர் வேதம்

இதில் 1) தைத்திரீய ப்ராம்மணம் தைத்திரீய ஆரண்யகம் தைத்திரீய உபநிஷத் உள்ளது. தைத்திரீய ப்ராம்மணம், பகவானின், எல்லாப் படைப்புகளையும் விவரிக்கிறது.

## அட்டவணை-IVல் ப்ராம்மண பாகத்தில் (4) சுக்ல யஜுர் வேதம்

இதில் "சதபதப்ராம்மணம்" உள்ளது. இது இரண்டு பாகங்களாக இருக்கிறது. யாகங்களைப் பற்றிய எல்லா விவரமும் இதில் சொல்லப்படுகிறது.

அட்டவணை-IVல் ப்ராம்மண பாகத்தில் (5)ஸாமவேதத்தில் உள்ளவை

இதில் 7 ப்ராம்மணங்கள் இருக்கின்றன. அவையாவன:

(1) பஞ்சவிம்ச ப்ராம்மணம் (ஸோம யாகம் செய்யப்படும் விதத்தை விவரிக்கிறது.

(2) சதவிம்சப்ராம்மணம் (க்ரஹங்களின் அமைப்பு, அவற்றின் விவரங்கள், நக்ஷத்ரங்கள், அவைகளின் விளக்கங்கள், முக்கியமாக வான சாஸ்த்ரம், பூகம்பம் பற்றிய விவரம் இதில் உள்ளன).

(3) சாமவிதான ப்ராம்மணம் (ஆகமங்களை விவரிக்கிறது. இந்த ஆகமங்கள் நவரத்னம், பஞ்சரத்னம், ரத்னத்ரயம் என்று வழங்கப்படுகிறது).

நவரத்னம்: 1) பாத்மம் 2)விஷ்ணு தந்த்ரம் 3)காபிஞ்சலம் 4) ப்ரம்ஹஸம்ஹிதை 5)மார்க்கண்டேய ஸம்ஹிதை 6)பரம ஸம்ஹிதை 7)பாரத்வாஜம் 8) நாராயண தந்த்ரம் 9) பாரமேஸ்வரம்

பஞ்சரத்னம்: 1) பாத்மம் 2) ஸநத்குமாரம் 3)பரமஸம்ஹிதை 4)பத்மோத்பவம் 5)மாஹேந்த்ரம் (பாத்மத்தில் - சர்யாபாதத்தில் இப்படி உள்ளன).

ரத்னத்ரயம்: 1) ஸாத்வதம் 2) பௌஷ்கரம் 3)ஜயாக்யம் (பகவானால் நேரிடையாக சொல்லப்பட்டதாக ஆசார்யர்கள் முடிவு)

(4) ஆர்ஷேயப்ராம்மணம் - ஸாமவேத அத்யாயிகளுக்கு முக்கியமானது. அதாவது ஸாமவேதம் சொல்லிக்கொள்ளும் சிஷ்யர்களுக்கு இது மிக முக்கியமானது

(5) வம்சப்ராம்மணம் - ஸாம வேத ஆசார்யர்களைப் பற்றி இது விவரிக்கிறது.

(6) தேவதாத்ய ப்ராம்மணம் - ஸாமவேதத்திலேயே இது முக்ய ப்ராம்மணம். ஸாமவேத கானம் பற்றிய எல்லா விவரமும் இதில் உள்ளது.

(7) தல்வகாரப்ராம்மணம் - இது சாந்தோக்ய உபநிஷத் என்றும் சொல்வர். சாந்தோக்ய உபநிஷத்தைப் பற்றி - உபநிஷத் என்கிற தலைப்பில் சொல்லப்பட்டுள்ளது.

அட்டவணை-IV-ல் ப்ராம்மண பாகத்தில் (6) அதர்வண வேதத்தில் கோபத ப்ராம்மணம் - மிக முக்யமான பகுதி. எல்லாப் படைப்பு ரகஸ்யங்களும் இதில் உள்ளன.

அட்டவணை-V-ல் வேதத்தில் உள்ள (a) வேதாங்கங்கள் என்கிற தலைப்பில் (1) ஸ்ம்ருதிகள் - இது மனதால் நினைத்தல் என்றும் சொல்லப்படும். உபப்ரும்ஹணங்கள் என்றும் சொல்வர். இதில் மனுஸ்ம்ருதி, பராசர ஸ்ம்ருதி, யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி என்று இப்படி பல ஸ்ம்ருதிகள் உள்ளன. இவையாவும் ஒழுக்க முறைகளையும் நீதிகளையும் விவரிக்கின்றன. ஸ்ம்ருதிகள் 18. வேத அர்த்தங்களை மனதால் ஸ்மரிப்பது. ஸ்ம்ருதிகள் செய்தவர்கள் ப்ருஹ்மா, விஷ்ணு, மனு, யமன், அங்கிரஸ், வசிஷ்டர், தக்ஷர், ஸம்வர்த்தர், பராசரர், ஆபஸ்தம்பர், காத்யாயனர், கௌதமர், சங்கர், விஜிதர், அத்ரி, ஹாரிதர், ப்ருஹஸ்பதி, சுக்ரன், வ்யாஸர், யாஜ்ஞவல்க்யர், போதாயனர்.

அட்டவணை-V வேதாங்கங்கள் (a)ல் உள்ள (2)இதிஹாஸங்கள்

"இதிஹாஸம்" என்றால் நடந்ததை நடந்தபடியே சொல்வது.

(1) ஸ்ரீமத்ராமாயணம் (ஸ்ரீவால்மீகி மஹரிஷியால் அருளப்பட்டது. ஏழு காண்டங்கள் 24000 ச்லோகங்கள். பகவான் ஸ்ரீமன் நாராயணன், ராமன் என்கிற திருப்பெயரில் மனுஷ்ய அவதாரம் செய்து மனுஷ்யன் எப்படி இருக்க வேண்டும் என்பதை வாழ்ந்து காட்டியது. ("சரணாகத சாஸ்த்ரம்" ஸ்ரீமத்ராமாயணம் என்றும்சொல்வர்)

(2) ஸ்ரீமஹாபாரதம் (ஸ்ரீவ்யாஸ மகரிஷி அருளியது) - 18 பர்வங்கள் ஒருலக்ஷம் ச்லோகங்கள். பாண்டவ, துர்யோதனாதியர்கள்-ஸ்ரீகிருஷ்ணன் அவதாரம், தர்மத்துக்கும், அதர்மத்துக்கும் நடந்த போர், ஸ்ரீமத்பகவத்கீதை அவதரித்தது. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் அவதரித்தது - இவையும் மற்ற பிறவும் உள்ளன.

## அட்டவணை –V வேதாங்கங்கள் (a)ல்(3) உள்ள புராணங்கள்

புராணங்கள் மொத்தம் 18. மும்மூர்த்திகளைப் பற்றிச் சொல்கிறது என்று சொல்வர். ஸாத்வீக, ராஜஸ, தாமஸ புராணங்கள் என்றும் இவற்றைப் பிரித்து சொல்வார்கள்.

1. விஷ்ணு புராணம்
2. நாரதீய புராணம்
3. பாகவத புராணம்
4. கருட புராணம்
5. பத்ம புராணம்
6. வராஹ புராணம்

ஸ்ரீமஹாவிஷ்ணுவைப் பற்றிச்சொல்லும் புராணங்கள் இவை என்றும், இவை ஸாத்வீக புராணங்கள் என்றும் சொல்வர்.

1. ப்ரஹ்மாண்ட புராணம்
2. ப்ரஹ்மவைவர்த்த புராணம்
3. மார்க்கண்டேய புராணம்
4. பவிஷ்ய புராணம்
5. வாமன புராணம்
6. ப்ரஹ்ம புராணம்

ப்ரஹ்மாவைப் பற்றிச் சொல்லும் புராணங்கள் இவை என்றும், இவை ராஜஸ புராணங்கள் என்றும் சொல்வர்.

1. மத்ஸ்ய புராணம்
2. கூர்ம புராணம்
3. லிங்க புராணம்
4. சிவ புராணம்

5. ஸ்கந்த புராணம்

6. அக்னி புராணம்

பரமேஸ்வரனைப் (சிவன்) பற்றிச் சொல்லும் புராணங்கள் என்றும் இவை தாமஸ புராணங்கள் என்றும் சொல்வர்.

## அட்டவணை - V(b) வேதாங்கங்கள் - ஆறு

வேதத்திற்கு - சிக்ஷா என்பது மூக்கு என்றும், வ்யாகரணம் என்பது வாய் என்றும், நிருக்தம் என்பது காது என்றும், ஜ்யோதிஷம் என்பது கண் என்றும், கல்பம் என்பது கைகள் என்றும் சொல்வர். ஆறு அங்கங்களுடன் கூடிய நான்கு வேதங்களுக்கு அனுகூலமான தர்க்கம் வேதத்தின் பொருளை ஆராய மீமாம்ஸம், இதிஹாஸம் , புராணம் என்று 14 துறைகள். 14 வித்யாஸ்தானங்கள் என்றும் சொல்வர். (ஆயுர்வேதம், அர்த்த சாஸ்த்ரம், தனுர் வேதம், காந்தர்வ வேதம் என்று சேர்த்து 18 வித்யாஸ்தானங்கள் என்றும் சொல்வர்).

1) சிக்ஷை - பாணினி, நாரதர் முதலியவர்களால் செய்யப்பட்டது என்று சொல்வர். 32 சிக்ஷைகள் கிடைத்துள்ளதாகவும், இதில் சப்தங்களின் அக்ஷரங்கள், மூன்று ஸ்வரங்கள், இவற்றைச் சரியாக உச்சரிக்கும் விதம் சொல்லப்பட்டுள்ளது என்றும் சொல்வர்.

2) வ்யாகரணம் - இது இலக்கணம். ஹனுமானை நவ வ்யாகரண பண்டிதன் என்று புகழ்வார்கள். வ்யாகரணம். ஸமஸ்க்ருத மொழிக்கும், வேதத்துக்கும் முக்யமானது

3) சந்தஸ் - வேத மந்திரங்களின் மாத்திரை. ˙ உச்சரிப்பு, உச்சரிக்கும்போது உள்ள ஏற்ற, இறக்கம் சந்தஸ் எனப்படுகிறது.

4) நிருக்தம் - வேதச்சொற்களைப் பிரிக்கும் விதம் இதில் சொல்லப்படுகிறது. அரிய பதங்களின் அர்த்தங்களும் நிகண்டுவும் இதில் உள்ளன. பாஸ்கர முனிவரால் செய்யப்பட்டது தற்போது வழக்கத்தில் உள்ளது.

5) ஜ்யோதிஷம் - இதற்கு விளக்கம் தேவையில்லை. வானஇயல் என கருதப்படுகிறது. வானசாஸ்த்ரமும் இதில் சொல்லப்படுகிறது. ஜ்யோதிஷத்துக்கு சம்பந்தப்பட்டது வானவியல். இதில் வைதீஹ கர்மாக்களை செய்ய வேண்டிய காலம், பலன் விசாரிக்கப்படுகிறது. சூர்யன், மற்றும் க்ரஹங்களைப் பற்றிய கணித சாஸ்த்ரம் உள்ளது.

6) கல்பம் - வேதங்களில் சொல்லும் கர்மாக்களை "கல்பம்" சொல்கிறது. காத்யாயனர், ஆச்வலாயனர், போதாயனர் - இவர்கள் அருளிய கல்பஸூத்ரங்கள் புகழ் பெற்றவை

அட்டவணை-VI – வேதத்திற்கு உபஅங்கமாக ஆறு ரிஷிகள் அருளிய நூல்கள் விவரம் இதில் கொடுக்கப்படுகிறது.

1. சாங்கியம் - ஸ்ரீகபில முனிவர் அருளியது. 25 தத்வங்கள் இதில் சொல்லப்படுகின்றன. பஞ்ச அங்க யோகத்தால், ஞானத்தை அடையலாம் என்றும் சொல்லப்படுகிறது.

2. யோகம் - ஸ்ரீபதஞ்சலி முனிவர் இயற்றியது.இவர் இருபத்து மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்ததாகச்சொல்வர் யோகஸூத்ரம் என்கிற நூலை இயற்றியிருக்கிறார் ஸம்ஸ்க்ருதத்திற்கு மஹாபாஷ்யம் என்கிற இலக்கணமும் இயற்றியிருக்கிறார் யோகத்தில்194 ஸூத்ரங்கள் உள்ளன. மனஸ், உடல், ஆத்மா இவைகளை யோகம் செய்து நெறிப்படுத்தி பகவானுக்கு அர்ப்பணிப்பதைப் பற்றிச் சொல்கிறது. இது "யோகஸித்தி" எனப்படுகிறது. யோகஸூத்ரத்தில் 185 பழமொழிகள் வாக்யங்களாக உள்ளன. இதில் நான்கு பிரிவுகள் உள்ளன அவை சமாதி, ஸாதனா, விபூதி, கைவல்யம் (மோக்ஷம்) எனப்படும்

3. மீமாம்ஸம் (பூர்வ மீமாம்ஸம்) - ஜைமினி முனிவர் அருளியது. 12 காண்டங்கள் 60 அத்யாயங்கள் வேதத்தில் உள்ள தத்வ விசாரணைகள் இதில் உள்ளன.

4. மீமாம்ஸம் (உத்தர மீமாம்ஸம்) - இது வேதாந்தம் எனப்படும். ஸ்ரீவியாஸ முனிவர் அருளியது. இது வேதங்களின் ஸாரம்.

இது "ப்ருஹ்ம ஸூத்ரம் " என்றும் சொல்லப்படும். 4 அத்யாயங்கள் உள்ளன. ஒவ்வொரு அத்யாயத்துக்கும் 4 பாதங்கள். 5,58,191 ஸூத்ரங்கள். ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் இதற்கு பாஷ்யம் (உரை) எழுதியுள்ளார். இது "சாரீரக மீமாம்ஸை" எனப்படுகிறது. பகவத்ஸ்ரீராமனுஜரின் உரை "ஸ்ரீபாஷ்யம்" எனப்படுகிறது. ஸ்ரீமத்வாச்சாரியாரும் உரை எழுதியிருக்கிறார்.

5. ந்யாயம் - வேதத்தில் சொல்லப்பட்டவைகளைக் கடைந்து அதிலிருந்து எடுக்கப்பட்டவை "ந்யாயம்" , 537 ஸூத்ரங்கள் உள்ளன. "ந்யாயத்தை" அறிய 16 வழிகளைச் சொல்கிறது

(1) ப்ரமாணம் (2) ப்ரமேயம் (3) ஸம்சயம் (4) ப்ரயோஜனம்
(5) உதாரணம் (6) சித்தாந்தம் (7) அவயவம் (8) தர்க்கம்
(9) நிர்ணயம் (10) வாதம் (11) ஜல்பம் (12) விதண்டாவாதம்
(13) ஹேத்வபாஸம் (14) தந்த்ரம் (15) ஜோதி
16) நிக்ரஹஸ்தானம்

6. வைசேஷிகம் - ஸ்ரீகணாத முனிவர் அருளியது. உலகில் உள்ள எல்லாப் பொருள்களின் குண ஆராய்ச்சி ஸம்பந்தமானது. இவை ஆறு 1) த்ரவியம் - இது 9 பிரிவு - அவையாவன - மண், ஜலம், தேஜஸ், வாயு, ஆகாயம், காலம், திசை, ஆத்மா, மனம் 2) குணம் - இது த்ரவியத்துடன் சேர்ந்தது. 24 பிரிவுகள் உள்ளன. அவை ரூபம் , ரஸம், கந்தம், பரிசம், சங்க்யை, பரிமாணம், பிரிதல், சம்யோகம், வியோகம், முன்னிலை, பின்னிலை, புத்தி,ஸூகம், துக்கம், த்வேஷம், முயற்சி குருத்வம், ஸ்நேஹம், சப்தம், வேகம், திரவத்வம், விருப்பு, வெறுப்பு, அடக்கம் - ஆக 24. 3) கர்மம் (வினை) 4) சாமான்யம் (த்ரவ்யம், குணம் கர்மத்திலே சேரும். இது உயர்வு, தாழ்வு என்று இரண்டு வகை) 5) விசேஷம் (கடைசியாக மீதமாகும் இரண்டு அணுக்களின் நிலை) 6) ஸமவாயம் (கர்த்தா, செயல், அணு, அண்டம் - இவற்றின் ஆராய்ச்சி) -

"ருக்" வேதத்திலிருந்து ஆயுர்வேதமும்
யஜூர் வேதத்திலிருந்து தனுர்வேதமும்
"ஸாம" வேதத்திலிருந்து கான வேதமும்

"அதர்வண" வேதத்திலிருந்து அர்த்த வேதமும் (அர்த்தசாஸ்த்ரம் - ஆட்சிக்கலை) தோன்றியது என்று சொல்வர்.

## அட்டவணை-VII வேதம் - ப்ரதிசாக்கியம்

இவற்றில் பொதுவாக வேத உச்சரிப்பு, சந்தி பிரித்தல், சேர்த்தல், பதம் பிரிப்பது, சேர்ப்பது, உதாத்தம், அனுதாத்தம் - இவற்றின் எண்ணிக்கை, ஸ்வர ஸம்பந்தமான ரஹஸ்யங்கள், ஸம்ஹிதைபாடம், பத ஸம்ஹிதை, நியமம், அதர்வ பிரதிசாகையில் க்ரமத்தின் ரகஸ்யம் ஸாம வேதபிரதிசாகையில் ப்ரச்லேஷம், விச்லேஷம் வ்ருத்தம், அவ்ருத்தம், கதம், அகதம், உச்சம், நீசம், க்ருஷ்டம், அக்ருஷ்டம், ஸம்க்ருஷ்டம் போன்ற உச்சாரணங்களில் பேதங்கள் விவரிக்கப்படுகின்றன.

## அட்டவணை-IIல் சொல்லப்பட்ட உபநிஷத்துக்கள்

மோக்ஷ உபாயத்தை சொல்வது உபநிஷத்துக்கள். கரண களேபரங்கள் என்று சொல்லப்படும் இந்த்ரியங்கள் சரீரம் இவை இல்லாதபோது ஜீவன் இவ்வுபாயங்களை அனுஷ்டிக்க இயலாது. கரண களேபரங்களைக் கொடுத்து போக்ய போகோபரணங்களையும் (அனுபவிக்கும் வஸ்துக்கள்) ஏற்படுத்தி பரஸ்பரம் சேர்க்கையை ஏற்படுத்தி அவைகளுக்கு அற்ப பலன்களைக் கொடுத்து அவையாவும் அழிபவை, அநித்யம் என்பதை உணர்த்தி அவற்றில் வெறுப்பை ஏற்படுத்தி பரமபுருஷார்த்தமான பகவானின் திருவடிகளை அடைய வழிகளை சொல்லுகிறான் பகவான். இந்த வழிகளைச் சொல்வதுதான் உபநிஷத்துக்கள். வேதங்களில் ஒரு பகுதி ப்ரமாணங்களுடன் சேர்த்து எழுதப்பட்டது (நாராயணண உபநிஷத் - தைத்திரீய உபநிஷத்தின் 4வது வல்லி. இது க்ருஷ்ண யஜுர் வேதத்தில் - தைத்திரீய ஆரண்யகத்தில் கடைசி பாகத்தில் உள்ளது)

அனுவாகம் - பத்தும் அதற்குக் குறைவான பஞ்சாதிகளைக் கொண்டது.

அனுவாகங்கள் சேர்ந்தது ப்ரச்னம் (அத்யாயம் என்றும் சொல்வர்) பல ப்ரச்னங்கள் சேர்ந்தது காண்டம். (நாராயண உபநிஷத்தில் - தூர்வா ஸூக்தம் (காத்யாயனி), ம்ருத்திகா ஸூக்தம், சத்ருஜய மந்த்ரம், அகமர்ஷண ஸூக்தம், துர்கா ஸூக்தம், வ்யாஹ்ருதி ஹோம மந்த்ரம் (ஓம்பூ:, ஓம்புவ:, ஓம்ஸுவ:) தஹர வித்யை, நாராயண ஸூக்தம், பரப்ரம்ம உபாஸனம் (ஸூர்ய மண்டலத்தில்) சிவோபாஸன மந்த்ரா:, பூதேவி மந்த்ரம், ஸந்த்யாவந்தன மந்த்ரங்கள், காயத்ரீ ஆவாஹன மந்த்ரம், உபஸ்தான மந்த்ரம், மேதாஸூக்தம், காமோகார்ஷித் மந்த்ரம், வைச்வ தேவ மந்த்ரம், ப்ராணாஹூதி மந்த்ரங்கள், பரதத்வ நிரூபணம், ஞானயஜ்ஞம் மற்றும் பல உள்ளன.

ஆகாசாத் வாயு: வாயோரக்னி

இதன் பொருள்:-

மக்களுக்கு அன்னம் ப்ரதானம். இது ஒரு மருந்து. பசிக்கு மருந்து. அன்னத்தை, மருந்தைச் சாப்பிடுவது போல் அளவோடு சாப்பிட வேண்டும். உணவினால் ஆன புற உடம்பைப்போல ப்ராண சக்தியால் ஆன உடம்பு உள்ளே உள்ளது. "ப்ராணன் " - அதன் தலை: "வ்யானன்" - வலது பக்கம், "அபானன்" - இடது பக்கம்: "புலன்கள்." ப்ராணனைத் தொடர்கின்றன. இவை தவிர மனத்தினால் ஆன உடம்பும் உள்ளே இருக்கிறது. "யஜுர் வேதம்" இதன் தலை. "ருக் வேதம்" வலது பக்கம். "ஸாம வேதம்" இடது பக்கம். "அதர்வண வேதம்" கீழ்ப்பகுதியாக ஆதாரமாக உள்ளது. இவை தவிர புத்தியால் ஆன உடம்பு உள்ளது. "ச்ரத்தை" இதன் தலை, "ரிதம்" வலது பக்கம், "சத்யம்" இடது பக்கம், "மஹத்" என்கிற சக்தி கீழ்ப்பகுதியில் ஆதாரமாக உள்ளது. இவை தவிர புத்தி , இது அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருக்கும். "புத்தி" - தேரோட்டி. "மனம்"-குதிரைகள். புத்தியின் ஆதாரம் "மஹத்". இது ஐந்து உடம்பையும் ப்ரபஞ்சத்துடன் இணைப்பது. மனத்தை விட புத்தி பெரியது. ஆத்மாவுக்கு அடிமையாக ஐந்து விதமான ஆத்மாக்கள் உடம்பில் இருக்கிறது. அவை:

(1) அன்னமய ஆத்மா (2) ப்ராணமய ஆத்மா (3) மனோமய ஆத்மா (4) விக்ஞானமய ஆத்மா (5) ஆனந்தமய ஆத்மா.

இவைகட்கு ஆதாரம் ப்ரம்மம். கந்தர்வர்கள் நுட்பமான சரீரம், அருமையான இந்த்ரீய சக்தி படைத்து ஆடல், பாடல்களில் வல்லவர்கள்.

முக்ய தேவர்கள் - அஷ்ட வசுக்கள், ஏகாதச ருத்ரர்கள், த்வாதச ஆதித்யர், இந்த்ரன், ப்ரஜாபதி, இந்த்ரன் (தேவராஜன்) ப்ருஹஸ்பதி (தேவகுரு) ப்ரஜாபதி (விராட் புருஷன்), ப்ரஹ்மா (ஹிரண்ய கர்ப்பன்) படைக்கும் கடவுள்.

இப்படி மிக முக்கியமானதாக உள்ள உபநிஷத்துக்களை, ஸ்ரீமத் பகவத் கீதை, ஸ்ரீப்ரஹ்ம ஸூத்ரம் இவைகளுடன் சேர்த்து "ப்ரஸ்தான த்ரயம்" என்று சொல்வர்.

இனி ஒவ்வொரு உபநிஷத்தாக மிகச் சுருக்கமாகப் பார்ப்போம்

## 1 - ஈசாவாஸ்ய உபநிஷத்

இது குரு, சிஷ்யனுக்கு உபதேசம் செய்வதைப் போல அமைந்துள்ளது. 18 மந்த்ரங்கள் இந்த உபநிஷத்தில் இருக்கின்றன. இதன் சுருக்கம் -



குரு, சிஷ்யனுக்கு உபதேசம்

பகவான் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறான். வெளிப்புறக் காட்சிகளைக் கண்டு மயங்காமல், உள்ளே இருக்கும் பகவானை த்யானம் செய்வதில் வைராக்யம் இருக்க வேண்டும். அதே சமயம், கர்மாக்களையும் செய்தல் வேண்டும். எல்லாவற்றிலும் வ்யாபித்து, எல்லாவற்றையும் நியமித்து, எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக பகவான் இருக்கிறான். ஆதலால் எல்லாமே பகவானுக்குச் சரீரம். எல்லாக் கல்யாண குணங்களும் நிறைந்தவன் பகவான். பகவானை அடைய தனியான கர்மமோ, தனியான ஞானமோ போதாது. ஸத்கர்மாக்களைச் செய்து கொண்டே இருந்து, வினைகளைப் போக்கிக் கொண்டு, நல்ல ஞானம் வரப்பெற்று மோக்ஷம் அடைய வேண்டும். இதற்கு பக்தி அல்லது ப்ரபத்தி வழி. இதில் 18 மந்த்ரங்கள் உள்ளன. இந்த 18 மந்த்ரங்களின் விசேஷத்தை விவரிப்பதுதான் ஸ்ரீமத் பகவத் கீதையின் 18 அத்யாயங்கள். ஈசன் வாஸம் பண்ணுகிற விஷயத்தைச் சொல்வதால் "ஈசாவாஸ்யம்" எனப்பட்டது.

## 2 - கேநோபநிஷத்து

இது சிஷ்யன் கேள்வி கேட்கும் ரூபமாய் அமைந்துள்ளது.

சிஷ்யன் - மனது தன் இஷ்டப்படி சஞ்சரிக்கிறது. இப்படியே கண், காது, வாக்கு தம்தம் கார்யங்களைச் செய்கிறது. இது யாருடைய கட்டளையால்?

ஆசார்யன் - ப்ராணனுக்கும் ப்ராணனாய், நீ சொன்ன எல்லாவற்றிற்கும் சக்தியை அளித்து, பகவான் இயக்குகிறான். அவன் அனுக்ரஹத்தாலே ஒவ்வொரு அவயவமும், வேலை செய்கிறது. எவ்வளவு தெளிவாக பகவானின் செயலை நீ அறிய முயன்றாலும், ஒரு "திவலை" அளவுதான் தெரிந்து கொண்டவன் ஆவாய். பகவானை நான் நன்கு அறியேன் என்று வணக்கத்துடன் சொல்பவனே, பகவானை அறிந்தவன் ஆவான். தேவர்களேகூட பகவானை முழுமையாக அறிந்தவரில்லை. இதற்கு ஒரு உபாக்யானம் (கதை) உள்ளது.

பகவான் தன்னுடைய பக்தர்களான தேவர்கள் மீதுள்ள அன்பினால் அஸுராதிகளை ஜெயிக்கிறான். ஆனால் தேவர்கள், தாங்களே அஸுராதிகளை ஜெயிப்பதாக கர்வம் கொண்டனர். இந்தக் கர்வத்தை அழிக்க, பகவான் திருவுள்ளம் கொண்டான். உடனே பரப்ரம்மம் (பகவான்) யக்ஷ ரூபமெடுத்து அவர்கள் எதிரில் நின்றது. அவர்களுக்கு இது யாரென்று தெரியவில்லை. தேவர்கள், அக்னி தேவனைப் பார்த்து இந்த "யக்ஷன்" யாரென்று தெரிந்து கொண்டு வா என்றார்கள், அக்னி தேவன் யக்ஷனிடம் வந்தான். யக்ஷன் நீர் யாரென்று கேட்க அக்னிதேவன் தன் பெருமை எல்லாவற்றையும் சொன்னான். உன்னுடைய வீர்யம் எப்படிப்பட்டது என்று யக்ஷன் கேட்க எல்லாவற்றையும் ஒரு நொடியில் எரித்து விடுவேன் என்று அக்னி தேவன் சொன்னான். பரப்ரம்மம் ஒரு புல்லை எடுத்து எதிரில் வைத்து அக்னியைப் பார்த்து இதை எரித்து விடு என்றது. அக்னி, வெகு துரிதமாகவும், முழு ஆற்றலோடும் முயன்றும் அந்தப் புல்லை எரிக்க முடியவில்லை. இவன் யாரென்று தெரியவில்லை என்று அக்னிதேவன் திரும்பி விட்டான். தேவர்கள் வாயு தேவனை யக்ஷனிடம் அனுப்பினார்கள். யக்ஷன், உன் பலம் எப்படிப்பட்டது

என்று கேட்க, வாயுதேவன், நான் எல்லாவற்றையும் என் ஆற்றலால் தூக்கி எறிந்து விடுவேன் என்றான். பரப்ரம்மம் இந்தப் புல்லை எடுத்துச் செல் என்றது. வாயுதேவன் தன்னுடைய சக்தியை எல்லாம் ப்ரயோகித்தும் புல்லை அசைக்க முடியவில்லை. வாயுதேவனும் திரும்பி விட்டான். இவர்கள் இருவரும் பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் என்ற மூன்று உலகங்களுக்கும் ப்ரதான தேவதைகள் இவர்களால் முடியவில்லை. மூன்றாவது ப்ரதான தேவதையான இந்த்ரனை தேவர்கள் அனுப்பினார்கள். இப்போது பரப்ரம்மம் மறைந்து விட்டது. இந்திரன் திகைத்து நின்றான். அச்சமயம் ஆகாயத்தில் ஸர்வாபரண பூஷிதையாய் ஒரு ஸ்த்ரீ தோன்றினாள். அவள் பார்வதி தேவி. இந்த்ரன் அவளிடம் , "யார் அந்த யக்ஷன்?" என்று கேட்டான். "இந்திரனே! அது யக்ஷனல்ல! பரப்ரம்மம். பரப்ரம்மத்தின் அனுக்ரஹம் இல்லாவிடில் உங்களால் ஒரு அணுவைக் கூட அகற்ற முடியாது. உங்கள் கர்வத்தை விட்டு பரப்ரம்மத்தின் பெருமையை உணருங்கள்! என்று பார்வதி சொன்னாள். இந்திரன், இந்த உண்மையை எல்லாத் தேவர்களுக்கும் எடுத்துச்சொல்லி கர்வத்தை ஒழித்தான். பரப்ரம்மம் அனந்த கல்யாண குணங்களை உடையது. வேத, வேதாங்கங்களை அத்யயனம் செய்து, ஸத்யஸந்தர்களாக இருப்பவர்களுக்கு ப்ரஹ்மஜ்ஞானம் கூடி வரும். நல்ல ஒழுக்கம், இந்த்ரியநிக்ரஹம், தபஸ் உள்ளவர்களுக்கு, ப்ரம்மவித்யை நிலையாக நிற்கும். இந்த வித்யையைப் பெற்றவர்கள், பகவான் வீற்றிருக்கும் உலகிற்குச்சென்று உயர்ந்த புருஷார்த்தத்தை அடைவர் என்று சொன்னார். இதில் நான்கு காண்டம். "கேந" என்கிற சொல்லைக்கொண்டு தொடங்குவதால் இது "கேநோபநிஷத்து" எனப்பட்டது.



பரப்ரம்மம் (NamperumAL - SrIrangam)
Thanks: SrI Murali BhaTTar

## 3 - கடோபநிஷத்து

இது க்ருஷ்ண யஜுர் வேதத்தில் உள்ளது. "கடசாகை"யைச் சேர்ந்த உபநிஷத். "கடா" என்பவரைச் சார்ந்த சாகை கடசாகை. இதில் நசிகேதஸ் உபாக்யானம் உள்ளது. இது தைத்திரீய ப்ராம்மணத்திலும் (3-11-8) உள்ளது. மஹாபாரதத்தில் உள்ளது சிறிது வேறுபடும். இந்த உபநிஷத்தில் "வல்லி" என்கிற பிரிவுகள் ஆறு உள்ளன. மும்மூன்றாக இரண்டுஅத்யாயங்கள் உள்ளன.

வாஜச்ரவஸர் (கௌதமர் என்றும் சொல்வர்) என்கிற மஹரிஷி தன் சொத்துக்களை எல்லாம் தக்ஷிணையாக கொடுத்து ஒரு யாகம் செய்தார். மிகவும் வயது முதிர்ந்த பசுக்களைத் தானம் செய்ய முற்பட்டபோது இவர் குமாரரான நசி கேதஸ், தந்தை இப்படித் தானம் செய்வதால் (ஒன்றும் உபயோகப்படாத பசுக்களை) இருள் சூழ்ந்த உலகில் அல்லவோ வசிக்க நேரிடும் என்கிற தர்ம சாஸ்த்ரத்தை உணர்ந்து அதற்காக வருந்தி தந்தையிடம் தன்னையே தானம் செய்யும்படி ஒரு தரத்துக்கு மூன்று தரம் வேண்டினான். தந்தைக்குக் கோபம் வந்து "உன்னை யமனுக்குத் தானம் பண்ணுகிறேன்" என்று சொன்னார். நசிகேதஸ் தந்தையின் வாக்கைச் சத்யமாக்க யமலோகம் செல்லப் புறப்பட்டான். வாஜச்ரவஸர் வருத்தம் மேலிட்டு, யமன் தன்னுடைய க்ருஹத்தில் இல்லாத சமயமாக பார்த்து நசிகேதஸ் என்கிற குமாரனை யமலோகத்துக்குச் செல்ல அனுமதித்தார். அப்படியே யமனுடைய உலகத்தில் அவனுடைய க்ருஹத்துக்குச் சென்ற நசிகேதஸ், யமன் க்ருஹத்தில் இல்லாததால், அவன் வீட்டிற்கு திரும்பும் வரை வீட்டு வாசலிலேயே காத்திருந்தான். மூன்று நாட்கள் அன்ன, ஆகாரமின்றி பட்டினியுடன் காத்திருந்தான் யமன் வந்ததும் அதிதியான ப்ராம்மணச் சிறுவன் பட்டினியுடன் இருப்பதை அறிந்து அதற்கு பிராயச்சித்தமாக மூன்று வரங்களை கொடுப்பதாகவும், வரங்களை கேட்க வேண்டும் என்றும், நசிகேதஸைக் கேட்டுக் கொண்டான்.

நசி கேதஸ் கேட்ட முதல் வரம் - தன்னுடைய தந்தை துயரம் நீங்கி தன்னை அனுக்ரஹிக்க வேண்டும் என்றும், 2வது வரமாக வயோதிகம், மரணம் இவை இல்லாத ஸ்வர்க்கமான மோக்ஷத்தை

அடைய, அக்னி விஷயமாக ஹோமத்தைச் செய்யும் விதத்தைச் சொல்ல வேண்டும் என்று கேட்டான்.

இந்த இரண்டு வரங்களும் யமனால் அருளப்பட்டன. மூன்றாவது வரமாக இறந்தவனுடைய உண்மை நிலையை, ஆத்ம தத்துவத்தைச் சொல்லுமாறு கேட்டான். யமன் இந்த விவரத்தை உடனே சொல்லாமல் பலவிதங்களில் நசிகேதஸ்ஸை, பரீக்ஷை செய்துவிட்டு பிறகு சொன்னான்.

"ஜீவாத்மா" பிறப்பு, இறப்பு அற்றவன். உடல் அழியுமே தவிர ஜீவாத்மா அழியாது. ஜீவாத்மா, பரமாத்மா இருவரும் ஹ்ருதயத்தில் இருக்கின்றனர். ஜீவாத்மாவுக்கு உடம்பு-ஒரு ரதம். புத்தி - ஸாரதி. மனது - கடிவாளம். புலன்கள் - குதிரைகள். விஷயங்கள் - அவற்றின் புலங்கள். இவற்றைக் கொண்டு ஜீவன், சுகதுக்கங்களை அனுபவிக்கிறான். அறிவுள்ளவன் இவற்றை தக்கவாறு பயன்படுத்தி பகவானை அடைகிறான். பரமாத்மாவை அடைவதே "ச்ரேயஸ்".



"ஹ்ருதயத்தில் பகவானை உபாஸிக்க வேண்டும்"
(Malayappa Swamy - Thanks: SrI Ramakrishna Deekshitulu archakam)

ஹ்ருதயத்தில் பகவானை உபாஸிக்க வேண்டும். வேர் மேலாகவும், கிளைகள் கீழாகவும், உள்ள இந்த ஸம்ஸாரம் என்கிற மரத்தில், எல்லாம் பகவானின் இஷ்டப்படி நடக்கிறது. கண்ணால் காணமுடியாத பகவானை மனத்தினால் காண, யோகத்தில் நிலை பெற வேண்டும். பலவகை நாடிகளும் தலையில் உள்ள "ஸுஷும்நா" நாடி வழியாகச்செல்ல அப்போது ஜீவனும் சென்று பகவானின் இருப்பிடம் சென்று விளங்குவான். பகவானை உபாஸித்து அவனுக்கு அடிமையாக பரமபதத்தில் ஸௌகானுபவம் பெற்று வாழ்வான் என்று யமன் சொல்லி முடித்தான். கடோபநிஷத்தில் மிக விவரமாக இது சொல்லப்படுகிறது.

## 4 - பிரச்னோபநிஷத்து

இதில் 6 ப்ரச்னங்கள். "ப்ரச்னம்" என்றால் கேள்வி. ஒவ்வொரு ப்ரச்னமும் ஒரு மஹரிஷியின் கேள்வியாக அமைந்து அதற்கான பதிலை விளக்குகிறது. ஸுகேசர், சைப்யர், ஸௌர்யாயணி, கௌஸல்யர், பார்க்கவர், கபந்தி என்று ஆறு ரிஷிகளும், பிப்பலாத மஹரிஷியை அணுகி, ஒரு வருட காலம் தபஸ், ப்ரம்மச்சர்யம், ச்ரத்தை இவைகளுடன் இருந்து மஹரிஷியிடம் கேள்விகள் கேட்டுத் தெளிவு பெறுகின்றனர். ஒவ்வொரு ரிஷியின் கேள்வியும், மஹரிஷியின் பதிலும் சுருக்கமாகத் தரப்படுகிறது.

முதலில் கபந்தி - ப்ரஜைகள் எங்கிருந்து பிறக்கின்றன?

பிப்பலாதர் - ப்ரஜாபதியானவர், ப்ரஜைகளை ச்ருஷ்டிக்க எண்ணி, "ரயி", "ப்ராணன்" என்ற இரண்டையும் ச்ருஷ்டித்தார். "ப்ராணன்" என்பது ஜீவஸமஷ்டி. "ரயி" என்பது அதற்கு உடலாக இருக்கின்ற ப்ரக்ருதி. ஸ்ருஷ்டிக்கும் பகவானே, ஸம்வத்ஸரம், மாஸம், நாள் என்று காலரூபமாக இருக்கிறான். தக்ஷிணாயனத்தின் வாயிலாக சில ப்ரஜைகள் சந்திரலோகம் (ஸ்வர்க்கம்) சென்று பலனை அனுபவித்து திரும்புகின்றனர் (மறுபடியும் பிறவி) இவர்கள் கர்மானுஷ்டானத்திலேயே நோக்கம் உள்ளவர்கள். வித்யையை அனுஷ்டித்து ஆத்மாவை அறிந்தவர் உத்தராயணம் வாயிலாக சூர்ய மண்டலம் சென்று மறுபடியும் திரும்பமாட்டார்கள். த்ரிகரண சுத்தியும், தபஸ்ஸும், ப்ரஹ்மசர்யமும் உள்ளவர்களுக்கு ப்ரக்ருதி மண்டலத்துக்கு மேலேயுள்ளது ப்ரஹ்மலோகம்.

2 - பார்க்கவர் கேட்பது - ப்ரஜைகளின் உடம்பைத் தாங்குபவர் எவர்? ப்ரகாசப்படுத்துகிறவர் எவர்? இவர்களில் யார் சிறந்தவர்?

பிப்பலாதர் பதில் - பஞ்சபூதங்களும், இந்திரியங்களும் உடம்பைத் தாங்குகின்றன. இதில் ப்ராணவாயு சிறந்தது. இதை நிரூபித்தும் ப்ராண வாயு மற்ற இந்த்ரியங்களுக்கு உணர்த்தியது. வாக்கு, கண், மனசு, காது போன்றவை. ப்ராணனைப் பலவாறு புகழ்ந்தன. (இந்த ஸ்தோத்ரம் இங்கு விவரமாகச்

சொல்லப்பட்டுள்ளது. தவிரவும் 12 ப்ராண வித்யை என்கிற தலைப்பில் உள்ளவற்றையும் பார்க்க).

3 - கௌசல்யரின் கேள்வி - இந்த ப்ராணவாயு எங்கிருந்து பிறக்கிறது? எப்படி உடலில் வந்து சேருகிறது? எவ்வாறு தன்னைப் பிரித்துக் கொள்கிறது? எந்த வழியாக வெளியே கிளம்புகிறது? உடலுக்கு உள்ளேயும், வெளியேயும் எப்படி இருந்து வருகிறது?

பிப்பலாதர் பதில் - பரமாத்மாவிடமிருந்து (பகவான்) ப்ராண வாயு பிறக்கிறது. ஒவ்வொருவர் உருவத்திற்கும் நிழல் இருப்பதைப் போல, ஜீவனின் உடலில் சேர்ந்து( ப்ரவேசித்து) மனசும் மற்ற இந்த்ரியங்களும் பிரியாதபடி இருக்கிறது. முகபாவத்தில் இருக்கிறது. ஹ்ருதயத்தில் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. கீழ் இந்த்ரிய ஸ்தானத்தில் "அபானன்" என்கிற பெயரிலும், ஹ்ருதய நாடித்துடிப்பில் "வ்யானன்" என்கிற பெயரிலும், பாப புண்ய பலன் பெறும் நாடியில் - "உதானன்" என்கிற பெயரிலும், வயிற்றில் அக்னியாக "ஸமானன்" என்கிற பெயரிலும், ப்ராண வாயு வசிக்கிறது.

கீழ்இந்த்ரிய ஸ்தானம் - அபானன் - சூர்யன்

வயிற்றில் - ஸமானன் - பூமி

ஹ்ருதயத்தில் வ்யானன் - ஆகாயம்

புண்ய, பாப நாடித்துடிப்பில் - உதானன் - வாயு

முக்ய ப்ராணன் - தேஜஸ்
இப்படி பஞ்சபூதங்களுக்கு சம்பந்தப்படுத்துவர்.

(அதனால்தான் ஆகாரம் உட்கொள்ளும் முன்பாக ப்ராணாஹுதி என்று ப்ராணாயஸ்வாஹா, அபாநாயஸ்வாஹா, வ்யாநாயஸ்வாஹா, உதானாயஸ்வாஹா, ஸமாநாயஸ்வாஹா, ப்ரம்ஹ்மணேஸ்வாஹா... என்று துளி சாதம் எடுத்துக் கொண்டு

பல்லில் படாமல் ஒவ்வொரு மந்த்ரத்தையும் சொல்லி சாப்பிடுகிறோம்).

4. ஸௌர்யாயணி முனிவர் - தூங்கும்போது உடலில் எவை வேலை செய்கின்றன? எவை வேலை செய்யாமல் உள்ளன? ஸ்வப்னம் காண்பது எப்படி? எதற்கு சுகம் உண்டாகிறது? எல்லாம் எங்கே தங்கி நிற்கின்றன?

பிப்பலாதர் - உறங்கும்போது எல்லா இந்த்ரியங்களும் மனத்தில் லயிக்கின்றன. அப்போது ப்ராண, அபான, வாயுக்கள் வேலை செய்கின்றன. அப்போது ப்ராணன் (ஜீவன் என்று பொருள் கொள்க), மனசை உடலிலேயே பரப்ரம்மம் உள்ள இடத்திற்கு கொண்டு செல்கிறது. அப்போது வழியில் கண்டது, கேட்டது, எப்போதோ அனுபவித்தது, அனுபவிக்காதது, இருப்பது, இல்லாதது எல்லாம் ஸ்வப்னத்தில் - ஸ்வப்ன அனுபவத்தில் வருகிறது. தேஜஸ் (பராமாத்மா)ஸினால் தாக்கம் ஏற்பட்டு ஸ்வப்னமும் போய் சுகத்தை ஜீவன் அனுபவிக்கிறது. எல்லாம் இப்படி தன்னிடத்தில் லயித்து இருக்கும்போது ஜீவன், பரமாத்மாவிடம் தங்கி நிற்கிறான். இப்படி உபாசிப்பவன் எல்லாவற்றையும் அறிந்தவன் ஆவான்.

5 - சைப்யரின் கேள்வி - ப்ரணவத்தை சாகும்வரை உபாஸிப்பவன் பெறும் உலகம் எது?

பிப்பலாதர் பதில் - ஒற்றை மாத்ரை உள்ள ப்ரணவத்தை உபாஸிப்பவன் தபஸ், ப்ரஹ்மச்சரியம், ஆஸ்திக்யம், என்ற செல்வங்களுடன் உயர்ந்ததை அனுபவிப்பான். இரண்டு மாத்திரை உள்ள ப்ரணவத்தை உபாஸிப்பவன் ஸ்வர்க்க லோகம் வரை (சந்திர லோகம்) சென்று நல்ல அனுபவங்களை அனுபவித்து திரும்புவான். மூன்று மாத்ரை கொண்ட ப்ரணவத்தினாலே, பரமான ப்ரஹ்மத்தை உபாசிப்பவன், எல்லா பாபமும் போய் பயத்தையும் போக்குகின்ற பரமபுருஷனை கண்ணாலே காண்பான்.

6 - ஸுகேசர் கேள்வி - ஷோடசகல புருஷன் யார்? எங்கு உள்ளான்?

பிப்பலாதர் பதில் - பதினாறு கலைகளுக்கு புருஷன் இந்த உடலிலேயே இருக்கிறான். சிந்தனை செய்து ப்ராணன், ச்ரத்தை, 5 பூதங்கள், இந்த்ரியம், மழை, அன்னம், வீர்யம், தபஸ், மந்த்ரம், கர்மம், பலன், பேர் என்கிற பதினாறையும் அமைத்துக் கொண்டால் இந்த ஜீவனுக்கும் மேலானவன் ப்ரம்மம் - பரமாத்மா என்று அறிவான். 16 கலைகளும் ஜீவனிடம் அடங்கியுள்ளன. இப்படி அறிந்தவனுக்கு ம்ருத்யு பயம் இல்லை. பொதுவாக ப்ராண வாயு முகஸ்தானம் என்றும், இதுவே கீழ் இந்திரீய ஸ்தானத்தில் அபான வாயு (அபானன்), வயிற்றில் அக்னி இருக்குமிடத்தில் ஸமானன், ஆத்மாவின் இருப்பிடமான ஹ்ருதயத்தில் ஆயிரக்கணக்கான நாடிகளில் வ்யானன், புண்யத்தினால் பெறப்படும் புண்ய லோகம், பாவத்தின் பலனாக பெறப்படும் பாப லோகம், இரு வினைகளின் பயனாக மனித உலகத்தையும் பெற வழியாக உள்ள நாடிகளில் உதானன் என்றும் ப்ராண வாயு தன்னை பிரித்துக் கொண்டு இயங்குவதாக சொல்லப்படுகிறது.

## 5 - முண் டகோபநிஷத்து

ப்ரஹ்மா, எல்லா வித்யைகளுக்கும் ஆதாரமான "ப்ரஹ்ம வித்யை"யை, தன் மூத்த குமாரரான அதர்வர் என்பவருக்கு உபதேசித்தார். இந்த வித்யை அங்கீர், பாரத்வாஜர், ஸத்யவாஹர் வழியாக "அங்கிரஸூக்கு" வந்தது. சௌநகர் என்கிற ரிஷி அங்கிரஸை அணுகி "எதை அறிந்தால் எல்லாவற்றையும் அறிந்ததாகும்?" என கேட்டார். அதற்குரிய விளக்கம் தான் முண்டகோபநிஷத்து.

பரை, அபரை என்கிற இரண்டு வித்யைகளை அறிய வேண்டும். அபரை என்பது வேதங்களும் அவற்றின் அங்கங்கள் உபாங்கங்கள். இவற்றை அர்த்தத்துடன் அத்யயனம் செய்து அடையப்படும் தெளிவான ப்ரஹ்ம ஞானமே அபர வித்யை (உலக வாழ்க்கைக்கு பயன்படும் பலவகையான கல்விகளைச் சொல்வது என்றும் சொல்லப்படுகிறது).

"பரை" - என்பது அழிவே இல்லாத பரப்ரஹ்மத்தைப் பெற வழியாக உள்ள ஸாக்ஷாத்காரம். இது ஜ்ஞானிகளுக்கு உரியது. ப்ரஹ்மத்திற்கு உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்றால், தன் த்ரேகத்திலிருந்து நூல் உண்டாக்கி அதனால் கூடு ஒன்று செய்து அதில் இருக்கும் "ஊர்ணநாபி" என்கிற சிலந்திப் பூச்சியே. நித்ய கர்மாக்களை விடாமல் செய்தால் ப்ரஹ்ம லோகம் வரையிலுள்ள பலன்கள் எல்லாம் கர்மம் செய்வதாலேயே வந்து சேரும். பரமபுருஷன் - பகவான் என்று அறிந்து அனுஷ்டானபரர்களாக இருப்பவர்கள் ஸூர்ய மண்டலம் வழியாக பகவானின் உலகத்தை அடைவர். காம்யங்களை விட்டு, நித்ய கர்மாக்களை விடாமல் செய்து வேத வேதாந்த ஞானமுள்ள குருவை அடைந்து அவர் மூலம் ப்ரஹ்மத்தை அறிய வேண்டும்.

ப்ரணவம் என்கிற வில்லில் ஜீவாத்மா என்கிற அம்பை உபாஸனையால் கூர்மையாக்கி வில்லில் தொடுத்து, ப்ரஹ்மம் என்ற இலக்கில் எய்ய வேண்டும். இதுதான் மோக்ஷத்திற்கு உபாயம். இப்படிப்பட்ட மோக்ஷ ராஜ்யத்திற்கு உரியவனான பகவான் ஹ்ருதயத்திலும் இருக்கிறான். இதை அறிந்தவன் த்வேஷம், வினைகள் எதுவும் இல்லாதவனாக ஆகிறான்.

உடல் ஒரு வ்ருக்ஷம். இதில் இரண்டு பக்ஷிகள் உள்ளன. ஒன்று வ்ருக்ஷத்தில் உள்ள பழங்களை சாப்பிடுகிறது. இன்னொரு பக்ஷி எதுவும் சாப்பிடாமல் ஒளியுடன் உள்ளது. கர்மானுஷ்டானன் ப்ரஹ்ம வித்தை செய்யத் தகுந்தவன். ப்ரஹ்ம வித்தையை அனுசரிப்பவனை ஆராதிப்பவனுக்கு ஸர்வ லோகமும் பயன்.

ஸ்ரீபாஷ்யத்தில் சொல்லப்பட்ட விவேகம், விமோகம், அப்யாஸம், க்ரியை, கல்யாணம், அனவஸாதம், அனுத்தர்ஷம் ஆகிய ஏழும் வேண்டும்.

1) விவேகம் - சாஸ்த்ர சம்பந்தமான சுத்தமான ஆஹாரத்தை எடுத்துக் கொண்டு வாழ்தல்.

2) விமோகம் - பற்றற்று இருப்பது.

3) அப்யாஸம் -பக்திக்கு இலக்கான பகவானையே சிந்தனை செய்வது.

4) க்ரியை - வைதீக கர்மானுஷ்டானம்.

5) கல்யாணம்- சத்யம், முக்கரணங்களுடன் (மனோ, வாக்கு, காயம்) ஒத்திருப்பது. தயை - நன்கொடை, அஹிம்சை - பிறருக்கு துன்பம் நினைக்காமை என்பன.

6) அனவஸாதம் - சோர்வில்லாமல் இருப்பது.

7) அனுத்தர்ஷம் - அதிக மகிழ்ச்சிக்கு ஆளாகாமல் இருத்தல். பக்தி யோகம் செய்ய இவை எல்லாமும் வேண்டும். இதனால் பகவானை அடையலாம்.

இந்த உபநிஷத் மூன்று பிரிவாக உள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு கண்டங்கள்.

பொது - வேதமும் உபநிஷத்தும் கங்கை. பாஞ்சராத்ர நூல் - யமுனை. ஆழ்வார் அருளிச் செயல்கள் - சரஸ்வதி நதியைப்

போல. ஆக விசிஷ்டாத்வைதம் த்ரிவேணி வைஷ்ணவம் எனப்படுகிறது.

## 6 - மாண்டூக்யோபநிஷத்து

ஆறு கண்டங்கள். இது ப்ரணவத்தில் உள்ள அக்ஷரங்களைப் பிரித்துச் செய்யப்படும் உபாஸநத்தைப பற்றிச் சொல்கிறது. இந்த அக்ஷரங்களை வைச்வாநரன், தைஜஸன், ப்ராஜ்ஞன் - என்றிப்படி உபாஸிக்க வேண்டும். ஜீவனுக்கு விழிப்பு, ஸ்வப்நம், உறக்கம், மோக்ஷம் என்று நான்கு நிலைகள் உள்ளன. ஒவ்வொரு நிலைக்கும் ஒரு மூர்த்தி. இம்மூர்த்தி ஸ்ருஷ்டி, ஸ்திதி, வ்யாபாரங்களுக்குக் காரணன். சாந்தமாக இருப்பது நான்காவது மூர்த்தி. அதுவே ஆத்மா. வைச்வாநரன் - அநிருத்தனையும், தைஜஸன் - ப்ரத்யும்நனையும், ப்ராஜ்ஞன் - ஸங்கர்ஷணனையும், துரீயன் - வாஸுதேவனையும் குறிக்கும். (உபநிஷத் பாஷ்யகாரர், ப்ரஹ்மஸூத்ரத்தில் உபயலிங்க அதிகரணத்தில் விவரம் உள்ளது).

| ஜீவனின் நிலை | மூர்த்தி | வ்யூஹம் | குணங்கள் |
|---|---|---|---|
| விழிப்பு | வைச்வாநரன் (ஜாக்ரந் மூர்த்தி) | அநிருத்தன் | சக்தி,தேஜஸ் - ரக்ஷணம் - அறிவு |
| ஸ்வப்னம் | தைஜஸன் (ஸ்வப்னமூர்த்தி) | ப்ருத்யும்னன் | ஐச்வர்யம், வீர்யம், ஸ்ருஷ்டி, தர்மம் |
| உறக்கம் | ப்ராஜ்ஞன் (ஸுஷுப்த மூர்த்தி) | ஸங்கர்ஷணன் | க்ஞானம், பலம் ஸம்ஹாரம் சாஸ்த்ரப்ரசாரம் |
| மோக்ஷம் | வாசுதேவன் (மூர்ச்சாமூர்த்தி) | வாஸுதேவன் **** | |

****முதல் வ்யூஹம் - வாஸுதேவன் என்றும், மொத்தம் நான்கு வ்யூஹங்கள் என்றும் சொல்வர். மூலவாஸுதேவனை - பரவாஸுதேவன் என்றும், இந்த முதல் வ்யூஹ வாஸுதேவனை வ்யூஹ வாஸுதேவன் என்றும் சொல்வர். வ்யூஹ வாஸுதேவன் எல்லாவற்றிற்கும் பொது.

விழித்திருப்பவன் - எல்லாவற்றையும் செய்கிறான். ஸ்வப்னத்தில் உடலின் செயல் இல்லை. ஜீவன் செய்யும் த்யானத்திலும் நான்கு நிலை:

1) வெளிவிஷயங்களிலே ஈடுபட்டுக் கொண்டே பகவானை சிந்தித்தல் - ஜாக்ரத் த்யானம்

2) வெளி விஷயங்கள் இல்லாமல், மனஸ் மட்டும் வெளிவிஷயங்களில் பற்றைவிடாமல்------பகவத்சிந்தனை -----ஸ்வப்ந த்யானம்

3) வெளிவாஸனையோடுமட்டும் கலப்புண்ட சிந்தனை------ ஸுஷுப்தி த்யானம்

4) எல்லாமும் விலக பகவத் த்யானம் மட்டுமே இருப்பது---- மூர்ச்சா த்யானம்

பகவானின் லீலா விபூதியில் (உலகங்களையெல்லாம், ஜீவன்களை எல்லாம் படைத்துக் காத்து அழிக்கும் விளையாட்டில்) ஸ்ருஷ்டி, ஸ்திதி ஸம்ஹாரங்களில் வாஸுதேவ மூர்த்தியிடமிருந்து ஸங்கர்ஷன மூர்த்தி, அதனின்று ப்ரத்யும்ன மூர்த்தி, அதனின்று அநிருத்த மூர்த்தி தோன்றுகிறது. ஸங்கர்ஷணன் - ஜீவதத்துவத்திற்கு அபிமானி. ப்ரத்யும்னன் - மனஸ்ஸுக்கு அபிமானி. அநிருத்தன் அஹங்காரத்திற்கு அபிமானி. மோக்ஷ ஆசையுள்ளவர்கள் முதலில் அநிருத்தன், பிறகு ப்ரத்யும்னன், பிறகு ஸங்கர்ஷணன் அதன் பிறகு வாஸுதேவ உபாஸனம் செய்ய வேண்டும்.

ப்ரணவத்திற்கு வ்யூஹ மூர்த்தி விஷயமாக விவரித்துச் சொல்லப்படுகிறது. அதர்வ வேதத்தைச் சேர்ந்த பிப்பலாத சாகையில் உள்ள ப்ரச்னோபநிஷத்து, முண்டக சாகையில் உள்ள முண்டகோபநிஷத்து, மண்டூக சாகையில் உள்ள மாண்டூக்ய உபநிஷத்து இவை பிரஸித்தி பெற்றவை.

பொது: ஆத்மாவின் பதங்கள் நான்கு. வைச்வாநரன், தைஜஸன், ப்ராஜ்ஞன், துரீயன். ஜீவனுடைய நான்கு அவஸ்தைகள் விழிப்பு, ஸ்வப்னம், ஸுஷுப்தி மோக்ஷம். இந்த நான்கு அவஸ்தைகளை

(நிலைகளை) நிர்வஹிப்பது நான்கு மூர்த்திகள் என்று சொல்லப்படுகிறது.

## 7. தைத்திரீயோபநிஷத்து

கிருஷ்ண யஜுர்வேதம் - தைத்திரீய சாகை - ஆரண்யகத்தில் ஐந்தாவது, ஆறாவது ப்ரச்னம் என்பதாக தைத்திரீயோபநிஷத்து உள்ளது.

ஐந்தாவது (முதல் ப்ரச்னம்) - சீக்ஷாவல்லி, ஆனந்த வல்லி என்கிற ப்ரஹ்ம வல்லி, ப்ருகு வல்லி என்று மூன்று பிரிவுகள்.

ஐந்தாவது, ஆறாவது ப்ரச்னங்கள், ஸாம்ஹீதி உபநிஷத், வாருணீ உபநிஷத் , யாஜ்ஞிகீ உபநிஷத் என்றும் மூன்றாக பிரிப்பர். சீக்ஷாவல்லிக்கு ஸாம்ஹிதீ உபநிஷத் என்றும், ஆனந்த வல்லியும், ப்ருகுவல்லியும் - ஆனந்தமயமான ப்ரஹ்ம வித்தையைச் சொல்வதால் ஸைஷா, பார்கவீ, வாருணீ வித்யா என்று சொல்லப்பட்டதற்கு இணங்க வாருணீ உபநிஷத் என்றும் நாராயண உபநிஷத் - யாஜ்ஞகீ உபநிஷத் என்றும் சொல்லப்படுகிறது .

வேதாங்கங்களில் கூறப்படும் சிக்ஷையைச் சொல்வதால், சீக்ஷாவல்லி என்றும், ஆநந்தமய வித்யையைச் சொல்வதால் ஆனந்த வல்லி என்றும், "ப்ரஹ்மவித் ஆப்நோதிபரம்....." என்ற ப்ரஹ்மசப்தத் தொடக்கத்தாலே "ப்ரஹ்மவல்லி" என்றும் சொல்வர். இது வாருணீ உபநிஷத்தின் முன் பகுதி. பின் பகுதியானது ப்ருகுவுக்கு அவர் பிதாவான வருணன் உபதேசித்தது ப்ருகுவல்லி.

யக்ஞன் என்கிற நாராயணன் என்கிற மஹரிஷியால் ஸாக்ஷாத்கரிக்கப்பட்டிருப்பதால், "யாஜ்ஞகீ" என்றும், நாராயண உபநிஷத் என்றும் சொல்வர். நாராயணாநுவாகம் நடுநாயகமாக இதில் உள்ளது. பகவான் நாராயணனையும், அவனை ஆராதிக்கும் முறையையும் சொல்கிறது. இது முக்யமானது.

### சீக்ஷாவல்லி

வேதத்திற்கு அங்கமானவை ஆறு. அவற்றில் ஒன்று சிக்ஷை. இதில் வர்ணம், ஸ்வரம், ஹ்ரஸ்வதீர்க்காதி மாத்ரை. உச்சரிப்புக்கு

வேண்டிய ப்ரயத்ன பலம் (வலிமை) ஸாமஸம்ஹிதை எனப்படும் ஸந்தானம் - இவைகள் இதில் உள்ளன. ஸம்ஹிதை என்பது இணைப்பு, இணைப்பதற்கு இரண்டு வேண்டும். பூர்வ ரூபம், உத்தர ரூபம், ஸந்தி, ஸந்தானம் என்ற நான்கு வஸ்துக்களில் லோகம், ஜோதி, வித்யா, ப்ரஜை, சாரீரம் இவை ஸம்பந்தமாகச் சொல்லி இவற்றைச் சொல்பவருக்கு மக்கள், பசுக்கள், வேதார்த்தஜ்ஞானம், அன்னம், ஸ்வர்க்கம் போன்ற பலன்கள் சொல்லப்பட்டது. ப்ரணவத்தைச் சொல்லி, அதனால் அறிவு, ஆரோக்யம், பேசும் ஆற்றல், காதுக்கு வன்மை வேண்டப்பட்டது. பூ:, புவ:, ஸுவ: என்ற மூன்று வ்யாஹ்ருதிகள். அத்துடன் "மஹ" சேர்த்து நான்கு உபாஸனங்கள் சொல்லப்பட்டது. உபாஸன பலனாக, பகவானைத் தியானித்து ஹ்ருதய நாடி மூலம் சிரசில் கபாலத்தை பிளந்து அக்னிலோகம், வாயுலோகம், சூர்ய லோகம் இவற்றில் தங்கி ப்ரஹ்மத்திடம் சேர்ந்து பேரானந்தத்தை அனுபவிப்பது சொல்லப்பட்டது. பிறகு பங்க்தி, ஐந்து ஐந்தாக சொல்லப்பட்டது. துர்க்குணங்களை ஒழித்து ஸத்வ குணத்தை வளர்த்து தபஸ் செய்தல் - "ந்யாஸம்" என்கிற தபஸ் சொல்லப்பட்டது. முக்யமாக வேதரஹஸ்யம் சொல்லப்பட்டது.

## ஆநந்தவல்லி

பகவானிடமிருந்து பஞ்சபூதங்களும் ஓஷதிகளும், அன்னமும், அன்னத்தின் மூலம் உடலும் பிறக்கின்றன. எல்லாரும் அன்னத்தால் போஷிக்கப்படுகிறார்கள். அன்னம் உயர்ந்தது. அன்னமய உடலில், ப்ராணமய ஆத்மா. இதற்கு ப்ராணன் தலை; வ்யானன் வலப்பக்கம்; அபானன் இடப்பக்கம்; வாயு நடுவுடல்; பூமி ஆதாரம்; ப்ராணனே ப்ரஹ்மம்.

இதற்கு மேல் மனோமயம். யஜுர்வேத சிந்தனம் தலை; ருக்வேத சிந்தனம் வலப்பக்கம்; ஸாமவேத சிந்தனம் இடப்பக்கம்; ஆசார்யர்களின் ஆக்ஞை நடுவுடல்; அதர்வ வேத சிந்தனம் ஆதாரம். இப்படி உபாஸிப்பதால் மனதிற்கு எட்டாத பேரானந்தம் கிடைக்கும். இதற்கு மேல் விஞ்ஞானமயம். ஜீவன் இதற்கு (அறிவுகள் சக்தி - அவயவங்கள். ச்ரத்தை. அநித்ய வஸ்துவின் அநுபவம், நித்ய வஸ்துவின் அநுபவம். யோகம், சக்தி -

அவயவங்கள்) இப்படி உபாஸித்தால் உடலிலிருந்து வெளியே வரும்போது எல்லா பாபங்களையும் போக்கி எல்லாவற்றையும் அடையலாம்.

இதற்கு மேல் ஆனந்தமயம். ப்ரியம் - தலை; மோதம் - வலப்பக்கம்; ப்ரமோதம் - இடப்பக்கம் ; ஆனந்தம் - நடுவுடல் ; ப்ரஹ்மம் - ஆதாரம். சிறந்த ஸுகஅனுபவம். இதை இப்படி உபாஸிப்பவன் பெறும் ஆனந்தம் அளவிட இயலாதது .

மானுஷ ஆனந்தம் - நல்ல ஆரோக்யத்துடன், யுவாவாய் இருக்கும்போது சிஷ்யர்களுக்கு நன்கு உபதேசித்துச் செல்வத்துடன் இருக்கும்போது பெறும் ஆனந்தம்.

இதைப் போல் நூறு மடங்கு - மனுஷ்ய கந்தர்வர்களின் ஆனந்தம். தேவகந்தர்வர்கள், பித்ருக்கள், தேவலோக வாசிகள், இந்த்ரன், ப்ருஹஸ்பதி, ப்ரஹ்மா வரை ஆனந்தத்தை நூறு நூறாகப் பெருக்கி சதுர்முகாநந்தம் நூறு கொண்டது, பரப்ரஹ்மத்தின் ஆனந்தம் என்று சொல்கிறது. இவ்வளவாக மோக்ஷம் அடைந்து, பரப்ரஹ்மத்தை அடைவது சொல்லப்படுகிறது.

## ப்ருகுவல்லீ

வருணர் - தன் குமாரனான ப்ருகுவுக்கு சொன்னது.

ப்ரஹ்மம் என்பது அன்னம், ப்ராணன், கண், மூக்கு, மனஸ், வாக்கு, பிறகு ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம் இப்படி உபாஸிப்பது - இதுதான் ப்ரஹ்மம் என்றார். கடைசியில் பிதாவின் உபதேசப்படி தபஸ் செய்து ஆனந்தமயமே ப்ரஹ்மம் என்று ப்ருகு தெளிந்தான். இதில் "விசிஷ்டாத்வைத"ப்படி மோக்ஷம் விளக்கப்படுகிறது (இது இங்கு விரிக்கின் பெருகும்).

## இரண்டாம் ப்ரச்னம் - நாராயணோபநிஷத்து

திருப்பாற்கடலிலும், சூர்ய மண்டலத்திலும், பரமபதத்திலும் உள்ளவன். ஸர்வந்தர்யாமி. எல்லாவற்றையும் படைத்து, காத்து, அழிப்பவன். எல்லாவற்றிலும் ஆராதிக்கப்படுபவன் என்று பலவாறாக துதிக்கிறது நாராயணோபநிஷத்து.



திருப்பாற்கடலிலும், சூர்ய மண்டலத்திலும், பரமபதத்திலும் உள்ள ஸர்வந்தர்யாமி

(Malayappa Swamy - Thanks: SrI Ramakrishna Deekshitulu archakam)

இதில் அக்னி, ருத்ரன், விநாயகர், கருடன், துர்க்கை, நாராயணன் இவர்களைப் பற்றிய மந்த்ரங்கள் உள்ளன. அகமர்ஷன ஸூக்தம் - ஸ்நானம் செய்யும் முறை, அபிகமன காலம் வரை செய்பவை சொல்லப்படுகின்றன. ப்ரம்மோபாஸனம் சொல்லப்படுகிறது. மதுஸூக்தம் க்ருதஸூக்தம் உள்ளது. ஸாத்விக த்யாகம் சொல்லப்படுகிறது. தஹர வித்யை, மோக்ஷ வித்யை, பர வித்யைகளாலே உபாசிக்கப்படுபவன் என்கிறது. ஸூர்ய மண்டலத்திலே பகவானை உபாசிக்கும் விதம் சொல்லப்படுகிறது. உபாதான கால விவரம், ஆராதனம் இவைகள் கோடி காட்டுகிறது. ஹிரண்ய கர்ப்ப ஸூக்தம், மேதா ஸூக்தம்,

த்ரிஸுபர்ண ப்ரஹ்ம ஸூக்தம் இதில் உள்ளன. ஸன்யாஸ, ஹோம மந்த்ரங்கள் சொல்லப்படுகின்றன. ஸத்யம், தபஸ், தமம், சமம், தானம், தர்மம், பிரஜநனம், அக்னி, அக்னிஹோத்ரம், யஜ்ஞம், மாநஸம் இவைகளைச் சொல்லி கடைசியாக "ந்யாஸத்தை"ச் சொல்கிறது. இதுவே ப்ரபத்தி. ப்ரபத்தி செய்து கொள்பவன் மீண்டும் பிறப்பதில்லை. ப்ரணவத்தைக் கொண்டு ஜீவனை பகவானிடம் சமர்ப்பிக்கும் தேவ ரஹஸ்யம் என்பது சொல்லப்படுகிறது. தைத்திரியோபநிஷத்தில் உள்ள "மஹா நாராயணோபநிஷத்து" பர தத்துவத்தைச் சொல்கிறது.

பொது - இதற்கு இரண்டு ப்ரச்னங்கள். முதல் ப்ரச்னத்தில் சீக்ஷாவல்லி, ப்ருகுவல்லி, ஆனந்தவல்லி. இரண்டாவது ப்ரச்னத்தில் யாஜ்ஞிகி உபநிஷத்.

## தைத்திரியோபநிஷத்

இது மூன்றாக உள்ளது.

(1) ஸாம்ஹிதி உபநிஷத் (சீக்ஷாவல்லி),
(2) வாருணி உபநிஷத் (ப்ருஹ்ம வல்லி, ஆனந்த வல்லி)
(3) யாஜ்ஞிகி உபநிஷத் (ப்ருகுவல்லி)

பரவித்யாவின் அங்கம் - பூர், புவஸ், ஸுவ: என்கிற வ்யாஹ்ருதி த்ரயம் (பூர், புவ:, ஸுவ: - மூன்று) நாலாவது வ்யாஹ்ருதி - மஹ: நாலாவது வ்யாஹ்ருதி - முதல் மூன்று வ்யாஹ்ருதிக்கு சரீரம். இந்த சரீரத்திற்கு ஆத்மா பரப்ருஹ்மம். இதற்கு "வ்யாஹ்ருத் உபாசனை" என்று பெயர். இதைச் செய்பவனுக்கு "ப்ரஹ்ம வித்யை" ஸித்திக்கிறது.

| உபாஸனா | பூ | புவ: | ஸுவ: | மஹ: |
|---|---|---|---|---|
| 1. லோகோபாஸனா | உலகம் | அந்தரிக்ஷம் | ஸ்வர்க்கம் | ஆதித்யன் |
| 2. தேவதோபாஸனா | அக்னி | வாயு | ஆதித்யன் | சந்த்ரன் |
| 3. வேதோபாஸனா | ருக் | ஸாமம் | யஜுர் | ப்ரஹ்ம (ப்ரணவம்) |
| 4. ப்ராணோபஸனா | ப்ராணன் | அபானன் | வ்யானன் | அன்னம் |

இப்படி ப்ரஹ்ம வித்யை ஸித்திக்கும் உபாஸகன் தனது ஹ்ருதயாகாசத்தில் உள்ள அழகிய, அழிவற்ற ஒரு புருஷனை உபாசித்து வாயினுள், அடி நாக்கின் மேலே தாலுகை எனப்படும். நடுவில், பசுவின் காம்பு போல் தொங்கும் ஒருவகை மாமிச பிண்டத்தின் உள் வழியாகச் சென்று, தலையின் ரோம வேர்களை அடைந்து, பின் மண்டையோட்டை விலக்கிக் கொண்டுச் செல்லும் ஸூஷூம்னா என்கிற நாடியின் வழியாக அக்னி, வாயு, மற்றும் ஆதித்ய லோகங்களை அடைந்து, ப்ரஹ்மத்தை அடைந்து, கர்ம பந்தஹீனன் ஆகையாலே அப்ராக்ருத சரீர இந்த்ரியங்களை தன் விருப்பப்படி பெற்று, நித்ய ஸூரிகள் அனுபவிக்கும் எல்லையில்லா பேரானந்தத்தை அனுபவிக்கிறான்.

## தைத்திரீய நாராயண உபநிஷத்

இப்போது நடப்பது, ஶ்வேதவராஹ கல்பம். இது முடிந்ததும் நைமித்திஹ ப்ரளயம். அப்போது ஸூர்ய மண்டலம் நாசம். ஒரு வஸ்துவை அறிய வேண்டிய ஜ்ஞானம் - தர்ம பூத ஜ்ஞானம் எனப்படும். நித்ய முக்தர்களுக்கு இது அளவில்லாதது. பாபத்தை போக்கக்கூடிய வருணனுக்கு "அகமர்ஷணன்" என்று பெயர். அகமர்ஷண ஸூக்தம் என்றால் எல்லா பாபங்களையும் போக்குவதற்காக ஜபிக்கப்படும் மந்த்ரம் என்று அர்த்தம்.

## பரமாத்மாவிடமிருந்து உண்டான வஸ்துக்கள்.

(1) ஏழு இந்த்ரியங்கள் (மனஸ், புத்தி, ஐந்து ஜ்ஞானேந்த்ரியங்களான கண், காது, மூக்கு, தோல், நாக்கு)

(2) ஏழு அக்னிகள் - ஆவஹனீயம், கார்ஹ பத்யம், தக்ஷிணாக்னி, ஸப்ய, ஆவஸத்ய, ப்ராஜஹித, அக்னிர்த்ராஹா::

(3) ஏழு ஸமித்துக்கள் (மரங்கள் - அச்வத்த, உதும்பல, பலாச, ஸமீ, விகங்கத, அசனீ, புஷ்கரபர்ன)

(4) **அக்னிக்கு ஏழு நாக்குகள்** (காயீ, கராலீ, மனோஜவ, சுநீசுதா, சுதாம்பரவர்ணா, ஸ்ப்ரிலிங்கிணீ, விஸ்வரூபி)

(5) **ஏழு லோகங்கள்** - பூலோக, புவர், ஸுவர், மஹர், ஜனோ, தபோ, ஸத்ய லோகம்

**நாராயண உபநிஷத்தில்**

64வது மந்த்ரம் - ஜ்ஞானத்தைப் பெற, ஜபிக்கப்பட வேண்டும்.

65வது மந்த்ரம் - கெட்ட கனவுகள், பயத்தைப் போக்க ஜபிக்கப்படவேண்டும்.

66வது மந்த்ரம் - மதுஸூக்தம் (அமாவாஸ்யை, ச்ராத்த காலங்களில் சொல்லப்படுகிறது)

## 8. ஐதரேயோபநிஷத்து

இது "ருக்" வேதத்தைச் சேர்ந்தது. "ஐதரேயர்" என்கிற மஹரிஷி தவம் புரிந்து கண்ட ப்ராஹ்மணம். ஐதரேய ஆரண்யகமும் உள்ளது. (ஐந்து ஆரண்யகங்கள் - இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆரண்யகத்திற்கு ஐதரேயோபநிஷத்து என்று பெயர்).

ப்ராணன் சிறந்தது. இது உடலை விட்டு கிளம்பினால் எல்லா அவயவங்களும் செயல்படாது. ஸத்யம் - இதை "ஸத்" , "தி", "யம்" என்று மூன்றாகப் பிரித்தால் "ப்ராணன்", "அன்னம்", "ஆதித்யன்" என்று பொருள்படும். வாக்கு - இதில் அடங்கிய சந்தஸ்ஸுகளுக்கு, ப்ருஹதி சந்தஸ் என்பது ப்ராணன்.

தண்ணீரால் ப்ராணனுக்கு புஷ்டி ஏற்படுகிறது. விஸ்வாமித்ரர், இந்திரனிடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இந்த்ரன் சொன்னதாவது:- நான் ப்ராணன், எல்லா பூதங்களும் ப்ராணனே, ஆதித்யன் ப்ராணனே. எனக்கு அன்னம் இதுவே. இது வைச்வாமித்ரம் ஆகும். (கௌஷீதகி உபநிஷத்தில் ப்ரதர்தந வித்யை முதலியவற்றில் உள்ளது). மரம், செடி இவற்றில் ஆத்மா சிறிது விரிந்திருக்கும். பிராணிகளிடத்தில் கொஞ்சம் அதிகம். மனித உடலில் இந்த விரிவு அதிகம். (ஜீவாத்மா) மனித உடலில் வாயு ஐந்து விதமாக இருக்கிறது. இவைகளுக்கு கட்டுப்பட்டது கண், காது, மூக்கு,மனம், சொல் (வாக்கு). வாக்கினால் செய்யப்படும் யஜ்ஞும் ஐந்து விதம் (ஸோம யாகமும் சேர்த்து) உக்தி (அல்லது) உக்த்தம் மிக முக்கியமானது. நிஷ்கேவல்யம் என்பது உக்த்த சாஸ்த்ரம். இது ஒரு விதமான மந்த்ர பாடம். பல த்ருஷ்டி விதிகள் இதில் சொல்லப்படுகின்றன (த்ருஷ்டி என்பது, ஒன்றை மற்றொன்றாகப் பாவிப்பது) ப்ருஹதீயை (ஆயிரமாக) பாவித்து, இந்த்ரனாக பாவித்து, அதனால் இந்த்ர லோகத்தை அடையலாம். மீண்டும் பிறப்பு உண்டு. ஆதித்ய, அக்னியின் (இரண்டின்) அம்சங்கள் சுக்ல சோணிதங்கள். இவை ஒன்று சேர்வதால் ஆத்மா இவ்வுலகை அடைகிறது. ஆத்மாவுக்கு ஆண், பெண் என்கிற வித்யாஸம் இல்லை. மனுஷ்ய ஆயுள் நூறு வயது. அதாவது முப்பதாயிரம் நாட்கள்தான். (நூறு என்பதை 365ல் பெருக்காதீர்கள். மொத்தத்தில் நூறு வயது; நூறு வருஷம்

அல்ல) ப்ருஹதிசந்தஸ் ஆயிரம் என்று சொன்னதைப் போல, இந்த எண்ணிக்கையும் முடிவடையும் போது, தேவ ரதத்தில் (ஐந்து உரு) சென்று பரமாத்மாவை அடையலாம். ஐந்து உரு என்பது - 1) வாக்கு - ரதத்தின் ஏர்க்கால், 2) காதுகள் - சக்கரங்கள், 3) கண்கள் - குதிரைகள், 4) மனம் - தேர் பாகன் அல்லது கடிவாளம், 5) ப்ராணன் - முதலாளி (ஆத்மா)

## இதில் (ஐதரேயோபநிஷத்தில்) ஆத்ம ஷட்கம்

உலகெல்லாம் ச்ருஷ்டிப்பதற்கு முன்பு ஆத்மா ஒன்றே. (அதாவது பரமாத்மா; பரமபுருஷன்) இது ஸங்கல்பித்துக் கொண்டு ச்ருஷ்டி செய்யத் தொடங்கியது. அம்பஸ் (ஸ்வர்க்கம்), மரீசி (அந்தரிக்ஷ லோகம்), மரம் (பூலோகம்), அப்பு (பாதாளம்). லோக பாலர்கள் இவைகளை முதலில் ச்ருஷ்டித்தது. பிறகு ஜலத்தினின்று ஒரு புருஷ வடிவத்தை உண்டாக்கியது. இதற்கு அண்டம் போல் வாய் இருந்தது. வாக்கு, மூக்கு, கண், காது இந்த்ரியங்களையும் அவைகளுக்கான தேவதைகளையும் பிறகு ஹ்ருதயம், ப்ராணன், மனஸ், சந்த்ரன், நாபி, அபானம், ம்ருத்யு தேவதை, ஆண் குறி, வீர்யேந்த்ரியம், இப்படி உண்டாக்கப்பட்டது. இவைகளுக்கு பசி,தாகத்தை பரமாத்மா உண்டாக்கியது. அவைகள் "நாங்கள் வசிப்பது எங்கே?" என்று கேட்க, பரமாத்மா முதலில் பசுவைக் கொடுத்தது. பிறகு குதிரையைக் கொடுத்தது. மனித உடலை உண்டாக்கி கொடுத்தது. பசி, தாகம் இரண்டும் எங்கள் இடம் எது என்று மறுபடியும் கேட்க "ஹவிஸின்" பாகம் என்று பரமாத்மா சொல்லிற்று.

பிறகு ஜலத்திலிருந்து அன்னத்தை உண்டாக்கியது. வாய், அபானம் என்கிற வாயுவினாலே அன்னத்தை உண்ண தெரிந்து கொண்டது. ப்ராணன் என்கிற ஜீவாத்மா ஸீமா என்கிற தலையின் உச்சியைப் பிளந்து கொண்டு உள்ளே புகுந்தது. இது "வித்ருதி" எனப்படும். இந்த ஜீவாத்மாவுக்கு விழிப்பு (ஜாக்ரம்) சொப்பனம் (ஸ்வப்னம்) ஸுஷுப்தி (தூக்கம்) என்கிற மூன்று நிலைகள் உண்டு. இவை யாவும் அழியக் கூடியது. எங்கும் ப்ரம்மம் (பரமாத்மா) வ்யாபித்துள்ளது.

ஜீவாத்மா, முதலில் புருஷனிடத்தில் வீர்யமாக இருக்கிறது. புருஷன் வீர்யத்தை ஒன்று சேர்த்து ஸ்திரீயிடத்தில் சேர்த்தவுடன், இது ஜீவாத்மாவிற்கு முதல் பிறப்பு. பிறகு எப்போதும் போலப் பிறப்பது இரண்டாவது பிறப்பு. ஆயுள் முடிந்து, மரித்து, மறுபடியும் பிறக்கிறான். இது மூன்றாவது பிறப்பு. இப்படி எண்ண இயலாத பிறப்புகள், இறப்புகள், சங்கிலித் தொடர் போல ஜீவாத்மாவுக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வாமதேவர் என்கிற மஹரிஷி, கர்ப்பத்தில் இருக்கும்போதே முன்ஜன்மங்களையெல்லாம் அறிந்து, பிறந்தவுடனேயே கர்ம பந்தத்திலிருந்து விடுபட்டு பரமபதம் சேர்ந்தார், என்று சொல்வர். இது எல்லோராலும், ரிஷிகளால் கூட இயலாத செயல்.

பரமாத்மா சர்வ சேஷி. ப்ரஹ்மா, இந்த்ரன், ப்ரஜாபதி எல்லா தேவதைகள், பஞ்ச பூதங்கள், யோநிஜங்கள், அயோநிஜங்கள், முட்டையில் பிறப்பன, கர்ப்பத்தில் பிறப்பன, புழுக்கத்தில் பிறப்பன, பூமியை பிளந்து பிறப்பன, பறக்கும் பிராணிகள், நீர் வாழ்வன என்று இப்படி ஜீவராசிகள் எல்லாமும், பரமாத்மாவின் ஆக்ஞைக்கு உட்பட்டு, அவனுக்கு சேஷனாக இருப்பவை.

மனித உடலில் எலும்புகள் 360. அவற்றில் கொழுப்பு 360 ஆக 720. ஒரு வருடத்தில் பகல் 360, இரவு 360 ஆக 720. உடல் என்கிற குடிசையில் எல்லா மூங்கில்களுக்கும் ஆதாரமான நடு மூங்கில் போல, கண், காது, மூக்கு இவற்றிற்கு ஆதாரமான ப்ராணனை நாளுக்கு சமமாக பாவித்து பாவனை செய்தால் ஆயுள் முதலிய பலன் கிடைக்கிறது.

அக்ஷரங்களை 360, 360 என்று இரண்டு பாகமாக ஆக்கி, அவற்றின் சேர்க்கையை 360ஆக ஆக்குங்கள் (எப்படி என்று யோசியுங்கள்). பகல், இரவு, சந்தி இவை முறையே 360 , 360, 360, ஆக மொத்தம் 1080 ஆகும். இப்படி ப்ருஹதி 1080 ஆகிறபடி, இதை எலும்பு, கொழுப்பு 540, 540 ஆக பிரித்து மறுபடியும் கூட்டி "1080" என்று சொல்லி, பாவனை செய்யும் விதமும் அதன் பலனும் சொல்லப்படுகிறது.

சரீர புருஷனுக்கு, ரஸம், ப்ரஜ்ஞாத்மா. ஸந்தஸ் புருஷனுக்கு, ரஸம், அகாரம். வேதங்கள் மூன்றுக்கு, ரஸம் பிரமன். மஹா

புருஷன் என்பது ஸம்வத்ஸரம். இதன் ரஸம் ஆதித்யன். ஸரீர ரசமான ப்ரஜ்ஞாத்மாவையும் மஹா புருஷனான ஆதித்யனையும் ஒன்றாக பாவனை செய்வது சொல்லப்படுகிறது. பரமாத்மா, தன் ஆத்மாவின் அந்தராத்மா என்று தெளிய வேண்டும் என்று ஒரு மந்த்ரம் சொல்கிறது. (அதாவது ஜீவாத்மாவுக்கும் ஆத்மா). சரீரத்தை வீணைக்கு ஒப்பிட்டு இதை நன்கு தெளிந்தவன், பார் புகழும் வண்ணம் இருப்பான் என்பது சொல்லப்படுகிறது. ஸம்ஹிதையில் "ண"காரம் பலம், "ஷ"காரம் ப்ராணன். பரமாத்மாவே எல்லாமும் என்று இந்த உபநிஷத்து சொல்கிறது.

## 9 - சாந்த்யோக்யோபநிஷத்

இது ஸாம வேதத்தைச் சேர்ந்தது. இது "தாண்டி" சாகையின் கடைசி பாகம். வேதவ்யாஸர் ப்ரம்மஸூத்ரத்திற்கு எடுத்துக் கொண்ட உபநிஷத்துக்களில் இதுவே அதிகமாக எடுத்தாளப்பட்டுள்ளது.

ஸாம வேதத்தைச் சேர்ந்ததாகையால், உத்கீதத்தைப் பற்றி இது (இந்த உபநிஷத்) சொல்கிறது. ப்ரணவத்தை முதலில் சொல்லி, பலவாறு உபாஸனங்களைச் சொல்லி, உத்கீத பதம், ஸாம பதம், ஸாம பொது, அதன் அம்சங்கள், உட் பிரிவுகள் இவைகளில் உபாஸனம் செய்வதைச் சொல்லி, ஐஷிகம், ஆமுஷ்மிகம் என்று பல பலன்களுக்கான உபாஸனங்களைச்சொல்லி பிறகு மோக்ஷத்திற்கான பக்தியோகம் இவற்றைச் சொல்கிறது.

எட்டு பிரபாடகங்களாக உள்ளது. பிரபாடகம் என்பது அத்யாயம். அத்யாயத்தில் அனேக காண்டங்கள் (பிரிவுகள்).

ஸாமம் - வேத கானம். "ருக்"குகளில் கானம் பண்ணப்படும். ஒவ்வொரு "ரிக்"கிலும் கானம் பண்ணும்போது அந்த கானத்தை ஐந்து பாகமாக பிரிப்பார்கள். அவையாவன:-

1) ஹிங்காரம்,
2) ப்ரஸ்தாவம்,
3) உத்கீதம்,
4) ப்ரதிஹாரம்,
5) நிதனம். இதை ஏழாகவும் பிரித்துச் சொல்வார்கள்.
   1) ஹிங்காரம், 2) ப்ரஸ்தாவம், 3) ஆதி, 4) உத்கீதம், 5) ப்ரதிஹாரம், 6) உபத்ரவம், 7) நிதனம்.

ப்ரபாடகம் -1 - ப்ரணவத்தை உத்கீதமாக உபாசிக்கச் சொல்கிறது. உத்கீதம் உலகில் ஸாரமானது. பூமியின் ஸாரம் எதுவென்றால் விளையும் பயிர்களுக்கு ஜலம் மூலமாக இருப்பதால் ஜலம் - ஸாரம். அதில் உண்டான ஓஷதிகள் ஸாரம். இவற்றைச் சாப்பிட்ட மனித உடல் ஸாரம். இந்த உடலில் வாக்கு

ஸாரம். வாக்குகளில் "ருக்" ஸாரம். இதற்கு மேல் ஸாம கானம். இதில் சிறந்தது உத்கீதம். உபாஸனம் இல்லாமல் விதிக்கப்பட்டதைச் செய்தாலும் பலன் உண்டு. உபாஸனத்தோடு செய்தால், பலன் மிகவும் அதிகம். இந்த உத்கீதத்தை - ப்ராணவாயுவாக உபாஸிப்போருக்கு விரோதிகள் அழிவர்.

கச்யப ப்ராஜபதிக்கு திதி, அதிதி என்று இரண்டு மனைவிகள். இவரின் புதல்வர்கள் தேவர்களும், அசுரர்களும் ஆவர். இவர்களுக்குள் சண்டை ஏற்பட்டது. அசுரர்களை ஜெயிக்க தேவர்கள் முடிவெடுத்து தேவர்கள் மூக்கில் உள்ள இந்த்ரியமாக உத்கீதத்தில் சொல்லப்பட்ட "ப்ரணவத்தை" உபாஸித்தனர். அசுரர்கள் அதைக் கெடுத்தனர். இப்படி வாக்கு, கண், காது, மனஸ் என்பதையெல்லாம் உபாஸித்தனர். அசுரர்கள் எல்லாவற்றையும் கெடுத்தனர். கடைசியில் முகத்தில் உள்ள ப்ராணனான ப்ராணவாயுவை உத்கீதமாக தேவர்கள் உபாஸித்ததும் அசுரர்கள் அதன் மீது எறிந்த பாவங்கள் வெளியே சிதறி ஓடியது.(ப்ராணன் பாதிக்கப்படவில்லை). இவ்வாறாக ப்ராணனாக பாவிக்கப்பட்ட உத்கீதத்தின் பெருமை சொல்லப்பட்டது.

உத்கீத ப்ரணவத்தை அமிர்தம் எனப்படும் ப்ரம்மமாக உபாஸிக்கச் சொல்கிறது. தேவதைகள், ம்ருத்யுவுக்கு பயப்பட்டு வேத வித்யைக்குள் புகுந்து வேத மந்த்ரங்களால் தங்களை மறைத்துக் கொண்டனர். அப்போது ம்ருத்யு, தண்ணீரில் மீனைக் கண்டாற் போல் தேவதையைப் பார்த்து விட்டான். பிறகு அவர்கள் அமிர்தமான ப்ரணவத்திலே மறைந்து கொண்டனர். இங்ஙனம் தங்களைக் காத்துக் கொண்டனர். இப்படி உபாஸிப்பவனுக்கு " ம்ருத்யு " இல்லை, பயமுமில்லை.

கப்யாஸ புண்டரீகாக்ஷ த்ருஷ்டி என்பது சொல்லப்படுகிறது. ஆகாசமாக உத்கீதத்தைப் பார்ப்பவனுக்கு உயர்ந்த ஜீவனம் , உயர்ந்த உலகங்கள் கிடைக்கும். (சௌனகர் - சாண்டில்யருக்குச் சொன்னது).

உஷஸ்தி என்கிற மஹரிஷி, பஞ்சம் ஏற்பட்ட சமயத்தில் உணவு கிடைக்காமல், ஒரு கிராமத்தில், யானைக்குக்

கொடுக்கப்படும் "குல்மாஷம்" என்கிற உணவை, உயிர் தரிக்க வேண்டும் என்ற காரணத்தால், யானைப் பாகனிடம் கேட்டு, ஒரு கவளம் வாங்கிச் சாப்பிட்டார். ஆனால் தொடர்ந்து யானைப் பாகன் கொடுத்த தண்ணீரை "இது எச்சில் வேண்டாம்" என்று சொல்லிவிட்டார். உயிர் தரிக்க கொஞ்சம் உணவு சாப்பிட்டால் போதும் என்கிற நியதி இந்தத் தத்வத்தில் சொல்லப்படுகிறது. ஒரு அரசன் யாகம் செய்யப் போகும் சமயத்தில் "ப்ரஸ்தாபம்", "உத்கீதம்", "ப்ரதிஹாரம்" என்கிற ஸாமங்களுக்கு தேவதை யார் யார் என்று ரிக் வித்குகளிடம் கேட்க (யாகத்தை நடத்தி வைப்பவர்கள்), அவர்கள் தெரியாது என்று சொல்ல, அரசன் இவரையே (உஷஸ்தி) (அச்சமயர் உஷஸ்தி அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்) ரிக்வித்தாக நியமித்து அவரை மேற்கண்ட ஸாமங்களுக்கு தேவதைகளைப் பற்றிக் கேட்க உஷஸ்தி. ப்ரஸ்தாபம் என்கிற ஸாமகானத்தில் ஸர்வ பூதங்களுக்கும் பிறவி, அழிவு இவைகளுக்கு காரணமாக உள்ள "ப்ராண" தேவதையையும் , உத்கீதத்திலே "ஆதித்யன்" தேவதையையும், ப்ரதிஹாரத்தில் "அன்னத்தையும்" தேவதையாகப் பாவிக்க வேண்டும் என்று சொல்லி யாகத்தை நடத்தி வைத்தார். அன்னத்தைப் பெறக் காரணமாக உள்ள "சௌவோத்கீதம்" என்கிற உத்கீதம் இதில் சொல்லப்படுகிறது. ஸாமகானத்தில் இசையின் பொருத்தத்திற்காக புதிய அக்ஷரங்கள் இருக்கும். அவை ஸ்தோபாக்ஷரங்கள் எனப்படும். "ஹாஉ" , "ஹாஇ" போன்றவை.

1) ஸூர்யோதயத்திற்கு முன்பு ஆடு, மாடுகள் மேய்ச்சலுக்கு புறப்படும் காலம்;

2) மனிதர்கள் விழித்தெழும் உதய காலம்;

3) பறவைகள் பறக்கும் ஸங்கவ காலம்;

4) தேவதைகளின் உச்சிக் காலம்;

5)அபரான்ன காலம்;

6) அஸ்தமனத்திற்கு முன்பு கால்நடைகள் திரும்பும் காலம்;

7) பித்ருக்களின் அஸ்தமன காலம்.

இப்படி ஏழு பிரிவுகளாக ஸூர்யனை பாவித்து ஸாமத்தை உபாஸிப்பது சொல்லப் படுகிறது.

மேலும், அதிம்ருத்யூபாஸனம் விவரிக்கப்படுகிறது. மாதங்கள் 12, ருதுக்கள் 5 (ஹேமந்த ருது, சிசிர ருது ஒன்றாக கணக்கிடப்படுகிறது) உலகங்கள் 3 . சூர்யன் 1 ஆக 21. ஸாம பக்திகளில் எழுத்துக்கள் 22. இப்படி ஸூர்யோபாசனம் செய்தால் ம்ருத்யுவை ஜயித்து மோக்ஷத்திற்கு அருகதையாவது சொல்லப்படுகிறது. ஸோம யாகத்தில் 3 யவனங்களுக்கு அதிபதியான வஸு, ருத்ர, ஆதித்யர்களைப் பற்றிய ஸாமங்களைச் சொன்னால் மூவுலகும் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது.

## 1. மதுவித்யை

தேனாக சூர்யனையை த்யானம் செய்வது. சூர்ய மண்டலத்தை, தேவதைகள் உட்கொள்ளும் தேனாகவும், மேலுலகில் அந்தரிக்ஷம் எனப்படும் தேன் அடை இருப்பதாகவும், வண்டுகள் மலர்களிலிருந்து தேனை எடுத்து சேர்க்குமாப்போலே "வேத மந்த்ரங்கள்" என்றும், வஸு - ருத்ர - ஆதித்ய - மருத் ஸாத்ய கணங்கள் 4 திக்குகளிலும், மேல்புறத்திலும் நிற்பதாகவும் தேனாக சூர்யனைப்பாவித்தும் அவனுக்கு அந்தர்யாமியாக பகவானை உபாஸனம் செய்தல்.

## 2. காயத்ரீ ப்ரஹ்ம வித்யை

காயத்ரீ சந்தஸ்ஸுக்கு மூன்று பாதங்கள், 24 அக்ஷரங்கள். ப்ரஹ்மத்திற்கு 4 பாதங்கள் (பூதம், ப்ருத்வி, சரீரம், ஹ்ருதயம்) .
(6) வாக்கானது ஸர்வ பூதங்களையும் குறிக்கிறது. (2) காக்கிறது - இரு குணங்கள் . ப்ருத்வியை பாதமாக உடைய இதற்கு ஸர்வ பூதங்களும் ஆதாரம் (3) அவைகளால் மீள முடியாது. (4) சரீரமாயும் (5) ஹ்ருதயமாகவும் இப்படி ப்ருஹ்மத்திற்கு ஆதாரமாக இருக்கிறது. இப்படி உபாஸிக்கச் சொல்கிறது. இதற்கு அங்கமாக ஹ்ருதயத்தில் நான்கு பக்கங்களிலும் , மேலுமாக ஐந்து குழிகள் இருப்பதாகவும், அங்கு ப்ராணன்கள் சஞ்சரிப்பதாகவும், ஐந்து குழிகளிலும் ஐந்து துவாரபாலகர்கள் மற்றும் ஆதித்யன், சந்த்ரன், அக்னி, பர்ஜன்யன், ஆகாசம் இவைகளின் தேவதைகள் இருப்பதாகவும் உபாஸனம் செய்யுமாறு சொல்கிறது. இது "காயத்ரீ ப்ருஹ்ம வித்யை" எனப்படும்.

### 3. கௌக்ஷய ஜ்யோதிர் வித்யை

ப்ரம்மமே வைச்வாநரன். இவன் அக்னிக்கு அந்தர்யாமி. இங்ஙனம் உபாசிக்கும் முறைதான் இந்த வித்யை. காதுகளை கைகளால் மூடிய போது காதுக்குள் ஒரு சப்தம் கேட்கிறதல்லவா? அது, இந்த ப்ரஹ்மத்தைக் காட்டுகிறது.

### 4. சாண்டில்ய வித்யை

ப்ரும்மமே எல்லாவற்றிற்கும் காரணம் என்று அறிந்து காம க்ரோதங்கள் இன்றி சாந்தத்துடன் ப்ரும்மத்தை உபாஸிப்பது.

### 5. கோஸ விஜ்ஞானம் (வித்யை)

தன் புத்ரன் தீர்க்க ஆயுளோடு இருக்க செய்யப்படும் உபாஸனம். வாயுவை திக்குகளின் குமாரனாக நினைத்து மந்த்ரங்களைச் சொல்லி உபாஸிக்க வேண்டும்.

### 6. புருஷ வித்யை

தன்னை ஒரு யக்ஞமாக கருதி தன் ஆயுட் காலத்தை (116 வருஷம்) மூன்றாக பிரித்து வஸு, ருத்ர, ஆதித்யர்களாக நினைத்து, பசி, தாகங்களை தீக்ஷையாகவும், உட்கொள்வதை உபஸத்தாகவும் சிரிப்பு இவைகளை ஸ்தோத்ரங்களாகவும், சாஸ்தர சம்பந்தமாக செய்யப்படுவதை ஸம்பாவனையாகவும், மரணத்தை அவப்ருதமாகவும் பாவித்து, சாஸ்திர விதிப்படி உபாஸித்தால், நோயை விலக்கி நீடித்து வாழ்வான் என்கிறது. "ஐதரேய மஹிதாஸர்" என்பவர் இப்படி வாழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது.

இவர், இந்த வித்யையை, ஸ்வேத கேதுவுக்கு உபாசித்ததாகவும் சொல்வர். அந்திம காலத்தில் ஜபிக்க வேண்டிய மந்த்ரங்களை ஜபித்தால், மோக்ஷம் அடைவான் என்றும் கூறுகிறது. (தைத்திரீய முடிவில் சொல்லப்படும் புருஷ வித்யை இதுவல்ல).

## 7 - ரைக்வ வித்யை

இது ஸம்வர்க்க வித்யை என்றும்சொல்லப்படும். "ஜாநச்ருதி" என்பவர் மிகவும் தர்மிஷ்டர். வீடுகள், சத்திரங்கள் கட்டி எல்லா இடங்களிலும் அன்னதானம் முதலிய எல்லா தானங்களையும் ச்ரத்தையோடு செய்பவர். ஒரு நாள் இரவில் அவர் தன்னுடைய மாளிகையின் மேல் மாடியில் படுத்திருக்கும்போது, அவருக்கு மேலே ஆகாயத்தில் அன்னங்கள் பறந்தன. அதில் முன்னே போகும் அன்னத்தை, பின்னே செல்லும் அன்னம், "உனக்கு கண்ணில்லையா ? தர்மிஷ்டனான "ஜாநச்ருதி" படுத்திருக்க அவன் மேலாக பறந்து போகிறாயே?" என்று கேட்டது. முன்னே செல்லும் அன்னம், "வண்டியுடன் எப்போதும் வசிக்கும் ரைக்ரவரா இவர்?" என்று கேட்டது.

"அது யார்? வண்டியோடு இருக்கும் ரைக்வர்" என்று, பின்னால் செல்லும் அன்னம் கேட்டது.

"சூதாட்டங்களில் "க்ருதம்" என்கிற ஆட்டம் தெரிந்தவர் எல்லா ஆட்டங்களும் தெரிந்ததற்குச் சமம். "ரைக்வர்" எல்லாம் அறிந்தவர். அந்த பெருமை இந்த ஜாநச்ருதிக்கு ஏது?" என்று முன்னே செல்லும் அன்னம் சொல்லிற்று.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஜாநச்ருதி , காலையில் எழுந்து "ரைக்வர் எங்கிருக்கிறார்?" என்று அறிய எல்லா பக்கங்களிலும் ஏவலர்களை அனுப்பினார். பல பேர் காணவில்லை என்று திரும்பி வர, ஒருவன் மட்டும் "ஓரிடத்தில் வண்டியின் அடியில் சிரங்குகளைச் சொறிந்து கொண்டு அமர்ந்திருக்கிறார்" என்று சொன்னார்.

ஜாநச்ருதி பசுக்கள், குதிரைகள் இவற்றை ஏராளமாகக் கொண்டுபோய் ரைக்வரிடம் கொடுத்து அடிபணிந்து தேவதாக்ஞானம் உபதேசிக்க ப்ரார்த்தித்தார். ரைக்வர் மறுத்தார். மறுபடியும் ஏராளமான செல்வங்களையும் மற்றும் தன் புத்ரியையும் கொடுத்து உபதேசிக்குமாறு ப்ரார்த்தித்தார்.

இப்போது மனம் கனிந்து, ரைக்வர் உபதேசித்ததுதான் ரைக்வவித்யை.

## 8 - ஸம்வர்க வித்யை

(ஸத்ய காம ஜாபாலர் என்கிற மஹரிஷி ஸ்வேதகேதுவுக்கு உபதேசித்தது)

காபேயன், அபிப்ரதாரி, என்கிற இருவர் சாப்பிட உட்கார்ந்த சமயத்தில் ஒரு ப்ரஹ்மச்சாரி பிக்ஷை கேட்டார். இருவரும் பிக்ஷை போடவில்லை. ப்ரஹ்மச்சாரி, "உலகத்தை தாங்குபவன் நான்கு நான்கு மஹாத்மாக்களை விழுங்கியுள்ளான். பற்பல உருவாக வசிப்பவன் அவன். இவனை மனிதர்கள் தெரிந்து கொள்வதில்லை. இந்த அன்னம் யாருக்கு உள்ளதோ அவனுக்கு அளிக்கப்படவில்லை" என்றான்.

காபேயன், "ப்ரஹ்மச்சாரியே! எல்லாவற்றையும் ச்ருஷ்டிப்பவன் ஸர்வக்ஞன். இவன் ஒருவராலும் சாப்பிடப்படாததைச் சாப்பிடுகிறான். இப்படி நாங்கள் உபாஸிக்கிறோம்" என்று சொல்லி, பிக்ஷை அளித்தான்.

அக்னி, ஸூர்யன், சந்த்ரன் இவற்றிற்கு லயஸ்தானம் வாயு. உடம்பில் கண், காது, வாக்கு, மனஸ் இவைகளுக்கு லயஸ்தானம் ப்ராணன். இவற்றைத் தெரிந்து உபாஸிப்பவன் , ப்ரஹ்மத்தை அனுபவிப்பான். (இது பலன்) என்று இதில் சொல்லப்படுகிறது.

## 9 - ஷோடசகல ப்ரஹ்மவித்யை

ஸத்ய காமன் என்கிற மஹரிஷியின் வரலாறு சொல்லப்படுகிறது. ஸத்ய காமன் ஆசார்யரை வரிக்கப் போவதற்கு முன்பு தன் தாயாரிடம் கோத்ரத்தின் பெயரைக் கேட்டான். "கோத்ரம் எதுவென்று தெரியாது" என்று சொன்ன தாயார், ஆசார்யனிடத்தில் "என் தாயார் ஜாபாலை. நான் ஸத்ய காமன் என்று சொல்!" என்றாள்.

ஸத்ய காமன் கௌதம-ஹாரித்ருபாதர் என்கிற ரிஷியிடம் சென்று இதைச் சொல்ல, குருவும் இவனை அங்கீகரித்து இளைத்த 400 பசுக்களை வளர்த்துவரச் சொன்னார். அவற்றை வெகு சிரமப்பட்டு பல வருஷங்கள் வளர்த்து ஆயிரம் பசுக்களாக்கினான். அவற்றில் ஒரு காளை ஸத்ய காமனுக்கு "ப்ரகாசவா" என்கிற பாதத்தை உபதேசித்து, அதற்கு நான்கு அவயவங்கள் என்று கூறி, "அக்னி உனக்கு இன்னொரு பாதத்தைச் சொல்லும்" என்று சொல்லிற்று.

மறுநாள் "ஸமிதாதானம்" செய்யும் சமயத்தில், அக்னி "அனந்தவான்" என்கிற பாதத்தையும், அதன் நான்கு பாகங்களையும் உபதேசித்தது. "ஹம்ஸம் உனக்கு மூன்றாவது பாதத்தைச் சொல்லும்" என்றது. மறுநாள் மாலை அன்னத்திடம் ஜ்யோதிஷ்மான் என்கிற பாதத்தையும், அதன் நான்கு பாகங்களையும் அறிந்தான். அன்னம், "மற்றொரு பாதத்தை நீர்ப்பறவை சொல்லும்" என்றது. அதற்கடுத்த மறுநாள் மாலை நீர்ப்பறவையிடம் "ஆயதனவான்" என்கிற பாதத்தையும், அதன் பாகங்களையும் அறிந்தான். இப்படியாகக் கற்று நன்கு அறிந்த ஆசார்யனைப் போன்ற தேஜஸ் முகத்தில் தெரிய ஆயிரம் மாடுகளையும் ஓட்டிக் கொண்டு ஆசார்யரிடம் சென்றான்.

ஆசார்யர் இவனைப் பார்த்து "ப்ரஹ்மத்தை அறிந்தவனாக உன் முகம் சொல்கிறது. யார் உனக்கு சொன்னது?" என்று கேட்க, ஸத்ய காமன் எல்லாவற்றையும் சொல்லி , "இருந்தாலும் ஆசார்ய முகமாக உபதேசம் செய்யவேண்டும்" என்று ப்ரார்த்திக்க மனம் சந்தோஷம் அடைந்து ஆசார்யனும் உபதேசம் செய்தார். (இரண்டு உபதேசமும்-அதாவது எல்லாம் ஒன்றாக இருந்தன).

இந்த ஸத்ய காமனின் சிஷ்யன் உபகோஸலன். பன்னிரண்டு வருடம் ஆசார்யனின் வைதீக அக்னியைப் பாதுகாத்து வந்தான். ஆசார்யன் இவனுடன் இருந்த மற்ற சிஷ்யர்களுக்கு உபதேசம் முதலியவற்றை முடித்தவர் உபகோஸலனுக்கு ஒன்றும் சொல்லவில்லை. ஆசார்யருடைய மனைவி ப்ரார்த்தித்தும் எதுவும் சொல்லாமல், ஆசார்யன் வெளியூர் சென்று விட்டார்.

பன்னிரண்டு வருஷ காலம் பாதுகாத்து வந்த அக்னி இவனிடம் கருணை கொண்டு "கம என்பது நமது சுகம், வம் என்பது இந்த்ரியம் அல்லது வானம் போன்றது என்றும், ப்ராணன் ப்ருஹ்மம், கம்-ப்ருஹ்மம் (வம்) என்று உபதேசித்தான். பிறகு "அக்னி வித்யையை" உபதேசித்து இதற்கு மேல் உனக்கு ஆசார்யன் உபதேசிப்பார் என்று அக்னி சொன்னான்.

வெளியூர் சென்றிருந்த ஆசார்யன் திரும்பி வந்தார். சிஷ்யனின் முகத்தைப் பார்த்தார். "ப்ரஹ்ம தேஜஸ் ப்ரகாசிக்கிறதே? யார் உபதேசித்தது?" என்று கேட்டார். உபகோஸலன் நடந்த உண்மையைச் சொன்னான். ஆசார்யன் சந்தோஷமடைந்து மேற்கொண்டு உபதேசம் செய்தார். அதாவது ஆத்மாவானது த்ரேகத்தில் இருப்பது. ஆத்மாவிற்கு அழிவு கிடையாது. இதை நன்கு தெரிந்து கொண்டால் பாபம் ஆத்மாவில் ஒட்டாது என்று ஆரம்பித்து பலவற்றையும் உபதேசித்தார். இவ்வாறு உபாஸனம் செய்தவன் முமுக்ஷுவாக இருப்பதால் இவன் மரணமடைந்த பிறகு இவனுக்கு செய்யவேண்டிய சடங்குகள் செய்யாவிட்டாலும் இவன் ஆத்மா அர்ச்சிராதி மார்க்கம் என்கிற தேவயான மார்க்கத்தாலே ப்ரஹ்மத்திடம் சேர்க்கப்படுவான். இதன் பிறகு துக்கம் என்பதே கிடையாது என்று உபதேசித்தார்.

10 - மேலே சொல்லப்பட்டது உபகோஸல வித்யை.

11 - நடுவில் அக்னி உபதேசித்தது இதைச் சார்ந்த அக்னிவித்யை

(ஆக, க்ஷோடச கலை ப்ரஹ்மவித்யை, உபகோஸல வித்யை, அக்னி வித்யை மூன்றும் சொல்லப்பட்டது)

## 12 - ப்ராண வித்யை

ப்ராணன் மூத்தது. அதாவது கர்ப்ப வாஸத்தில் ப்ராணன் ஏற்பட்ட பிறகுதான் மீதி இந்த்ரியங்கள் உண்டாகின்றன. ஆதலால் ப்ராணன் "ஜ்யேஷ்டன்".

ப்ராணனுக்கும் மீதி இந்த்ரியங்களுக்கும் ஒரு கலகம் ஏற்பட்டது. "யார் உயர்ந்தவர்?" என்பதே அது. ஸ்ருஷ்டி செய்த

ப்ரஜாபதியிடம் சென்று, இந்த வ்யவஹாரத்தை தீர்க்குமாறு கேட்டுக் கொண்டன. அவர் உங்களுக்குள் யார் சரீரத்திலிருந்து வெளிப்பட்டால் சரீரம் குலைந்து போகுமோ அவரே ச்ரேஷ்டர், உயர்ந்தவர் என்றார்.

வாக்கு ஒரு வருஷ காலம் சரீரத்தை விட்டு வெளிப்பட்டு இருந்தது. ஊமை போல சரீரம் வாழ்ந்தது. இதைப்போலவே கண்கள், காதுகள் மற்ற இந்த்ரியங்களும் வெளிப்பட்டு சரீரத்தை சோதித்தது. சரீரத்தில் அந்தந்த அங்கத்திற்கு குறைவு ஏற்பட்டதே தவிர, சரீரம் ஜீவித்திருந்தது.

ப்ராணன், சரீரத்தை விட்டு வெளியே கிளம்பின தருணத்தில் எல்லா அவயவங்களும் செயலிழக்கத் தொடங்கின. அவை ப்ராணனை வெளியே போக வேண்டாம் என்று வேண்டி, ப்ராணனே ச்ரேஷ்டன் அதாவது உயர்ந்தவன் என்றன. ப்ராணன் தனக்கு அன்னம், ஆடை எல்லாம் அளிக்க வேண்டும் என்று கேட்டது. அன்னம் ப்ராணனுக்கு என்றும், முன்னும் பின்னும் அருந்தும் ஆசமன தீர்த்தம் ப்ராணனுக்கு உடை என்றும் சொல்லி அவையாவும் ப்ராணனை உபாசித்தன.

## 13. பஞ்சாக்னி வித்யை

அருண மஹரிஷியின் குமாரர் ஆருணீ. அவரின் குமாரர் ச்வேதகேது. அவர் ஒரு சமயம் பாஞ்சால தேசத்தில் நடந்த ஸதஸ்ஸூக்கு (விவாதங்கள் நடக்கும் சபை) சென்றார். ப்ரவாஹணன் என்ற பாஞ்சால தேசத்து அரசன் நடத்திய சபைக்கு அவர் சென்றார். அந்த அரசன் ச்வேதகேதுவை சில கேள்விகள் கேட்டார்.

அரசன்: ரிஷிபுத்ரரே! உமக்கு தகப்பனார் உபதேசங்களைச் செய்திருக்கிறாரா?

ச்வேதகேது: ஆம்

அரசன்: ப்ரஜைகள் மரணம் அடைந்த பிறகு போகும் இடம் எது? (அதாவது யாக தான பூர்த்தாதி புண்ய கர்மாக்களைச் செய்தவர்கள் எந்த லோகத்திற்கு போகிறார்கள்)?

ச்வேதகேது: தெரியாது

அரசன்: திரும்பி வரும் வழி எது? (யாகாதிகளை அனுஷ்டித்தவர் திரும்பி வரும் வழி எது?)

ச்வேதகேது: தெரியாது

அரசன்: தேவயான மார்க்கம், பித்ருயாண மார்க்கம் இவற்றின் வேறுபாடு தெரியுமா? (வேத்தபதோ தேவயானஸ்ய பித்ருயானஸ்யச வ்யாவர்த்தனா?)

ச்வேதகேது: தெரியாது

அரசன்: மேலுலகம் சென்றவர்கள் யார் தெரியுமா? (இந்த லோகத்திலிருந்து செல்பவர்களில் ஸ்வர்க்க லோகத்தை அடையாதவர்கள் யார்?)

ச்வேதகேது: தெரியாது

அரசன்: ஐந்தாவது ஆஹுதியில் மனிதன் பிறக்கிறான் என்பது தெரியுமா? (வேத்த யதா பஞ்ம்யாமாஹுதௌ தாவாப புருஷவசஸோ பவந்தீ தி?)

ச்வேதகேது: ஒன்றும் தெரியாது

இங்ஙனம் கேள்விகள் கேட்ட பாஞ்சால தேசத்து அரசன் "ரிஷிபுத்ரரே, இவை ஒன்றையும் அறியாது, நீர் பெற்றுக் கொண்ட உபதேசம் தான் என்ன? எப்படி உபதேசம் பெற்றதாகக் கூறமுடியும்?" என்று கேட்க, ச்வேதகேது மானபங்கப்பட்டு தகப்பனாரிடம் ஓடி வந்து (ஆருணி) விஷயத்தைச் சொல்ல, அவர் தனக்கு இதைப் பற்றி ஒன்றும் தெரியாது என்று வருத்தப்பட்டு, அரசனிடமே கேட்கலாம் என்று புறப்பட்டார். ச்வேத கேதுவையும்

அழைத்தார். பிள்ளை வரவில்லை. தான் மட்டும், ப்ரவாஹணன் என்கிற அந்த பாஞ்சால தேசத்து அரசனிடம் சென்றார். தன்னுடைய பிள்ளையிடம் கேட்ட கேள்விகளுக்கு தனக்கு பதில் தெரியாது என்றும் அதை தெரிந்து கொள்ள வந்திருப்பதாகவும் சொன்னார். அரசன் ஆருணி என்கிற உத்தாலகருக்கு உபதேசித்ததே "பஞ்சாக்னி வித்யை".

ச்ரத்தையோடு புண்ய கர்மாக்களைச் செய்தவன் மரணம் அடைந்ததும், உடலில் இருந்து கிளம்பிய அவனும் (ஜீவாத்மா), ப்ராணேயந்த்ரியங்களும், பூத ஸூக்ஷ்ம ஸரீரம் எடுத்து, முதல் அக்னியான "ஸ்வர்க்கத்தில்" ஹோமம் செய்யப்படுகிறது. வெகு போக்யமான ஸரீரம் எடுத்து (போக ஸரீரம்) போகங்களை அனுபவித்த பிறகு இந்த பூத ஸூக்ஷ்ம ஸரீரம் "மேகம்" என்கிற அக்னியில் சேர்க்கப்படுகிறது. பிறகு மழை மூலமாக, பூமி என்கிற நிலத்தில் விழுந்து, தான்யங்களில் புகுந்து, ஆகாரமாக புருஷனின் (நாலாவது அக்னி) உடலில் சேர்ந்து, பிறகு ஸ்த்ரீ எனப்படும் ஐந்தாவது அக்னியில் சேர்ந்து ஏறக்குறைய பத்து மாதங்கள் இருந்து உலகில் பிறக்கிறது. இதுவே பஞ்சாக்னி வித்யை. ஆயுள் பர்யந்தம் வரை இருந்து, மறுபடியும் மரணம் அடைந்து, முன்பு சொன்னதைப் போல ஐந்து அக்னிகளில் இருந்து மறுபடியும் பிறந்து இப்படி எண்ணற்ற சங்கிலித் தொடராக, ஜீவன் பிறவிகள் எடுக்கிறது. இப்படி இருப்பதை உணர்ந்து ஆத்மாவை வேறாகப் பாவித்து, உபாஸிப்பவரும் ச்ரத்தையுடன் ப்ரஹ்மத்தையே உபாஸிப்பவரும், மரணம் அடைந்ததும் "தேவயான மார்க்கம்" என்று சொல்லப்படும் அர்ச்சிராதி மார்க்கத்தாலே ப்ரஹ்மத்தை அடைகின்றனர். (அர்ச்சிராதி மார்க்கம் - இதில் விரிவாகவே சொல்லப்படுகிறது)

யக்ஞம் செய்தவர்கள், குளம் முதலியன வெட்டியவர்கள், ஆலயம் கட்டியவர்கள், தான தர்மம் செய்தவர்கள், பித்ருயான மார்க்கமான புகை, இரவு, க்ருஷ்ண பக்ஷம், தக்ஷிணாயனம், பித்ரு லோகம், ஆகாசம், சந்த்ர லோகம் மூலமாக ஸ்வர்க்கம் சென்று போகத்தை அனுபவித்து பிறகு ஆகாசம், வாயு, புகை, மேகம், மழை, ஓஷதிகள் என்று திரும்பி வந்து புருஷனிடம் போய் சேர்வதில் முன் கர்ம வினைகளுக்கு தக்கபடி தாமதம் முதலியன

ஏற்பட்டு கர்ப்பம் மூலமாக ஸ்த்ரீயை அடைந்து - மறுபடியும் ஜனனம், மறுபடியும் மரணம். இப்படி பலப்பல ஜன்மங்கள்.

கொசு, புழு, பூச்சி போன்ற ஜந்துக்கள் பிறப்பதும், மரிப்பதுமாய் இருக்கும். இவற்றிற்கு மேலுலகம் என்பது இல்லை.

ஸ்வர்க்க லோகம் தான் அக்னி. ஸூர்யன்-ஸமித். ஸூர்ய கிரணங்கள்-புகை. அஹஸ் - அர்ச்சிஸ். சந்த்ரன்-அங்காரம் அதாவது தணல். நக்ஷத்திரங்கள் - நெருப்பு பொறிகள்.

## 14. வைச்வாநர வித்யை

ப்ராசீனசாலர் , சத்யயஜ்ஞர், இந்த்ரத்யும்னர், ஜனர், புடிலர் - ஆகிய ஐந்து மஹரிஷிகளும் ஒன்று கூடி "நம் ஆத்மா யாது? ப்ரஹ்மம் யாது?" என்று விசாரம் செய்து, தெளிவு ஏற்படாமல், அருண மஹரிஷியின் புதல்வரான உத்தாலக மஹரிஷியை அணுகினர். அவரும் இதை நான் அறியேன் அல்லேன்! இதனை அறிந்தவர் கேகய தேசத்து அரசன் அச்வபதி என்பவர். அவரை அணுகுவோம் என்று ஆறு மஹரிஷிகளும் அச்வபதியை அடைந்தனர். அச்வபதி மன்னர் இந்த மஹரிஷிகளைக் கொண்டு ருத் விக்குகளாக வரித்து யாகம் செய்து தக்ஷிணையை கொடுக்கிறேன் என்றார். இவர்கள் வைச்வாநர வித்யையை தானமாக (தக்ஷிணை) வேண்டினர்.

அரசன் இவர்களை ஒவ்வொருவராக அழைத்து, வைச்வாநர உபாஸனம் இதுவரை எப்படி செய்கிறார்கள் என்று கேட்டான். ப்ராசீனசாலர் த்யுலோகத்தையும், சத்யயஜ்ஞர் ஆதித்யனையும், இந்த்ரத்யும்னர் வாயுவையும் ஜனர் ஆகாசத்தையும், புடிலர் ஜலத்தையும், உத்தாலகர் ப்ருத்வியையும் உபாசிப்பதாகச் சொன்னார்கள்.

அரசன், இவை யாவும் வைச்வாநர ஆத்மாவின் அவயவங்கள். இவை இம்மை பலனை மட்டுமே அளிக்கும். ஆனால் இவற்றையெல்லாம் சேர்த்து "விச்வரூப வைச்வாநர" உபாஸனம் செய்ய வேண்டும் என்று உபதேசித்தான். இதன் பலன் "பரப்ரம்ம உபாஸனை" என்றும் சொன்னான்.

இவற்றை தன் உடலில் அங்கங்களாக வைத்து ப்ராணாக்னியை வைச்வாநர அக்னியாக பாவித்து, அன்னத்தை ஐந்து ப்ராணாஹுதிகளாக முறைப்படி செய்வது பஞ்ச ப்ராணங்கள் இப்படி உபாஸித்தால், அவற்றின் வழியே இந்த்ரியங்கள், அவற்றை நியமிக்கும் தேவர்கள், அவர்கள் சார்ந்த உலகங்கள், யாவும் திருப்தி அடையும். இப்படி உபாஸிப்பவனின் பாபம் தீயில் இட்ட பஞ்சு போல எரிந்து போகும் என்று சொன்னான்.

## 15. ஸத்வித்யை

அருண மஹரிஷியின் பேரன் ச்வேதகேது. உத்தாலகரின் குமாரன். பன்னிரெண்டு வயதான ச்வேதகேது தகப்பனாரின் கட்டளைப்படி குருகுல வாஸம் செய்து வேதத்தை எல்லாம் அத்யயனம் செய்து 24 வயதில் திரும்பி வந்தான்.

உத்தாலகர் பிள்ளையைக் கேட்டார். ச்வேதகேது எல்லாவற்றையும் குருகுலவாஸத்தில் அறிந்து கொண்டாயா? எதைக் கேட்டு, சிந்தனை செய்து, த்யானித்தால், உலகத்தில் எல்லாவற்றையும் கேட்டு சிந்தித்து த்யானிக்கப் பெற்றதாக ஆகுமோ அப்படி ஸர்வத்தையும் நியமிக்கும்படியானதை ஆசார்யன் உபதேசித்தாரா? நீ கேட்டு தெரிந்து கொண்டாயா?

ச்வேதகேதுவுக்கு பதில் சொல்ல தெரியவில்லை. ஆசார்யன் இதைச் சொல்லவில்லையே, தந்தையிடமே ப்ரார்த்திப்போம் என்று தந்தையிடம் இதற்கு அவரையே உபதேசமாக சொல்லுமாறு கேட்டுக் கொண்டான்.

### உத்தாலகர் சொன்னார்.

ஸத் என்கிற வஸ்து, தான் பலவாறாக ஆகக்கடவேன் என்று ஸங்கல்பம் செய்து கொண்டு "தேஜஸ்"ஸை ச்ருஷ்டித்தது. "தேஜஸ்"ஸாக இருந்து ஸங்கல்பம் செய்து கொண்டு ஜலத்தை ச்ருஷ்டித்தது. ஜலமாக இருந்து இவ்வாறு ப்ருத்வியை ச்ருஷ்டித்தது. இவைகள் பூமியில் பிராணிகள் என்ற பூதங்களாயின. அந்த பிராணிகள் அண்டஜம், ஜீவஜம், உத்பிஜ்ஜம்

என்று மூன்று வகை. அண்டஜம் - முட்டையிலிருந்து உண்டாவது. ஜீவஜம் - பிராணிகளிடமிருந்து பிறப்பது (மனிதர்களையும் சேர்த்து) உத்பிஜ்ஜும் - பூமியை பிளந்து வளர்வது (மரம், செடி,கொடிகள்). (உத்பிஜ்ஜுத்தில் வியர்வையிலிருந்து உண்டாவதும் சேரும்).

ஸத் என்பது ஜீவாத்மாவோடு ப்ரவேசித்து, பலவகை நாம ரூபங்களை உண்டாக்க சங்கல்பித்துக் கொண்டு, அதற்காக தேஜஸ், ஜலம், ப்ருத்வி என்கிற மூன்று மகா பூதங்களையும் த்ருவித்க்கரணம் செய்தது. அதாவது ஜலத்தில் மற்ற இரண்டும் (தேஜஸ், ப்ருத்வி) கலந்திருக்கும். தேஜஸ்ஸில் ஜலம், ப்ருத்வி கலந்திருக்கும். ப்ருத்வியில் தேஜஸ், ஜலம் கலந்திருக்கும் (இவற்றை பஞ்ச பூதங்கள் என்று சொல்லும்போது பஞ்சீகரணம் என்று பெயர்).

இப்படி கலந்திருப்பதிலிருந்து உடலை ச்ருஷ்டித்து, ஜீவாத்மாவுடன் தானும் அதன் உள்ளே புகுந்து, ஒவ்வொரு வஸ்துவாகவும், "சத்" என்கிற பரப்ரம்மம் இருக்கிறது . ஒவ்வொன்றிலும் அசேதனம், சேதனன், ஈச்வரன் சேர்ந்து இருக்கிறது என்பதை அறிவாயாக.

தேஜஸ்ஸூக்கு நிறம் சிவப்பு. ஜலத்திற்கு நிறம் வெண்மை. ப்ருத்விக்கு நிறம் கருப்பு. நெருப்பு எரியும்போது இந்த மூன்று நிறங்களையும் காணலாம்.

இப்படி மூன்று மஹா பூதங்களிலிருந்து உண்டான அன்னம், உடலை வளர்த்து, மூன்று பரிணாமங்களைப் பெறுகின்றது. அஸாரபாகம் - மலமாக ஆகிறது. ஸாரபாகம் - உடலில் மாம்ஸம். மிகவும் ஸாரமானது மனஸை போஷிக்கிறது. அருந்தும் ஜலமும், நீர், இரத்தம், மனஸை போஷிக்கும் பாகம் என்று மூன்றாக மாறுகிறது. தேஜோமயமான ஆகாரமும், எலும்பு, அதற்கு வேண்டிய ஸ்னேஹம் (பசை), வாக்கை வளர்க்கும் பாகம் என மூன்றாக மாறுகிறது. ஆக மனஸ்- அன்னமயம், ப்ராணன்- ஜலமயம், வாக்கு - தேஜோமயம்.

"15 நாட்கள் ஆகாரம் இல்லாமல் வெறும் ஜலத்தை பானம் பண்ணி வந்தால்கூட, ப்ராணன் அழியாது. அப்படி இருந்து மறுபடியும் என்னிடம் வா" என்றார் தகப்பனார்.

ச்வேதகேது, அப்படியே 15 நாட்கள் பட்டினி கிடந்து அப்போது தீர்த்தத்தை மாத்திரம் அருந்தி தகப்பனாரிடம் வந்தான். தகப்பனார் வேதங்களைச் சொல்லச்சொன்னார். ச்வேதகேதுவால் எதுவும் சொல்லமுடியவில்லை. அப்போது "நீ சாப்பிடாத போது 16 அம்சங்களில் 15 அம்சங்கள் போய் விட்டன. இப்போது சாப்பிட்டு விட்டு வா" என்றார். ச்வேதகேது சாப்பிட்ட பிறகு சொல்வதற்கு பலம் வந்தது. அன்னத்தால் புஷ்டி ஏற்படுகிறது என்று விளக்கினார். இதைப்போல எல்லா உலகுக்கும் காரணமான வஸ்து எல்லாவற்றிலும் உட்புகுந்து நியமிக்கும் சக்தியோடு இருக்கிறது என்று சொன்னார்.

பலவகை புஷ்பங்களிலிருந்து தேனீக்கள் தேனைச் சேகரிக்கின்றன. அந்த தேன் துளிகள், "நான் இந்த புஷ்பத்தைச் சேர்ந்தவன்" என்று தனியாக பிரித்துச் சொல்ல முடியுமா? அப்படியே "ஸத்" எனப்படும் பராமாத்மாவிடம் ஒன்றின ஜீவாத்மாக்கள், தங்களைத் தாங்களே தெரிந்து கொள்ள இயலாது.

பல நதிகளிலிருந்து தண்ணீர் ஸமுத்திரத்தில் சேர்ந்த பிறகு அவை இன்னின்ன நதியின் ஜலம் என்று பிரித்து சொல்ல முடியுமா? முடியாது.

ஒருவன் மரணம் அடையும் தருவாயில் அவனைச் சேர்ந்தவர்கள் அருகில் அமர்ந்து சில கேள்விகள் கேட்கும்போது அவற்றை அவன் உணர்வதில்லை. ஏனெனில் அவனது வாக்கு மனஸ்ஸிலும், மனஸ் ப்ராணனிலும், ப்ராணன் தேஜஸ் எனப்படும் பூத ஸூக்ஷ்ம சரீரத்திலும் அதன் காரண வஸ்துவான பரமாத்மாவிடமும் லயித்து விடுவதால், உணர்வதில்லை.

உலகெங்கும் பரமாத்மா இருக்கிறான் என்றும், அவன் அழிவற்றவன், தோஷமற்றவன், எல்லா உயிர்களுக்கும் அவன் ஆத்மா, உனக்குள்ளும் அவன் இருக்கிறான் என்று

ச்வேதகேதுவுக்கு உத்தாலகர் உபதேசித்தார். இந்த ஸத்வித்யையில் 16 கண்டங்கள் இவற்றில் சொல்லப்பட்டவை.

(1) "ஸத்" என்பது எல்லா உலகத்துக்கும் காரணம்.

(2) "ஸத்" முதலில் "ஸமஷ்டி ச்ருஷ்டி" செய்கிறது.
(3) பூதங்களை ஒன்றோடொன்று சேர்த்து "வியஷ்டி" ச்ருஷ்டி செய்கிறது.

(4) த்ருவித்கரணம் என்கிற பூதங்களின் சேர்க்கை செய்யப்படுகிறது.

(5) தேஜஸ், ஜலம், ப்ருத்வி இவற்றால் உடல் வளர்க்கப்படுகிறது.

(6) அன்னத்தின் நுண்ணிய பாகம் வாக், ப்ராணன், மனஸ்ஸை வளர்க்கிறது.

(7) இது இல்லையேல் மனஸ் க்ஷீணமாகி விடுகிறது.

(8)"ஸத்" - சேதனங்களில் லயஸ்தானம்.

(9) இப்படி லயிக்கும் ஜீவன்கள் கணக்கில்லாதவை

(10) கடலில் இருந்து ஜலம் ஆவியாகி, மழையாகி, நதியாவது போல சேதனர்கள் (ஜீவன்கள்) ஸத்திலிருந்து புறப்படுவர்.

(11) இந்த சேதனர்களுக்கு அழிவில்லை.

(12) "ஸத்" என்பது மிக மிக ஸூக்ஷ்மமானது

(13) "ஸத்" - எங்கும் கரந்து பரந்து உள்ளது.

(14) ஆசார்யன் மூலமாக இதை அறிய வேண்டும்

(15) இந்த வித்யையை உபாஸிப்பவனுக்கு எல்லா அநிஷ்டமும் போகும்

(16) அதனால் மீண்டும் ஸம்ஸார பந்தம் இல்லை.

உத்தாலகரின் உபதேசம் உலகில் உள்ளோர் மனங்களில் நன்கு பதியும்படி இருப்பதாகச் சொல்வர்.

## 16. பூம வித்யை

நாரதர், ஸனத்குமாரரை அணுகி உபதேசம் செய்யும்படி ப்ரார்த்தித்தார். அவரது மனம் கலங்கியிருந்தது. நாரத மஹரிஷி யாவும் அறிந்தவர். அவருக்கே கலக்கம் என்றால்? ஸனத்குமாரர் நாரதரைப் பார்த்து உமக்கு தெரிந்ததையெல்லாம் முதலில் சொல்லுங்கள் என்றார். நாரதர் நான் எல்லா ஸப்தங்களையும் அறிந்திருக்கிறேன் என்றார். இதை உபாஸித்து (ப்ரம்மமாக) ஸப்தங்கள் கேட்குமிடங்களிலெல்லாம் ஸஞ்சரித்து ஆனந்தம் அடையலாம் என்று ஸனத்குமாரர் சொல்ல, நாரதர் இதற்கு மேலும் உண்டா என்று கேட்டார். ஸம்பாஷணை தொடர்ந்தது. ஸப்தம், வாக்கு, மனஸ், ஸங்கல்பம், சித்தம், த்யானம், விஜ்ஞானம், பலம், அன்னம், தண்ணீர், தேஜஸ், ஆகாயம், நினைவு, ஆசை என்று பதினான்கையும் ப்ரம்மமாக உபாஸிக்கலாம் என்று ஸம்பாஷனை தொடர்ந்தது. இதற்கும் மேலானது எது என்கிற கேள்வி வந்தபோது, "ப்ராணனை" மேலானதாக உபாஸிக்கலாம் என்றும், ப்ராணன் என்பது ஜீவாத்மா என்றும் இந்த ப்ராணனை உயர்ந்த புருஷார்த்தமாக உபாஸிக்கலாம் என்றும் சொன்னார். ஸனத்குமாரர் மேலும் சொன்னார். இதை விட "ப்ரம்மத்தை" உபாஸனை செய்வது மேலானதாகும். அதற்கு உபாஸனம், மனனம், இதில் ச்ரத்தை, இதில் அசைக்க முடியாத பற்றுதல், அதற்கு தகுந்த செய்கைகளில் ஊக்கம், இப்படி இருந்து அந்த ப்ரம்மத்தை உபாஸிப்பது "பூமா" எனப்படும். இதற்கு மேம்பட்டது இல்லை. இது எல்லாவற்றிற்கும் ஆத்மா-பரமாத்மா. இப்படி உபாஸனம் செய்பவன், கர்மங்களிலிருந்து விடுபடுகிறான். இதற்கு மனஸ் சுத்தம் வேண்டும். மனஸ் சுத்தமாவதற்கு சுத்தமான ஆகாரத்தை சாப்பிட வேண்டும். இப்படி ஸனத் குமாரர் பதில் சொன்னார். இவரை "ஸ்கந்தர்" என்றும் சொல்வதுண்டு.

## 17. தஹர வித்யை

இந்த ஸரீரத்திற்கு ப்ரம்மபுரம் என்று பெயர். இதன் உள்ளே இருக்கிற புண்டரீகம் (தாமரைப்பூ) போன்ற சிறிய ஹ்ருதயத்திலே ஆகாசம் இருக்கிறது. வெளியில் உள்ள ஆகாசத்தைப் போலவேதான், இதுவும். உடல் அழியும்போது, புண்டரீகம் அழியும் போது இவ்வாகாசம் அழிவதில்லை.

இப்படி உள்ள ஆகாசத்தின் உள்ளே கல்யாண குணங்களான எட்டு - இதை உபாஸிக்க வேண்டும். இதனால் உபாஸிப்பவன் -

1) அபஹதபாப்மா (வினை இல்லாதவன்)
2) விஜர: (மூப்பில்லாதவன்)
3) விம்ருத்யு (மரணத்திற்கு இடமாகாதவன்)
4) விசோக: (துக்கமற்றவன்)
5) விஜிகத்ஸ: (பசியற்றவன்)
6) அபிபாஸ: (தாகமற்றவன்)
7) ஸத்யகாம: (நிலையான போக்யங்களை உடையவன்)
8) ஸத்யஸங்கல்ப: (தடையில்லாத ஸங்கல்ப சக்தியுள்ளவன்)

--- ஆக எட்டு குணங்களை அடைகிறான்.

வேதத்தில் சொல்லப்பட்ட சில கர்மாக்களைச் செய்து புண்ணிய பலன்களைப் பெற்றாலும், அதை அனுபவித்ததும் யாவும் அழிந்து விடும். ஆனால் ஆத்மாவையும் அதன் குணங்களையும் உபாஸிப்பவனுக்கு எல்லா பலன்களும் உண்டு.

இந்த பரமாத்மாவின் கல்யாண குணங்களை நாம் அறியாமல் இருப்பது நமது பாபத்தாலே. பூமிக்குள்ளே புதையல் இருந்தும், பூமியின் மேலே நடப்பவனுக்கு அது தெரிவதில்லை. அதைப் போல பரமாத்மாவை அறியாமல் இருக்கிறோம். இவன் ஹ்ருதயத்திலே இருக்கிறான். உபாஸகனாகிய ஜீவாத்மா உடலிலிருந்து பிரிந்த பிறகு பரஜ்ஜோதியை அடைகிறான் என்பது இந்த பரமாத்மாதான். இவன் சேதனம், அசேதனம் எல்லாவற்றையும் ஆள்கிறவன். எல்லா உலகங்களையும் எல்லா பூதங்களையும், எல்லா வஸ்துக்களையும் ஒன்றோடொன்று

கலந்து அழியாதபடி ஆங்காங்கு நிறுத்தி அதன் அதன் தன்மையோடு காக்கின்றான். இவனிடத்தில் எந்த தோஷமும் இல்லை. இவனைஅடைவதால் "தாபத்ரயம்" நீங்கும்.

இவனைப் பெற, ப்ரம்மச்சரியம் வேண்டும். ப்ரம்மச்சரியத்தாலே ப்ரம்ம லோகத்தில் "அரம்"என்றும் "புண்யம்" என்றும் சொல்லப்படும் இரண்டு ஸமுத்திரங்களையும் "ஐரம்மதீயம்" என்கிற தடாகத்தையும், "ஸோமஸவனம்" என்னும் அரச மரத்தையும் தாண்டி "அபராஜிதை" என்கிற ப்ரம்மத்தின் (பரமாத்மா) ராஜதானிக்குச் சென்று, பரமாத்மா எழுந்தருளியுள்ள அழகிய ஸ்தானத்தை அடைந்து ப்ரும்மானுபவம் பெறுகிறான். (பரமபதம் அடைகிறான்).

ஹ்ருதயத்தில் உள்ள எல்லா நாடிகளுக்கும் ஸூர்ய க்ரணங்களுக்கும் சம்பந்தம் உண்டு. ஹ்ருதயத்தில் உள்ள 101 நாடிகளில் ஒரு நாடி தலைப் பக்கம் உள்ள நாடியின் வழியே ஸூர்ய மண்டலம் போய் மனோவேகமாய் பரமபதம் (வைகுண்டம்) சேர்ந்தால் மேலே சொன்ன பலன்கள் உண்டு. இதுவே "தஹர வித்யை" எனப்படுகிறது.

## 18. ப்ரஜாபதி வித்யை

மேலே சொன்ன "பர" வித்யைக்கு இந்த ப்ரஜாபதி வித்யை அங்கம் (முண்டகோபநிஷத்தைப் பார்க்க). ப்ரஜாபதி தன் பிள்ளைகளான தேவர்களும், அசுரர்களும் க்ஷேமமாக இருப்பதற்காக ஆத்மாவை எட்டு குணங்களோடு அறிந்தவனுக்கு ஸர்வ லோகமும், ஸர்வ சுகமும் உண்டு என்பதாக சொன்னதே இந்த வித்யை.

தேவர்களில் ப்ரதானன் இந்திரனும், அசுரர்களில் ப்ரதானன் விரோசனனும், 32 வருஷ காலம் ப்ரம்மச்சர்யம் அனுஷ்டித்து ப்ரஜாபதியை அணுக அவர், "ஆத்மா கண்ணில் தெரிகிறதா?" என்று கேட்டார். கண்ணில் இருக்கும் நிழலை-அதன் பிரதிபிம்பம் தான் ஆத்மா என்று நினைத்தனர். விரோசனன் இதனையே அசுரர்களுக்கு உபதேசித்தான். அதனால் அவர்கள் தேஹாத்மவாதிகள் ஆனார்கள். இந்த்ரனுக்கு திருப்தி இல்லை.

அவன் ப்ரஜாபதியை மறுபடியும் கேட்க, அவர் படிப்படியாக ஸ்வப்ன அவஸ்தையில் உள்ள ஆத்ம ஸ்வரூபம், உறக்கத்தில் உள்ள ஆத்மஸ்வரூபம், இவற்றைச் சொல்ல இப்பொழுதும் இந்த்ரன் திருப்தி அடையவில்லை. 101 வருஷங்கள் ப்ரம்மச்சரியம் இருந்து "தஹர வித்யையில்" பகவானுக்கு உள்ள எட்டு குணங்களும் இவனுக்கும் உண்டு. இவன் உடலில் இருந்து புறப்பட்டு பரமாத்மாவை அடைந்து சுகப்படுகிறான் என்று உபதேசித்தார். இந்த்ரனும் திருப்தி அடைந்து தேவர்களுக்கு இதை உபதேஸித்தான். ஆத்மஸ்வரூபத்தை இந்த வித்யையினாலே ஜ்ஞான யோக பலத்தாலே அடைந்து பக்தியோகத்தில் இழிந்து மோக்ஷம் அடைவதே பலன்.

பகவானை கரிய திருமேனி உடையவனாகவும், சேதன அசேதனங்களுக்கு அந்தர்யாமியாகவும் இருவகைகளாக உபாஸிக்கிறேன். குதிரை மயிரை சிலிர்த்து உதறுவது போலே பாபங்களை உதறித்தள்ளி ராகுவினின்று விடுபட்ட சந்த்ரன்போலே சரீரத்திலிருந்து விடுபட்டு பரமபதம் சேருகிறேன். ஸத்வ குணத்தை அழித்து சுக்லதாதுவை உட்கொள்ளும் ஜன்மம் இல்லை.

இந்த ஸாந்தோக்ய உபநிஷத்தில் சொன்ன வித்யை யாவும் ப்ரஹ்மா ப்ரஜாபதிக்கும், ப்ரஜாபதி மனுவுக்கும், மனு ப்ரஜைகளுக்கும் உபதேசித்தது. ஆசார்யனை அணுகி உபதேசம் பெற்று இந்த்ரியங்களை ஆத்மாவிடம் செலுத்தி (இந்த்ரியங்களை அடக்கி) வைதீக கர்மாக்களைச் செய்து, ஜீவஹிம்சை செய்யாமல் மேற்சொன்ன வித்யைகளில் ஒன்றை உபாஸிப்பவர் ஆயுட்காலம் முடிந்ததும் ப்ரஹ்மத்தை (பரமாத்மா) அடைகிறான்.

ப்ரம்மத்தை அறிவது உபநிஷத்துக்களைக் கொண்டு. அந்த ப்ரம்மத்தை நான் உபாஸிப்பேன். ப்ரம்மம் என்னை ஆதரிக்கட்டும். ஆத்ம விஷயங்களில் ஈடுபட்ட எனக்கு உபநிஷத்துக்களில் சொல்லப்பட்ட தர்மங்கள் எல்லாம் ஸித்திக்க வேண்டும். அவை என்னை ரக்ஷிக்க வேண்டும்.

## 19. புருஷாத்மவித்யை

(இது ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் வருகிறது. இருந்தாலும், வித்யைகளை வரிசையாக சொல்லிக் கொண்டு இருப்பதால், இங்கு சேர்க்கப்பட்டு விவரிக்கப்படுகிறது).

முதன் முதலில் ஆத்மா ஒரே புருஷ ரூபமாக இருந்தது. இதற்கு (பரமாத்மா) புருஷன் என்றே பெயர். தனிமையில் சுகம் பெறாமல், இரண்டாவதாக ஒன்றை விரும்பி ஸ்த்ரீயும், புருஷனும் சேர்ந்ததோர் உருவமாகி, பிறகு ஸ்த்ரீ வேறு, புருஷன் வேறு என்று பிரித்துக் கொண்டது. இருவரும் புணரும் போது தான் பிறப்பித்த ஸ்த்ரீயோடு தானே புணர்வது சரியல்ல என்று கருதி, ஸ்த்ரீயானவள் பசுவாக மாறினாள். இங்ஙனம், ஒவ்வொன்றிலும், ஸ்த்ரீ புருஷ பேதம், எல்லா ஜீவ ராசிகளிலும் ச்ருஷ்டி செய்து, தன் உள்ளங்கையிலிருந்து பரமாத்மா அக்னியைப் படைத்தது. தேவர்கள் ச்ருஷ்டி, ஸனக, ஸனந்தாதி முதலிவர்களின் ச்ருஷ்டி செய்யப்பட்டது. அவை ஒவ்வொன்றிலும் பரமாத்மா உட்புகுந்தது. அந்த ஆத்மாவை உபாஸிக்க வேண்டும்.அடையப்பட வேண்டியது அதுவே. இதற்கு "ஆத்மோபாஸனம்" என்று பெயர். இவனுக்கு தேவர்களும் இடைஞ்சல் செய்ய மாட்டார்கள். ஆனால், தேவர்களையோ மற்ற தேவதைகளையோ உபாஸிப்பவன், அவர்களுக்கு தாஸனாய், மாடு போல் உழைக்க வேண்டியவனாகிறான். மனிதர்களுக்கு ஆத்மஜ்ஞானம் ஏற்படுவதை தேவர்களும், இதர தேவதைகளும் விரும்புவதில்லை. தனக்கு உழைக்கும் மாடு தன்னை விட்டு போய் விடுகிறது அல்லவா?

ஒருவன் பூர்ணனாவதற்கு, மனைவி, புதல்வன், பணம், நல்ல செய்கை என்கிற நான்கும் பொருந்தியிருக்க வேண்டும். வாக்கு-மனைவி, ப்ராணன் - புதல்வன், கண்ணும், காதும்-பணம். உடலே -நல்ல செயல்களைச் செய்ய உதவுகிறது. இவ்வளவாக ஜீவன் பூரணணாக இருந்து பரமாத்மாவை உபாஸிக்க வேண்டும்

அனைவருக்கும் தந்தையான பரமாத்மா ஏழு அன்னங்களை உண்டாக்கினான். அவற்றில் ஒன்றை எல்லாருக்கும் பொதுவாக ஆக்கினான். (இது நாம் தினந்தோறும் உண்பது. தேவர்கள்,

விருந்தினர் இவர்களுக்கு அளித்த பிறகே நாம் உண்ண வேண்டும். ஏனெனில் இது யாவருக்கும் பொது அல்லவா?) தேவர்களுக்கு இரண்டை அளித்தான் (வேதங்களிலும், ஸ்ம்ருதிகளிலும் அவர்களுக்காக விதிக்கப்பட்ட தர்ஸபூர்ண மாஸங்கள் என்கிற கர்மாக்கள்) ஒன்றை பசுவுக்கு அளித்தான். (இது பாலைக் கொடுக்கிறது). மூன்றை தனக்காக வைத்துக் கொண்டான் (மனம், வாக்கு, ப்ராணன்)

எல்லா இந்த்ரியங்களுக்கும் மனஸே முக்கியம். மனஸ் வேறு ஏதாவதில் லயித்திருந்தால் கண்ணில் பட்டது காணப்படாது. காதில் கேட்டது கேட்கப்படாது. விருப்பம், ஸங்கல்பம், ஐயம், நம்புதல், அவநம்பிக்கை, தைரியம், அதைரியம், வெட்கம், அறிவு, பயம் -- இவை எல்லாவற்றுக்கும் காரணம் மனஸே. இப்படியே வாக்கு என்கிற இந்த்ரியமும் முக்கியமானது. மூன்றாவது ப்ராணன். இது ப்ராண-அபான- வ்யான-உதான-ஸமானங்களாக இருக்கின்றன. மூன்று அன்னங்களாலே ஆத்மா தன்னுடைய நிலையைப் பெறுகிறது.

இவற்றில் ப்ராணனுக்கு தேவதை சந்த்ரன். அவனுக்கு 16 கலைகள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கலையாக 15 கலைகள் அழியும். அவையே மறுபடியும் வளரும். 16வது கலை அழிவற்றது. அமாவாஸ்யை அன்று சந்த்ரன் இந்த கலை (16வது கலை) மூலம் எல்லா பிராணிகளுக்குள்ளும் புகுந்திருப்பான். சந்த்ரனைப் போலவே புருஷனுக்கும் 16 கலைகள். தானே ஒரு கலை. அது அழிவற்றது. அழியும் கலைகள் 15. இது அவருடைய சொத்து. சொத்துகள் அழிவதும், வளர்வதும் நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்ட புருஷன், புத்திரனைப் பெற்று மனுஷ்ய லோகத்தையும், காம்ய கர்மங்களைச் செய்து பித்ரு லோகத்தையும், பக்தியோகம் செய்து தேவ லோகத்தையும் (பரமபதம் என்று இங்கு பொருள் கொள்க) பெற வேண்டும்.

வாயு தேவதை எப்போதும் வீசிக் கொண்டே இருக்கிறது. அக்னி எரித்துக் கொண்டே இருக்கிறது. வெயில் காய்ந்து கொண்டே இருக்கிறது. நிலவும் அப்படியே. இவைகளுக்கெல்லாம் அஸ்தமனம் என்பது உண்டு. ஸூர்ய சந்த்ரர்கள் வானத்தில் சஞ்சரிப்பதற்கு வாயுவின் சகாயம்

வேண்டும். வாயுவே உயர்ந்தது. ப்ராணனும் ஒரு வாயுவே. இந்த்ரியங்களில் ப்ராணன் உயர்ந்தது. ப்ராணனுக்கு மேற்பட்ட ஜீவாத்மாவும், பரமாத்மாவும் கூட ப்ராணன் என்றே அழைக்கப்படுவது உண்டு. ப்ராணன் அம்ருதம்; ஆத்மா அம்ருதம். இப்படி ஜகத்காரணனான பரமாத்மாவை உபாஸிக்க வேண்டும்.

## 20 - பாலாகி வித்யை

(இதுவும் ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் உள்ளதே).

அஜாதசத்ரு என்கிற அரசனிடம், பாலாகி என்பவன் தன்னுடைய ப்ரம்மஜ்ஞான அறிவை வெளிப்படுத்த ஆவல் கொண்டு அரசனிடம் சென்று தன்னுடைய அறிவாற்றலை வெளிப்படுத்தினான். ஸூர்ய மண்டலம், சந்த்ர மண்டலம், மின்னல், ஆகாயம் இப்படி ஒவ்வொன்றாக சொல்லி அங்கேயுள்ள ஆத்மாவை (ஜீவாத்மா) ப்ரம்மமாகச் சொன்னான். அஜாதசத்ரு இதை ஒப்புக் கொள்ளாமல், இவற்றை மறுத்து, வாதிட்டான். பாலாகி அஜாதசத்ருவைப் பணிந்து, ப்ரம்மத்தைப் பற்றி சொல்லுமாறு கேட்டான். அஜாதசத்ரு பாலாகியை அழைத்துக் கொண்டு, தூங்குபவன் அருகில் சென்று, அவனை எழுப்பினான். அவன் எழுந்திருக்காமல் இருக்கவே, கையால் அசைத்து எழுப்பினான். அவன் எழுந்தவுடன், அரசன் பாலாகியைப் பார்த்து "இப்போது விழித்தவன், உறங்கும்போது எங்கு இருந்தான் என்பது உனக்கு தெரியுமா? எங்கேயிருந்து வந்தான் என்பது தெரியுமா?" என்று கேட்டான். பாலாகிக்கு பதில் சொல்ல தெரியவில்லை.

அரசன், இப்போது, அவனுக்கு உபதேசித்தான்.

தூங்க ஆரம்பிக்கும்போது, இந்த்ரியங்கள் வேலை செய்வதிலிருந்து ஓய்வு பெற ஆரம்பிக்கின்றன. ஜீவன் ஸ்வப்னம் காண இருக்கும் நாடிகளில் சென்று ஸ்வப்னங்களைக் கண்டு, பிறகு ஹ்ருதயத்திற்குச் சென்று, அங்கிருந்து ஆகாசம் சென்று பரமாத்மாவிடம் உறங்குகிறது. இப்படி தூங்கி எழுந்திருக்கும்போது பரமாத்மாவிடமிருந்து வெளிப்படும்போது

இந்த்ரியங்களுடன் சேர்ந்து எல்லா உணர்ச்சிகளையும் திரும்பப் பெறுகிறது. (கௌஷீதகி உபநிஷத்தில் இது விவரமாக சொல்லப்பட்டுள்ளது).

ஜீவாத்மா அதாவது ப்ராணன் - பசுங்கன்று. இதற்கு கர்ப்பஸ்தானம் ஹ்ருதயம். இது வெளிப்பட்டு விளங்கும் ஸ்தானம் உடல். அன்னம் என்கிற கயிற்றால் கட்டப்பட்டுள்ளது. இப்படி உணர்ந்தவருக்கு ஏழு சத்ருக்களால் அழிவில்லை. (இரண்டு கண், இரண்டு காது, இரண்டு நாசித்வாரம், வாய் ஆக ஏழு). தலையில் நிலைத்துள்ளது ப்ராணன்.

ப்ரம்மத்திற்கு இரண்டு ரூபங்கள். மண், நீர், நெருப்பு இதில் தங்கியிருப்பது ஒரு ரூபம். இது மூர்த்த ரூபம். வாயுவும், ஆகாயமும் மற்றொரு ரூபம் - இது அமூர்த்த ரூபம். இது சத்யத்திற்கெல்லாம் சத்யம். (சத்யம்-ஜீவாத்மா. அவற்றுக்கெல்லாம் சத்யம் -ப்ரம்மம்-பரமாத்மா).

## 21. மைத்ரேயி வித்யை

(இதுவும் ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் உள்ளதே)

யாஜ்ஞ வல்க்யர் மஹரிஷி. அவருக்கு இரண்டு மனைவிகள். மூத்த மனைவி மைத்ரேயி. இளைய மனைவி காத்யாயனி. இது யாஜ்ஞ வல்க்யருக்கும் அவரது மனைவி மைத்ரேயிக்கும் நடந்த ஸம்வாதம்.

மைத்ரேயி - பூமி அளவு பணம் கிடைத்தாலும், அதனால் மோக்ஷம் பெற முடியுமா?

யாஜ்ஞவல்க்யர் - முடியாது. சொத்து இருந்தால் இந்த உலக வாழ்க்கைக்கு உபயோகப்படும். மோக்ஷம் பெற இயலாது.

மைத்ரேயி - சொத்தை பிரித்துக் கொடுப்பதாகச் சொன்னீர்கள். மோக்ஷத்திற்கு உபயோகப்படாதது எனக்கு எதற்கு? மோக்ஷ உபாயத்தை உபதேசியுங்கள்.

யாஜ்ஞவல்க்யர் - மிக்க சந்தோஷம். நான் சொல்வதை கவனமாகக் கேள். ஒருவருக்கொருவர் பிரியமாவது என்பது நாம் நினைப்பதால் அல்ல. பரமாத்மா அப்படி நினைத்தால்தான் அது நடக்கும். எப்போதும் ப்ரியமாக இருக்கும் பரமாத்மாவை உபதேசம் மூலமாக கேட்டு அறிந்து த்யானித்து அனுபவிக்க வேண்டும். இதை அடைய இந்த்ரியங்களை அடக்க வேண்டும். இந்த பரமாத்மா, விஜ்ஞானாத்ம (ஜீவாத்ம) ஸ்வரூபனாய் பஞ்ச பூதங்களோடு கலந்து வருகிறது.

மைத்ரேயி - இதை விளக்க வேணும்

யாஜ்ஞவல்க்யர் - எல்லாம் ஆத்மாவே என்று அறியாதவன்- அறிகிறவன், அறியும் கருவி, அறியப்படுபவது இவற்றை வெவ்வேறாக பார்ப்பான். எங்கும் வ்யாபித்துள்ள ஆத்மாவாகவே எல்லாவற்றையும் காண்பவனுக்கு இப்படி வேறுபாடு தோன்றாது. எதைக் கண்டாலும் ஆத்மாவைக் காண்பதாகவே தோன்றும்.

## 22 - பர்யங்க வித்யை (இது கௌஷீதகி உபநிஷத்தில் உள்ளது)

சித்ரன் என்கிற அரசன், அருணரின் புதல்வரை யாகம் செய்விக்க வேண்டினான். அவர் தன் புத்ரனான ச்வேதகேதுவை அனுப்பினார். அரசன், ச்வேதகேதுவைப் பார்த்து, "என்னையோ மற்றவரையோ (மற்ற அரசர்களையோ) யாகம் செய்வித்து அதனால் அடையப்படும் லோகத்தைப் பற்றிய ரகஸ்யம் உள்ளதா? அது உங்களுக்கு தெரியுமா? அதன் மார்க்கம் என்ன?" என்று கேட்டார்.

ச்வேத கேதுவுக்கு பதில் சொல்ல தெரியவில்லை. தகப்பனாரிடம் திரும்பி விட்டான். தகப்பனாரிடம் நடந்ததைச் சொன்னான். தகப்பனாருக்கும் தெரியவில்லை. அவர் அரசனிடம் சென்று இதை தெரிவிக்க வேண்டினார்.

அரசன் சொன்னதாவது - இவ்வுலகில் மரணம் அடைபவர் சந்த்ர லோகம் செல்கின்றனர். சந்த்ரன் மேலுலகத்திற்கு வாசல் போன்றவன். சந்த்ரன் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்பவரை மேலே செல்லுமாறு அனுமதிக்கிறான். பதில்

தெரியாதவனை மழை மூலமாகத் திருப்பி, உலகத்திற்கே அனுப்புகிறான். அப்படி திரும்பியவன் இவ்வுலகில் மறு பிறவி எடுக்கிறான்.

சந்த்ரன் "நீ யார்?" என்று கேட்க, பஞ்சாக்னி வித்யையில் சொல்லியபடி ஐந்து நிலைகளைப் பெற்று, பிறவியை அடைந்தவன். இனி என்னை அவ்வாறு பிறக்குமாறு விடவேண்டாம், பகவான் சத்யம் என்று தவத்தாலே உணர்ந்தேன் என்று பதில் சொல்பவனை சந்த்ரன் விட்டு விடுகிறான். அப்படிச் சொல்பவனை மேலே (அர்ச்சிராதி மார்க்கத்தில்) போக அனுமதிக்கிறான். அப்படி அனுமதிக்கப்பட்டவன் அக்னி லோகம், வாயு லோகம், வருண லோகம், ஆதித்ய லோகம், இந்த்ர லோகம், ப்ரம்ம லோகம் என்று இப்படி அர்ச்சிராதி மார்க்கத்தில் செல்கிறான்.

ப்ரம்ம லோகத்தில் அரம் என்கிற மடு உள்ளது. முஹூர்த்தர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள், அயலாரை தடியால் அடித்து விரட்டுவார்கள். இதற்கு மேலே "விரஜை" என்கிற ஆறு. திவ்யம் என்கிற வ்ருக்ஷம். "ஸாலஜயம்" என்று சொல்லப்படும் "அபராஜிதம்" என்கிற ராஜதானி. இதற்கு இந்த்ரன், ப்ரஜாபதி என்று இரண்டு த்வாரபாலகர்கள். "ப்ரபுவிமிதம்", "விஷப்ரமிதம்" என்று சொல்லப்படும் விசாலமான மண்டபம். "விசக்ஷணை" என்கிற பீடம். அமிதௌஜஸ் எனப்படும் அளவற்ற ப்ரகாசம் உடைய கட்டில். எல்லாவற்றையும் கொள்ளை கொள்ளும் தேவியர்கள். எண்ணற்ற ஸ்த்ரீ ரத்னங்கள். இத்தகைய ப்ரம்ம லோகத்திற்கு இவன் வருகிறான். பகவான் "விரஜை" ஆற்றின் அருகே வந்து கட்டளையிட்டதும், கையில் மாலையுடன் 100 திவ்ய அப்ஸரஸ்கள், மையை வைத்துக் கொண்டு 100 திவ்ய அப்ஸரஸ்கள், கந்தப் பொடி, பட்டு வஸ்த்ரம், ஆபரணங்கள் இவைகளை ஏந்திக் கொண்டு நூறு, நூறு அப்ஸரஸ்கள்-ஆக 500 அப்ஸரஸ்கள் இவனுக்கு அலங்காரம் செய்கின்றனர்.

அர்ச்சிராதி மார்க்கத்தில் வந்த ஜீவன் (முக்தன்) "அரம்" என்கிற மடுவை நினைத்த மாத்திரத்தில் தாண்டி,

முஹூர்த்தர்கள் விலகி வழிவிட "விரஜை" ஆற்றையும் நினைத்த மாத்திரத்தில் கடந்து, "திவ்யம்" என்கிற மரத்தை அணுகி, ப்ரம்மத்தின் நறுமணம் இவனுடைய சரீரத்திற்கு ஏற்பட "ஸாலஜ்யம்" என்கிற இடத்திற்கு வந்து "அபராஜிதம்" என்கிற அரண்மனையில் புகுந்து "ப்ரம்ம தேஜஸ்" ஜொலிக்க, இந்த்ரன், ப்ரஜாபதி என்கிற இரு த்வாரபாலகர்கள் வழிவிட, "விஷப்ரமிதம்" என்கிற மண்டபத்தை அடைந்து, "ப்ரம்மயசஸ்" வந்து சேர, விசக்ஷணை என்கிற பீடத்தை நெருங்கி, "அமிதௌஜஸ்" என்கிற கட்டிலை அடைய, பகவான் இவனை "நீ யார்?" என்று கேட்க, முக்தன் "ஸ்வர்க்கத்திலிருந்து ஆகாசம், வாயு, மேகம் முதலிய வழிகளில் கீழே இறங்கி எண்ணற்ற பிறப்புகள் எடுத்த ஜீவாத்மா. நீர் எல்லா ஜீவாத்மாக்களுக்கும் ஆத்மா அதாவது பரமாத்மா. அடியேனுக்கும் ஆத்மா. நான் மனஸ், வாக்கு, உடல் மற்றும் இந்த்ரியங்களின் உதவியுடன் ஆண், பெண், அலி என்று பற்பல ஜென்மம்/உருவங்கள் எடுத்தேன். உடல், இந்த்ரியம், மனஸ், ப்ராணன், அறிவு இவற்றையெல்லாம் விட நான் மேலானவன் என்று தெரிந்து கொண்டேன். தேவரீரை ஆத்மாவாக உடையவன். தேவரீருக்கே சேஷபூதன்"என்று பதில் சொல்கிறான்.

பர்யங்க வித்யையான இதில் சொல்லப்பட்டபடி பகவானை உபாஸிப்பவர் பகவானின் திருவடிகளை அடைவர்.

## 23. ப்ரதர்தந வித்யை

(இதுவும் கௌஷீதகி உபநிஷத்தில் உள்ளது).

திவோதாஸன் என்பவரின் குமாரன் ப்ரதர்தனன். மிகவும் பராக்ரமசாலி. சண்டைகளில் இந்த்ரனுக்கு உதவி செய்தவன். ஒரு சமயம் இந்த்ரன் இடமான ஸ்வர்க்க லோகம் சென்றான். இந்த்ரன் இவனிடம் "வரன் அளிக்கிறேன் கேள்", என்றான். ப்ரதர்தனன் "மனிதனுக்கு எது ஹிதமோ, அதையே வரமாக எனக்கு அளிப்பாயாக" என்றான்.

இந்த்ரன் சொன்னதாவது:

என்னை உபாஸனை செய். என்னை உபாஸித்தால் மாத்ருஹத்தி, பித்ருஹத்தி, களவு, கர்ப்பஹத்தி போன்றவற்றால் வரும் பாபம் கிடையாது. பாபம் செய்ததற்காக முகம் கருக்காது. நான் ப்ராணன். என்னை ஆயுள் என்றும், அம்ருதம் என்றும் உபாஸனம் செய். இதனால் முழு ஆயுளைப் பெற்று ஸ்வர்க்க லோகத்திலும் அழியாமல் இருப்பாய்.

ப்ராண வாயு எல்லா இந்த்ரியங்களிலும் வ்யாபித்து இந்த்ரியங்களை வேலை செய்யச் செய்கிறது. ப்ராணனே ப்ரஜ்ஞை. ப்ரஜ்ஞையே ப்ராணன். இரண்டும் சேர்ந்தே இருக்கும். சேர்ந்தே உடலிலிருந்து புறப்பட்டு விடும். ப்ரஜ்ஞை என்பது ஜீவன். இவற்றுக்கு ஆத்மா பகவான். ஆனந்த ஸ்வரூபன்; பிறப்பு இறப்பு அற்றவன்; நல்வினை, தீவினைகளுக்கு அப்பாற்பட்டவன் ; உலகங்களைக் காப்பவன் ; நியமிக்கிறவன் ; இப்படிப்பட்டவனை எனக்கும் ஆத்மாவாக உபாஸனை செய். இதுவே "ப்ரதர்தன வித்யை" ஆகும்.

## 24. சாண்டில்ய வித்யை

(அக்னி ரஹஸ்யத்தில் இருக்கிறது)

ஸத்யத்தை ப்ரம்மமாக உபாஸிப்பாயாக. ஸத்யம் என்கிற ப்ரம்மம் எல்லாவற்றுக்கும் ஆத்மா. எங்கும் பரந்தவன். அணுவுக்கும் அணுவானவன். எல்லாவற்றிலும் பெரியவன். எனக்கும் ஆத்மா என்று உபாஸனை செய்ய வேண்டும் என்று ச்வேதகேதுவுக்கு சாண்டில்யர் கூறினார்.

## 25. புருஷ வித்யை மற்றும் 26. ந்யாஸ வித்யை

ப்ரஹ்மணேத்வா மஹஸ ஓம் இதி ஆத்மாநம் யுஞ்ஜீத..... என்று ஆரம்பிப்பது "ந்யாஸ வித்யை". தஸ்யை - வம் விதுஷ..... என்று ஆரம்பித்துச்சொல்லப்படுவது "புருஷ வித்யை" (புருஷ வித்யை---தைத்திரீய நாராயண உபநிஷத் )

ஆத்மாவாகிற ஹவிஸ்ஸை பரமாத்மாவிடம் சேர்ப்பித்தலாகிற யாகம் என்று சொல்லலாம் (யஜ்ஞ ரூபமாகச் செய்யப்படுகிற ந்யாஸ வித்யை) இதற்கு ஆத்மா - யஜமானன். ஸ்ரத்தா - ஆஸ்திக புத்தி. பத்னீ - தர்மபத்னீ. ஸரீரம் - ஸமித்து. மார்பானது யாகம் பண்ணுமிடம், அதாவது அக்னிகுண்டம். உடம்பில் உள்ள ரோமங்கள் - பரிஸ்தரணம். தலைமயிர் - தர்ப்பக்கட்டு. ஹ்ருதயம் - யூபஸ்தம்பம். ஆசையானது நெய் . கோபமானது - வெள்ளாடு. ஆலோசிக்கிற அறிவு - நெருப்பு. எல்லா வஸ்துக்களுக்கும் அநுகூலமாக இருக்கிற அறிவு - தக்ஷிணை. வாக்கு - ஹோதா. ப்ராணன் - ஸாமகானம் பண்ணுகிற ருத்விக். கண் - அத்வர்யு என்கிற ருத்விக். மனம் - ப்ரஹ்ம என்கிற ருத்விக். காது -அக்நீத்ரன் என்கிற ருத்விக். எவ்வளவு காலம் உயிருடன் இருக்கிறோமா அது யாக தீக்ஷை. எதைச் சாப்பிடுகிறானோ, குடிக்கிறானோ - அது ஸோமபானம். விளையாடுகிறான் என்று சொல்லப்படுவது "உபஸத்" என்கிற யாகம். நடப்பது, எழுந்திருப்பது, உட்காருவது - அது "ப்ரவர்க்யம்" என்கிற யாகம். முகம் - ஆஹவநீயம் என்கிற அக்னி. இவரது அறிவு - ஹோமப் பொருள். காலையிலும், மாலையிலும் சாப்பிடுவது - அது ஸமித். மாலை, காலை, மதியம் என்பவை மூன்று ஸவனங்கள் (தாநி, ஸவநாநி போன்றவை) பகல் இரவுகள் - தர்ச பூர்ணமாஸ இஷ்டிகள். பக்ஷங்கள், மாதங்கள் - சாதுர்மாஸ்ய யாகம். ருதுக்கள் -பசு பந்தம். வருஷங்கள், அவற்றின் உட்பிரிவுகள் - அஹர்கணம்.

இந்த யாகமானது எல்லாச் சொத்தையும் தக்ஷிணையாக கொண்டது. மரணம் - அவப்ருத ஸ்நானம் (சாந்தோக்யத்தில் 3 - 16-1 சொல்லப்பட்ட புருஷ வித்யை வேறு) சாந்தோக்யத்தில் சொல்லப்பட்டது, ஆயுப்ராப்தியை பலமாக உடைய ஸ்வதந்த்ர வித்யை என்று ஸ்வாமி தேசிகன் அதிகரண ஸாராவளியில் அருளியுள்ளார்.

அர்ச்சிராதி மார்க்கம் --- இந்த மார்க்கம், உபகோசல வித்யை, பஞ்சாக்னி வித்யை, பர்யங்க வித்யைகளில் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ப்ரஹ்ம உபாஸகர்கள் எல்லோரும் அர்ச்சிராதி கதியைச் சிந்தனை செய்ய வேண்டும் என்கிற எண்ணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

உபநிஷத்தில் விவரிக்கப்பட்டுள்ள (பக்தி யோகத்தில் சொல்லப்படும்) மிகக் கடினமான ப்ரஹ்ம வித்யைகள் - 32. இவை உபாஸனா மார்க்கங்கள். அவையாவ:

1. அக்னிவித்யை
2. அக்ஷர வித்யை
3. ஆனந்த வித்யை
4. அதிம்ருத்யுபாஸன வித்யை
5. பாலாகி வித்யை
6. பூம வித்யை
7. ப்ரஹ்ம வித்யை
8. சாண்டில்ய வித்யை
9. தஹர வித்யை
10. ஜ்யோதிர் வித்யை
11. கோச விஜ்ஞான வித்யை
12. மது வித்யை
13. மைத்ரேயி வித்யை
14. கௌரக்ஷ ஜ்யோதிர் வித்யை
15. ந்யாஸ வித்யை
16. பஞ்சாக்னி வித்யை
17. பர வித்யை
18. பர்யங்க வித்யை
19. ப்ரஜாபதி வித்யை
20. ப்ராண வித்யை
21. ப்ரதர்ன வித்யை
22. புருஷ வித்யை
23. புருஷாத்ம வித்யை
24. ரைக்வ வித்யை
25. புருஷோத்தம வித்யை
26. ஸத் வித்யை
27. ஸர்வ பர வித்யை
28. ஷோடஸ கல ப்ரஹ்ம வித்யை
29. உத்கீத வித்யை
30. உபகோஸல வித்யை
31. வைஷ்ணவ வித்யை
32. வைச்வாநர வித்யை

## மோக்ஷம் அடைய இரண்டு வழிகள்:

முதல் வழி : 1) பக்தி யோகம் மூலமாக (2) ப்ரபத்தி மூலமாக பரமபதத்தை அடையலாம் என்று சொல்லப்படுகிறது. முதல் வழியில் பகவான் ஸ்ரீகிருஷ்ணன் ஸ்ரீமத் பகவத்கீதையில் அருளிய "கர்ம யோகம்" , "ஞான யோகம்", இரண்டையும் நன்கு புரிந்து கொண்டு (கசடறக் கற்று) பிறகு "பக்தி யோகத்தில்" இழிந்து 32 உபாஸனா மார்க்கங்களில் ஏதாவது ஒன்றில் "தைலதாரை" போன்று புத்தியைச்செலுத்தி பகவானை அடைதல். இப்படிச் செய்து கொண்டே வந்தால், பலப்பல ஜன்மங்கள் எடுத்து, அந்தந்த ஜன்ம வாசனையாலே இந்த புத்தி தொடர்ந்து இருந்து, ஏதாவது ஒரு ஜன்மத்தில் பகவானின் திருவடியை அடையலாம். பெரிய ஞானிகளுக்கும், மஹான்களுக்கும், மஹரிஷிகளுக்கும் இது முடியுமோ, என்னவோ?

நம்மைப்போன்ற பரம லௌகீகத்தில் உழலும் சம்சாரிகளுக்கு ஏற்றது இரண்டாவது வழியான ப்ரபத்திதான். இராமாயணம் முழுவதும் ப்ரபத்தி தர்மத்தைச் சொல்கிறது. ப்ரஹ்ம வித்யைகள் எல்லாம் பகவானை அடைவதற்கான சாதன வித்யைகள். சத் வித்யா, பூம வித்யா, தஹர வித்யா, உபகோசல வித்யா, சாண்டில்ய வித்யா, வைச்வா நர வித்யா, ஆனந்த மய வித்யா, அக்ஷர வித்யா முதலிய வித்யைகள் ஒரே சாகையில் இருப்பவைகள் மற்றும் அனேக சாகைகளில் இருப்பவைகளுக்கான உதாரணங்கள். இப்படிப்பட்ட ப்ரஹ்ம வித்யையானது மரண கால பர்யந்தம் இடைவிடாமல் தினந்தோறும் அநுஷ்டிக்கப்பட வேண்டி இருக்கிறது. இங்கு 32 ப்ரஹ்ம வித்யைகளின் பெயர்களும் சில வித்யைகளின் விவரமும் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. விவரம் கொடுக்கப்படாத வித்யைகள் உபநிஷத்து ரூபமாகவே இருக்கலாம். பரமபதவாஸி ஸ்ரீ உ.வே. முக்கூர் லக்ஷ்மீ ந்ருஸிம்ஹாச்சாரியார் ஸ்வாமி இந்த 32 ப்ரஹ்ம வித்யைகளை அடிக்கடிச் சொல்வார். அநேகர் அவருடைய உபந்யாஸத்தில் கேட்டிருக்கலாம். இந்த 32 வித்யைகளுக்கும் ஆதாரம் ஸ்ரீஹயக்ரீவன். எல்லா வித்யைகளுக்குமே ஆதாரம் ஸ்ரீஹயக்ரீவன். பகவான், ஸ்ரீஹயக்ரீவ அவதாரம் எடுத்து வேதங்களை, மது, கைடபர்களிடமிருந்து மீட்டுத் திரும்பவும்

ப்ருஹ்மாவுக்கு உபதேசித்ததால்தான், வேதம் எல்லா உலகங்களிலும் பரவி இருக்கிறது. நீங்கள், உங்கள் இரண்டு காதுகளையும் இரண்டு கைகளால் இலேசாக மூடிக் கொண்டவுடன், கேட்கும் சப்தம் வேதம் சம்பந்தப்பட்டது.

ஸ்ரீந்ருஸிம்ஹ தாபநீய உபநிஷத்தில் ஸ்ரீந்ருஸிம்ஹ அநுஷ்டுப் மந்த்ரம் 32 அக்ஷரங்களாக உள்ளது.

ஸ்ரீஹயக்ரீவனைப் பற்றிய முக்ய மந்த்ரம் 32 அக்ஷரங்களிலுள்ள அநுஷ்டுப் ச்லோகம்.

இவை, 32 ப்ரஹ்ம வித்யைகளைக் குறிப்பதாகப் பெரியோர் சொல்வர்.

ஆக 32 ப்ரஹ்ம வித்யைகளின் பெருமையையும், அருமையையும் சொல்லில் விவரிக்க இயலாது.

## 10 ப்ருஹதாரண்யக உபநிஷத்து

இது உருவில்பெரியது. சுக்ல யஜுர் வேதத்தைச் சேர்ந்த சதபத ப்ராம்மணத்தின் கடைசிப் பகுதி. இது காண்வம், மாத்யந்தினம் என்று இரண்டு பிரிவுகள். (கிளைகள்). ப்ராஹ்மணம் - காண்வ சாகையிலும் மாத்யந்தின சாகையிலும் உள்ளது.

எட்டு அத்யாயங்கள் இதில் உள்ளன. முதல் இரண்டு அத்யாயங்கள் ஜ்ஞானத்தைப் பற்றிச் சொல்கிறது. "ப்ரவர்க்யம்" என்கிற ஸோம யாகத்தைச் சேர்ந்த ஒரு அங்கத்தைச் சொல்வதாகவும்சொல்வர். மீதி ஆறு அத்யாயங்களுக்கும் பாஷ்யம் (விரிவுரை) உண்டு .

ஒன்றை மற்றொன்றாகப் பாவிப்பது "த்ருஷ்டி விதி" எனப்படும். அச்வமேத யாகம் தொடங்கி, ஒரு வருஷ காலம் கழித்து இதைச் செய்ய வேண்டும் என்று சொல்லப்படுகிறது (ஒன்றை மற்றொன்றாகப் பாவிப்பது). குதிரையின் தலை, கண், ப்ராணன் முதலிய அங்கங்களை விடியற்காலை வேளை (உஷத் காலம்) சூர்யன், வாயு இவைகளைப் போல பாவிக்க வேண்டும். யாகம் செய்பவன் இது போன்ற பாவனைகளைத் தெளிந்து செய்ய வேண்டும். விரைவில் பலன் பெறலாம்.

பரமாத்மா உருவத்தை எடுக்க விருப்பம் கொண்டு ஜலத்தை உற்பத்தி செய்தது. ஜலத்தின் சாரமாக, பூமி உண்டாயிற்று. அதிலிருந்து, அக்னி உண்டாயிற்று. அக்னியே, ஆகாயத்தில் வாயுவாகவும், மேலுலகில் ஆதித்யனாகவும் உள்ளது. அக்னி என்கிற உருவத்தை எடுத்த பரமாத்மா, ஸம்வத்ஸரத்தை உண்டாக்கியது. ஆதாவது பல ஸம்வத்ஸர காலம் (பல வருஷங்கள்) ப்ராணிகளை படைக்கும் ப்ரஹ்மா என்று கொள்ளலாம்.

ப்ரஹ்மஞானம் உண்டாகத் தடையாக இருக்கும் பாபங்களைப் போக்க ப்ராணனை உபாஸிக்கச் சொல்கிறது.

"மதுப்ராம்மணம்" என்பது இதில் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு இந்த்ரியத்திற்கும் ஒரு அதிஷ்டான தேவதை உண்டு.

தேவதைகள் இஷ்டப்படி இவை இருக்கின்றன. ஆதலால் மது என்று பெயர். இந்த தேவதைகள், "மற்ற எல்லாருக்கும், அழிவே இல்லாமல் ஒருவன் அந்தர்யாமியாக இருக்கிறான். அவனே ஆத்மா; அவனே மது" என்று உபாசித்தன (பரமாத்மாவை). இந்த மது ரஹஸ்யத்தை "தத்தியங்" என்கிற மஹரிஷியிடத்தில் "அச்வினி தேவர்கள்" வந்து, இந்த வித்யையை உபதேசிக்குமாறு கேட்டார்கள். இந்த ரஹஸ்யத்தை வெளியிட்டால் தலையை வெட்டி விடுவதாக இந்த்ரன் சொல்லியிருப்பதால்அஞ்சுகிறேன் என்றார் முனிவர். உங்களுடைய தலையை வெட்டி, தனியாகப் பாதுகாத்து குதிரையின் தலையைப் பொருத்துகிறோம். நீங்கள் உபதேசியுங்கள். இந்த்ரன் வெட்டுவதாயிருந்தால், இந்த குதிரைத் தலையைத் தான் வெட்ட வேண்டும். வெட்டியவுடன் உங்கள் தலையைப் பொருத்தி விடுகிறோம் என்றனர் அச்வினி தேவர்கள் - வைத்யர்கள் அல்லவா? மஹரிஷி ஒப்புக் கொண்டு ரஹஸ்யத்தை தேவர்களுக்கு குதிரை முகமாக உபதேசித்தார். (ஹயக்ரீவ ஸ்வரூபம்)

"பரமாத்மா எல்லா உயிர்களிலும் இருக்கிறான். உள்ளே, வெளியே எங்கும் இருக்கிறான். அவன் இல்லாத இடமே இல்லை. உலக வ்யவஹாரங்களை நடத்த பற்பல உருவங்களை எடுத்துக் கொள்கிறான். ஹரியானவன் அவன் பல ஆயிரக்கணக்கான ஹரியாக ஆகிறான். இந்தப் பரமாத்மா, எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் இருந்து ஸர்வேச்வரன் என்று நிரூபித்துக் கொண்டிருக்கிறான்". இதுதான், உபதேசத்தின் சுருக்கம். இந்த்ரன் கோபத்துடன் வந்து, முனிவரின் தலையை (குதிரைத்தலை) வெட்ட, அச்வினீ தேவர்கள், முனிவரின் சுயமான தலையைப்பொருத்த, "தத்தியங்" என்கிற அந்த முனிவர் செய்த பேருபகாரம் இவையெல்லாம் ..... தனிக்கதை.

வித்யையை உபதேசிக்கும் ஆசார்யன் முதல் பகவான் வரையிலுள்ள வம்ச ப்ராம்மணம் முக்யம். (வம்ச வித்யை) இதை ஒவ்வொருவரும் அநுஸந்திக்க வேண்டும்.

## அச்வலர் -யாஜ்ஞவல்க்யர் - ஸம்வாதம்

விதேஹ தேச ராஜாவான ஜனகர், விசேஷமாக ஒரு யாகம் நடத்தினார். அதற்கு, ஏராளமான வேத வித்துக்கள் வந்தனர். இவர்களில், வேதங்களை வேதாங்கங்களை அத்யயனம் செய்து, ப்ரம்ம வித்யை வரையில் எல்லா வித்யைகளிலும் சிறந்து விளங்குபவர் யார் என்று அறிய விருப்பம் கொண்டார். சிறந்த ஜ்ஞானியாக இருப்பவர், பொன் குப்பிகளால் அலங்கரிக்கப்பட்ட இந்த ஆயிரம் பசுக்களை ஸ்வீகரிக்க வேண்டும் என்று ப்ரார்த்தித்தார். ஒருவரும் முன்வரவில்லை. அச்சமயத்தில் யாஜ்ஞ வல்க்யர் (இவர் சூர்யனைத் த்யானம் பண்ணி சூர்யன் குதிரை ரூபமாகப் ப்ரஸன்னமாகி உபதேசிக்க அவரிடம் உபதேசம் பெற்றார். இதற்கு அந்தர்யாமி ப்ராம்மணம் என்று பெயர்). தன் சிஷ்யனை அழைத்து, "பசுக்களை நம் க்ருஹத்திற்கு ஓட்டிக் கொண்டு போ" என்றார். மற்ற ப்ராம்மணர்கள் ஆக்ஷேபித்தனர். ஜனக ராஜனின் யாகத்தை நடத்தி வைக்கும் ருத்விக் அச்வலர், நீர்தான் சிறந்த ப்ரம்ம வித் என்று உங்களைக் கருதுகிறீரா? என்று கேட்டார். யாஜ்ஞ வல்க்யர் "அத்தகைய ப்ரஹ்ம வித்யைக்கு எனது நமஸ்காரம்,எனக்கு பசுக்கள் தான் தேவை" என்றார்.

அச்வலர், யாஜ்ஞ வல்கயரை கேள்வி கேட்கலானார். அச்வலர் யாகத்தை நடத்தும் எஜமானர் மோக்ஷம் பெற ஹோதா, அத்வர்யு, உத்காதா, ப்ரம்மா, என்கிற ருத்விக்குகள் பற்றியும், ஹோதா சொல்லும் ருத்விக்குகள், உத்காதா செய்யும் சாமகான ருக்குகள், ப்ரஹ்மா யாகத்தைக் காப்பது, பிற தேவதைகள் பற்றியும் அவ்வப்போது பெறும் பலன்களைப் பற்றியும், யாஜ்ஞ வல்க்யரைக் கேட்டு, திருப்தி அடைந்தார்.

ஆர்த்தபாகர் என்கிற ரிஷி கேள்வி கேட்க யாஜ்ஞ வல்க்யர், அவருக்கு க்ரஹங்கள் எட்டு அவை மூக்கு, வாக்கு, நாக்கு, கண், காது, மனஸ், கை, த்வக் என்பவை என்றும், அவற்றின் விஷயங்கள் அதிக்ரஹங்கள் என்றும், அக்னி ம்ருத்யு என்றும், ஜலம் அதை அன்னமாக உடையது என்றும், ஜீவன் மரணம் அடையும்போது, ப்ராணன்கள் அவற்றை விடுவதில்லை என்றும் சொன்னார். "ஜீவன் லயமடையப் போகுமிடம் எங்கே?" என்று ஆர்த்தபாஹர் கேட்க, அவரைத் தனியே அழைத்துப்போய்

புண்யம், பாபம் என்கிற கர்மாக்களுக்கு ஏற்பச் செல்கிறான் என்று பதில் சொன்னார். (ஸதஸ்ஸில் சொல்லாமல், தனிமையில் ஒருவருக்கு மட்டில் - கேள்வி கேட்டவருக்கு மட்டில் சொன்னார் என்பது குறிப்பிடத்தக்கது)

புஜ்யு என்பவர், மத்ர தேசத்தில் அத்யயனம் செய்து கொண்டிருந்தபோது, "பதஞ்சலர் என்பவர் வீட்டிற்குச் சென்றோம். அவருடைய பெண்ணை, ஒரு கந்தர்வன் பிடித்திருந்தான் (ஒருவகைப் பிசாசம்) அதை நீ யார் என்று கேட்டோம். நான் ஸுதன்வா--"ஆங்கீரஸ கோத்ரம்" என்று பதில் சொல்லிற்று. பிறகு லோகங்கள் விஷயமாகச் சில கேள்விகள் கேட்டு "பாரிக்ஷிதர்கள்" எங்கே போயிருந்தன என்று அந்தக் கந்தர்வனைக் கேட்டோம். இதற்கு நீர் பதில் சொல்லும்" என்று யாஜ்ஞ வல்க்யரைக் கேட்டார.

"பாரிக்ஷிதர்கள், அச்வமேதயாகம் செய்யும் இடத்திற்குப் போனார்கள்" என்று பதில் சொன்னார். புஜ்யு , "அச்வமேத யாகம் செய்பவர் எங்கே போகிறார்?" என்று கேட்டார்.

ஸூர்யனை, பூமி சுற்றிக் கொண்டிருக்கிறது. இதில் பெரும் பகுதி ஸமுத்ரம். இந்த அண்டகடாஹத்தில் இதில் கத்தி முனையளவு கொசுவின் இறகளவு கனமுள்ள சந்தில் பாரிக்ஷிதர்கள் சென்றனர். இந்த்ரன் அவர்களைக் கருடனாக இருந்து சுமந்து சென்று வாயுவிடம் சேர்த்தான். வாயு அவர்களை அச்வமேதயாகம் செய்பவர் இடத்தில் சேர்த்தது. இப்படி அந்தக் கந்தர்வன் உமக்குச்சொல்லி வாயுவே வ்யஷ்டி, சமஷ்டி எல்லாம் எங்கும் சஞ்சரிப்பவன் என்று சொல்லியிருப்பான் என்றார்.

பிறகு உஷஸ்தர் , கஹோளர்-இருவரின் கேள்விகள்.

உஷஸ்தர் - எல்லாவற்றுக்குள்ளும், உள்ளே இருக்கும் ஆத்மா ப்ரத்யக்ஷமாக இருக்கிற ப்ரம்மம் என்கின்றனர். இது என்ன?

யாஜ்ஞ வல்க்யர் - உமக்கும் ஆத்மாவாக இருப்பது அது.

உஷஸ்தர் - இது மாடு, இது குதிரை என்று சொல்வதைப் போல இருக்கிறதே?

யாஜ்ஞ வல்க்யர் - ச்ரவணம், மனனம், த்யானம், தர்சனம் என்பவற்றைச் செய்யும் ஆத்மாவை நான் சொல்லவில்லை. நான் சொன்ன ஆத்மா இல்லாமல், மற்றவை வேறு ஆத்மாக்கள்.

கஹோளர் - அது எந்த ஆத்மா?

யாஜ்ஞவல்க்யர் - பசி, தாகம், சோகம், மூப்பு, மரணம் இவை எதுவுமே இல்லாத ஆத்மா. இதனை உணர்ந்தவர்கள் (ப்ராஹ்மணர்கள்) புத்ரன், பணம், உலகம் என்கிற மூன்றிலும் பற்று இல்லாமல், பிக்ஷை எடுத்து வாழ்கின்றனர். ப்ராஹ்மணன், உபதேசம் மூலம் பாண்டித்யம் பெற்று, அஹங்காரம் அற்று இருக்க வேண்டும். எப்போதும் அந்த ஆத்மாவையே சிந்திக்க வேண்டும்.

கார்கி என்கிற ஸ்த்ரீ கேள்வி கேட்டாள்

"இந்த பூமிக்கெல்லாம் ஆதாரமானது ஜலம். அதற்கு எது ஆதாரம்" என்று கேட்டு மேன்மேலும் கேள்விகளை கேட்டுக் கொண்டே வந்தாள். யாஜ்யவல்க்யர் மேன்மேலும் பதில்களைச் சொல்லி லோகங்களைப் பற்றியும் சொல்லிக் கொண்டே வந்தார். கடைசியாக "ப்ரம்ம லோகங்களுக்கு எது ஆதாரம்?" என கேட்டாள். கேட்கத் தகாததை, உள்ளபடி உணராமல் கேட்டால் தலை விண்டு விழுந்து விடும் என்று யாஜ்ஞ வல்க்யர் சொல்ல, கார்கி அத்துடன் கேள்வி கேட்பதை நிறுத்திக் கொண்டாள்.

உத்தாலகர் சொன்னதாவது:

மத்ர தேசத்தில் பதஞ்சலரின் வீட்டில் அத்யயனம் செய்து கொண்டிருந்த போது அவருடைய மனைவியை ஒரு கந்தர்வன் பிடித்தான். அவனை யார் என்று கேட்டோம். நான் ஆதர்வணன், கபந்தன் என்றான். அந்த கந்தர்வன் என்கிற பிசாசம் எங்களைக் கேட்டான்.

"எல்லா உலகங்களையும் எல்லா ஜந்துக்களையும் தரித்திருக்கும் ஸூத்ரம், அவற்றின் உள்ளே இருந்து நியமிக்கும் அந்தர்யாமியை அறிவீர்களா? இதை அறிந்தவன்தான் லோகம்,

வேதம், ப்ரம்மம் இவற்றை அறிந்தவனாவான் என்று சொன்னான். அது என்ன?"

யாஜ்ஞவல்க்யர் - நான் அறிவேன். அந்த ஸூத்ரமானது ப்ராணன். எல்லா உலகங்களையும் ஜந்துக்களையும் உள்ளே இருந்து நியமிக்கும் அந்தர்யாமிதான் ப்ரம்மம். சாதாரணமாக உத்தாலகர் கேள்விகளுக்குத் த்ருப்தியான பதில் வந்தால், ஸதஸ்ஸில் கேள்வி கேட்பதை அத்துடன் நிறுத்திக் கொள்வார்கள். (இவரை வெல்ல யாருமில்லை என்று பொருள்) ஆனால், கார்கி மறுபடியும் கேள்வி கேட்டாள்.

கார்கி - வானுலகுக்கு கீழும், மேலும் (எல்லா இடங்களிலும்) எல்லா காலங்களிலும் எல்லா வஸ்துக்களும் எதை ஆதாரமாக உடையதோ, எது காரணமோ, அது என்ன?

யாஜ்ஞவல்க்யர் - ஆகாசம் (மூலப்ரக்ருதி)

கார்கி - இதற்கும் (ஆகாசத்திற்கும்) ஆதாரம் எது?

யாஜ்ஞவல்க்யர் - அக்ஷரம். சிறிதுமல்ல, பெரிதுமல்ல, நீண்டதுமல்ல, குறுகியதுமல்ல எந்த நிறமுமல்ல. எல்லா இடத்திலுமிருப்பது. இதன் ஸங்கல்பத்தினாலே சூர்யன், சந்த்ரன், ஸ்வர்க்கம், நக்ஷத்ரங்கள், பூமி யாவும் தரிக்கப்பட்டு இருக்கின்றன. இதற்கு மேம்பட்ட எதுவுமில்லை என்று பலவாறாக எடுத்துரைத்தார்.

கார்கி என்பவள் "இவரை ஜெயிக்க இயலாது எல்லோரும் இவருக்கு நமஸ்காரம் செய்யுங்கள்" என்றார். பிறகும் விதக்தர் என்பவர் கேள்விகள் கேட்டார்.

யாஜ்ஞ வல்க்யர் "இவ்வளவு மஹரிஷிகள் இந்த ஸதஸ்ஸில் கேள்விகள் கேட்டு என்னுடைய பதில்களால் திருப்தி அடைந்தார்கள். நீர் வீண் ஆடம்பரத்திற்காக கேள்விகள் கேட்கிறீர். நான் கேட்கும் கேள்விகளுக்கு முதலில் பதில் சொல்லும்" என்று பலவாறாகக் கேட்க, எல்லாவற்றிற்கும் விதக்தர் பதில் சொல்லிக்கொண்டே வந்தார். இந்தச் சமயத்தில்,

யாஜ்ஞவல்க்யர் முன்பு எட்டு புருஷர்களைப் பற்றிச் சொன்னேன் அவர்களுக்கும் அவர்களின் ஆதாரம் முதலியவற்றிற்கும் மேற்பட்டு அவற்றையெல்லாம் நியமித்து அடக்கும் ஔபநிஷத புருஷன்--உபநிஷத்துக்களிலே சொல்லப்படும் புருஷன் யார்? நீர் அது யார் என்று சொல்லவில்லையெனில், உமது தலை துண்டாகிக் கீழே விழும்" என்றார். விதக்தர் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தவுடன் தலை துண்டாகிக் கீழே விழுந்தது. அவருடைய சிஷ்யர்கள், அவருடைய அஸ்திகளை மூட்டையாகக் கட்டி, அவர் வீட்டில் சேர்க்க, எடுத்துச் செல்லும் போது, வழியில், திருடர்கள், இந்த மூட்டையில் பணம் இருக்கிறது என்று எண்ணி அதைப் பிடுங்கிக் கொண்டு ஓடினர் (ப்ரம்ம வித்திடம் அபசாரப்பட்டதால் இப்படிநேர்ந்தது என்பதை உணர வேண்டும்).

யாஜ்ஞவல்க்யர், ஸதஸ்ஸில் உள்ளவர்களைப் பார்த்து, இன்னும் யாராவது கேள்விகள் கேட்கலாம் என்றார். நடுநடுங்கிய அவர்கள் ஒன்றும் பேசவில்லை. ஸதஸ் கலைந்தது.

### 10(2) ஜநகர் - யாஜ்ஞவல்க்யர் - ஸம்வாதம்

பிறிதொரு சமயம் யாஜ்ஞவல்க்யர் ஜனக ராஜன் சபைக்கு மறுபடியும் சென்றார். அரசன் வணங்கி, வரவேற்று, பசுக்கள் வேண்டுமா அல்லது வேத அர்த்தங்களுக்கா என்றார்.

யாஜ்ஞவல்க்யர் இப்போது அரசனுக்கு உபதேசித்தார். வலது கண்ணிலே "இந்த்தன்" என்கிற புருஷன் இருக்கிறான் (இந்திரன் என்கிறதை மறைமுகமாக இப்படிச்சொல்லும் பழக்கம் உண்டு) இடது கண்ணில் அவனுடைய பத்னி இருக்கிறாள். இவ்விருவருக்கும் ஹ்ருதயமே வாசஸ்தலம். அங்குள்ள மாம்ஸமே அன்னம். ஹ்ருதயத்தில் பின்னலைப் போல உள்ள நாடிகள் வஸ்த்ரம். ஹ்ருதயத்தினுள் பல ஆயிரமாகப் பிரிந்து, கேசத்தை விட மெல்லிய நாடிகள் உள்ளன. அவற்றிற்கு "ஹிதை" என்று பெயர். அவற்றின் வழியாக, ஜீவன் வெளியே கிளம்புகிறான். ஹ்ருதயத்திலிருந்து உச்சந்தலை உள்ளவரை உள்ள மார்க்கமானது (ஸுஷும்நா நாடி) ப்ராண, இந்த்ரியங்களில் சிக்குண்ட ஜீவாத்மாவைக் காட்டிலும், பற்றற்றவனாக அழிவற்றவனாக ஹ்ருதயத்திலுள்ள பரமாத்மா வேறுபட்டவன்.

இன்னொரு சமயம், இதே போன்ற ஒரு ஸம்வாதம் நடந்தது. அரசன் கேட்க யாஜ்ஞ வல்க்யர் பதில் சொல்ல மிக உன்னதமான கருத்துக்கள் கிடைத்தன.

அரசன் - புருஷனுக்கு எது ஜ்யோதிஸ்?

யாஜ்ஞவல்க்யர்- ஸூர்யன்தான் ஜ்யோதிஸ்

அரசன் - ஸூர்யன் அஸ்தமித்தால்?

யாஜ்ஞவல்க்யர் - அப்போது சந்த்ரன்

அரசன் - இருவரும் இல்லாதபோது?

யாஜ்ஞவல்க்யர் - அப்போது அக்னி (விளக்கு போன்றவை)

அரசன் - அதுவுமில்லாதபோது?

யாஜ்ஞவல்க்யர் - வாக்கு, மையிருட்டிலும் பேசினால் பேச்சைக் கொண்டு அவனை அறியலாம், அணுகலாம்

அரசன் - வாக்கும் இல்லாத போது?
யாஜ்ஞவல்க்யர் - ஆத்மாவே ஜ்யோதிஸ்

அரசன் - ஆத்மாவாவது எது?

யாஜ்ஞவல்க்யர் - ஹ்ருதயத்திலே ப்ராண வாயு முதலியன இருக்க அறிவுக்கு ஆதாரமாக இருப்பது ஆத்மா. ஸ்வப்ன லோகத்தை ஆத்மா சேரும்போது, துக்க ரூபமான இவ்வுலகைக் கடக்கிறது. உடலோடு சேர்ந்திருக்கும்வரை பாபம் செய்கிறது. உடலிலிருந்து விடுபட்டு விட்டால் பாபம் இல்லை. ஸ்வப்ன காலத்தில், அவற்றில் ஏற்பட்டதைக் கொண்டு தானே அவற்றை அறிகிறான். திரும்பவும் இவ்வுலகத்திற்கு வருகிறான். ஸ்வப்னத்தில் துக்கம், மகிழ்ச்சி, சோகம், இன்பம் இப்படி அனுபவிக்கிறான். எல்லாம் ஸ்வப்னம் என்று பிற்பாடுதான் தெரிகிறது. ஸ்வப்ன காலத்திலே ஜீவன் தனக்குத் தானே ஜ்யோதிஸ்ஸாக ஆகிறான். உறக்கத்தில்

(ஸுஷுப்தி) பரமாத்மாவுடன் ஐக்கியமாகிறான். அப்போது உற்றார், உறவினர், புண்யம், பாபம் , துக்கம் என்று எதனோடும் இணைப்பு இருப்பதில்லை. தைத்ரியோபநிஷத்தில் சொல்லியபடி, மனுஷ்ய ஆநந்தம், பித்ருக்களின் ஆநந்தம், தேவர்களின் ஆநந்தம், சதுர்முக (ப்ரம்மா) ஆநந்தம் என்று மேன்மேலும் உள்ள ஆநந்தத்தை அடைகிறான். இப்போது எந்த இந்த்ரியமும் வேலை செய்வதில்லை. மனஸ் ஓய்வில் இருக்கிறது.

## 10(3) - விழிப்பு, ஸ்வப்னம், உறக்கம், இறப்பு

விழிப்பு, ஸ்வப்னம், உறக்கம் என்ற நிலைகளுக்கு மேற்பட்ட நிலை இறப்பு. அப்போது பரமாத்மாவினால் வேறு இடம் கொண்டு போகப்படுகிறான். புண்ய, பாபங்களுக்கு ஏற்றவாறு வேறு சரீரம் எடுத்து அனுபவிக்கிறான். ஜ்ஞானம், கர்மாக்கள், பூர்வ வாஸனை, இந்த மூன்றும் இந்த ஜீவனைத் தொடர்கின்றன. ஜ்ஞானமும், கருமங்களும் ஜீவனுக்கு அடுத்த பிறவியில் அநுபவிக்க வேண்டிய விஷயங்களைச் சேர்த்து வைக்கின்றன. இந்த விஷயங்களைக் கையாள பூர்வ வாசனை உதவுகிறது.

ப்ரஹ்மஞானம் உள்ளவன், ப்ரம்மாநுபவம் பெறுகிறான். புனர் ஜன்மம் இன்றி, தேவயானம் வழியாக சூர்ய மண்டலம் புகுந்து மோக்ஷம் பெறுகிறான். பரமாத்மாவே, ப்ராணேந்த்ரியங்களுக்குச் சக்தி அளிப்பவன். அவன் எங்குமிருப்பவன். மனஸ்ஸால் தான் அவனைப் பார்க்க இயலும். அந்தர்யாமியாய் ஹ்ருதயத்தில் இருக்கிறான். இவனை அறிய, வேத அத்யயனம், யஜ்ஞம், தானம், தபஸ் முதலியன செய்கின்றனர். யோகநிஷ்டையில் இழிந்து, இவனைக் காண முயற்சிக்கின்றனர். இவனை அடைய ஸன்யாஸம் மேற்கொள்கின்றனர். இந்த்ரியங்களை அடக்கி, தீயதைச் செய்யாமல், காம்ய கர்மங்களைச் செய்யாமல், சீதோஷ்ண சுக துக்கங்களைப் பொறுத்துக்கொண்டு, மனஸ்ஸை நன்கு நிலைநிறுத்தி தனக்குள்ளே இருக்கும் இந்தப் பரமாத்மாவைப் பார்க்கவேண்டும். இதுவே "பரப்ரம்மம்". இந்த பரப்ரம்மம் , இஹ பர சுகங்களையும் எல்லாவற்றையும் அளிக்கும்.

பூர்ணத்தில் இருந்து பூர்ணம் உயர்ந்தது. பூர்ணத்தைச் சார்ந்த பூர்ணத்தை அழித்து , பூர்ணம் தான் முடிவில் இருக்கிறது.

வேதத்தில் சொல்லியபடி, எல்லா உலகமும் உயிர்களும் ப்ரஹ்மாவால் சிருஷ்டிக்கப் படுகின்றன. ஆதலால், வேதம் எங்கும் நிறைந்திருக்கிறது. இதற்குக் காரணமான வேதம், கார்யமான ப்ரபஞ்சத்தைக் காட்டிலும் உயர்ந்தது. கார்யமாய் காரணம் நிறைந்து உள்ளதற்கும், மேலான வ்யாஹ்ருதி ( பூ:, புவ:, ஸுவ:)க்கு, லயஸ்தானமாய் எல்லாவற்றிற்குமே காரணமாக இருப்பது ப்ரணவம். இந்த ப்ரணவத்தை ப்ரம்மமாக உபாஸிக்க வேண்டும் (பூர்ணம் என்கிற மந்திரத்திற்குப் ப்ரம்மம் என்றும் பொருள் உண்டு).

## 10(4) ப்ரஜைகள் மூன்று வகை

தேவர்கள் (தேவதைகள்), மனிதர்கள், அசுரர்கள். இவர்கள் தங்களுடைய தகப்பனாரை அண்டி, உபதேசிக்குமாறு வேண்டினர். தேவர்கள் வேண்டிய போது "த" என்று உபதேசித்து தெரிந்து கொண்டீர்களா என்று தகப்பனார் கேட்டார். "தமம்" அதாவது "இந்த்ரிய நிக்ரஹம்" வேண்டும் என்று புரிந்து கொண்டோம் என்றனர்.

மனிதர்களிடம் "த" என்பதைச் சொன்னபோது "தானம்" செய்யுங்கள் என்பதை உணர்ந்ததாக, அவர்கள் சொன்னார்கள்.

அசுரர்களிடம், அந்த எழுத்தைச் சொன்ன போது, தயை புரியுங்கள் என்று உணர்ந்ததாகச் சொன்னார்கள்.

ப்ரம்மத்திலிருந்து பிறந்த "ப்ரஜாபதியின்" புதல்வர்களான தேவர்கள் ஸத்யத்தை உபாஸிக்கின்றனர். பரப்ரம்மமே ஸத்யம். இது (பரப்ரம்மம்) ஆதித்ய மண்டலத்திலும் உள்ளது. கண்ணிலும் உள்ளது. இதற்கு பூா , புவ:, ஸுவ: என்கிற வ்யாஹ்ருதிகள்.

சாந்தோக்ய உபநிஷத்தில் சொல்லப்பட்ட சாண்டில்ய வித்யை, மின்னலை ப்ரம்மமாக உபாஸிப்பது சொல்லப் படுகிறது. வாக்கை, "பசு"வாக உபாஸிப்பது, மோக்ஷம் செல்பவன் தேவயான மார்க்கத்தில், ஆத்யாத்மிக, ஆதிபௌதிக, ஆதிதைவிக தாபங்களுக்கு இடமில்லாத ப்ரம்ம லோகம் சென்று சந்தோஷிப்பது சொல்லப்படுகிறது .

அன்னத்தை "வி" என்றும், ப்ராணனை "ரம்" என்றும் சேர்த்து ப்ரம்மமாக உபாஸிக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

ப்ராணனை, ருக்காகவும், யஜுஸ்ஸாகவும், ஸாமமாகவும் உபாஸிப்பது சொல்லப்படுகிறது. வாக் எனப்படும் வேதத்தை பசுவாக உபாஸிக்க வேண்டும். பசுவுக்கு நான்கு மடிகள். ஸ்வாஹா, வஷட், ஹந்த, ஸ்வதா. தேவர்களுக்குக் கொடுக்கப்படும் ஹவிர் பாகங்கள் ஸ்வாஹா அல்லது வஷட். மனுஷ்ய யஜ்ஞத்தில், ஹந்த என்று சொல்லி ஹவிஸ்ஸும், பித்ருக்களை உத்தேசித்துச் செய்யும்போது ஸ்வதா என்றும் சொல்லப்படுகிறது.

பசு - வாக்கு. காளை - ப்ராணன். கன்று - மனஸ். பால்- பகவானை துதிக்கும் ஸ்தோத்ரங்கள்.

### 10(5) - காயதிரீ உபாஸனம்

காயத்ரீயின் முதல் பாதத்தை மூன்று உலகங்களாக உபாஸிப்பவன் மூன்று உலகங்களில் எதையும் அடைவான். இரண்டாம் பாதத்தை மூன்று வேதங்களாக உபாஸிப்பவன், வேதத்தில் சொல்லப்பட்ட பலன்களை அடைவான். மூன்றாம் பாதத்தை, ப்ராண அபான, வ்யானங்களாக உபாஸித்தால், எல்லாப் ப்ராணிகளையும் வசமாக்கிக் கொள்ளலாம். நான்காம் பாதத்திற்கு "தர்சபதம்" என்று பெயர். இதைப் ப்ரம்மமாக உபாஸித்தால், புகழ், பொருள் கிடைக்கும். ப்ராணன்களுக்கு "கயம்" என்று பெயர். கயங்களைக் காப்பதாலே காயத்ரீ. காயத்ரீ உபாஸனம் செய்பவன் இஷ்டப்பட்ட பலனை அடைவான்.

ப்ரம்ம உபாஸனம் செய்பவனுக்கு நான்கு மந்த்ரங்கள் - ப்ரார்த்தனை செய்வதற்காக இங்கு சொல்லப்படுகிறது. (இது ஈசாவாஸ்ய உபநிஷத்திலும் உள்ளது).

## 10(6) மந்த்த கர்மா

ப்ராண வித்யை, பஞ்சாக்னி வித்யை, மந்த்த கர்ம - மூன்றும் சொல்லப்படுகின்றன (சாந்தோக்ய உபநிஷத்தைப் பார்க்க). மந்த்த கர்மாவில் நெய்யினால் ஹோமங்களைச் செய்த பிறகு, "மந்த்த" என்கிற வஸ்துவை, ப்ராணனைப் புகழும் மந்த்ரத்தைச் சொல்லிக் கொண்டே கையில் வைத்துக் கொண்டு, காயத்ரீயினாலும், இன்னும் சில மந்த்ரங்களாலும், விதிப்படி ஆசமனம் செய்து, அக்னிக்கு மேற்கே கிழக்கில் தலை வைத்து இரவில் படுத்திருந்து, உதயத்தில் ஸூர்யனுக்கு உபஸ்தான மந்த்ரங்களைச் சொல்ல வேண்டும். இப்படியான மந்த்த த்ரவ்யத்தாலே உலர்ந்த கட்டையை நனைத்தால் அது துளிர் விட்டு, கப்பும் களையுமாக வளரும். "மந்த்த த்ரவ்யம்" என்பது, நெல், யவம், எள், உளுந்து, கோதுமை, ப்ரயங்கு, மஸூரம் கல்வம், கலகுலம் (பத்து தானியங்கள்) இவற்றை எல்லாம் அரைத்து தயிர், தேன், நெய் இவற்றில் ஊற வைக்க வேண்டும். ஹோமங்கள் நெய்யினாலே செய்யப்பட வேண்டும். பிள்ளை பெறுகிறவன், இந்த பிள்ளை தனக்குச் சிறந்த பலன்களை மேலுலகில் அடையுமாறு செய்ய, இவன் எப்படி நடந்து கொள்ளவேண்டும், என்ன கார்யங்களைச் செய்யவேண்டும் என்று பல விஷயங்கள் சொல்லப்படுகின்றன. தீர்க்கமான ஆயுளைப் பிள்ளை பெறும்படியாகவும், படித்தும் பிரஸித்தியாக வேண்டுமென்றாலும் செய்ய வேண்டிய முறைகள் சொல்லப்படுகின்றன.

"வம்ஸ ப்ராம்மணம்" என்கிற பரம்பரை சொல்லப்படுகிறது. பரப்ரம்மம், ப்ரஜாபதி என்கிற பரம்பரை ஒன்று. ஆதித்யனிடமிருந்து வரும் பரம்பரை மற்றொன்று. இரண்டும் ஒன்று சேர்ந்ததும் சொல்லப்படுகிறது.

யாஜ்ஞ்யவல்க்யர், ஸூர்யனிடம் ஸூக்ல யஜூஸ் வேதத்தைப் பெற்றது சொல்லப்படுகிறது .

இதுவே ப்ருஹதாரண்யக உபநிஷத்தின் சாரம். (இத்துடன் பத்து உபநிஷத்துக்களின் சாரம் சொல்லப்பட்டது).

இங்கு இன்னும் சில முக்ய உபநிஷத்துக்களின் சாரத்தையும் சொல்கிறோம்.

## 11 - ச்வேதாச்வதரோபநிஷத்

108 உபநிஷத்துக்களில் 11வது உபநிஷத்து. ஆறு அத்யாயங்கள். சித், அசித், ஈச்வரன் என்று தத்துவங்களை மூன்றாக வகுத்ததற்கு இது ஆதாரம். பரமாத்மாவின் ஸ்வரூபம், சக்ர ரூபமாகச் சொல்லப்படுகிறது.

பிறப்பது, வாழ்வது, இறப்பது முதலிய எல்லாவற்றிற்கும் காரணமானது எது? காலமா? இயற்கையா? முன்வினையா? பஞ்சபூதங்களா? மூலப்ரக்ருதியா? ஜீவனா?---இல்லை, இவை எல்லாம் சேர்ந்ததா? சேர்ந்ததாக இருந்தால், சேர்த்தது யார்? என்று விவாதித்து "பரமாத்மா" என்கிற முடிவுக்கு வந்தது.

ஸம்ஸாரத்திலே உழல்கின்ற ஜீவர். எல்லாம் அறிந்த ஈச்வரன். போகத்தை அளிக்கும் அசித் (அசேதநம்).

ஈச்வரன், குணங்கள் நிறைந்த குறையில்லாத ஜோதி. இவன் சேதனன், அசேதனங்களுக்கு அந்தர்யாமியாக இருக்கிறான். இதுதான் ப்ரம்மம். இதற்கு மேல் ஒன்றுமில்லை. இது அரணிக் கட்டையில் உள்ள அக்னியைப் போன்றது. எளிதில் அறிய இயலாது. ஜீவாத்மா கீழ் அரணிக் கட்டை. ப்ரணவம் மேல் அரணி. கடைதல் என்பது த்யானம் செய்தல். இப்படி ஜீவாத்மாவுக்குள் பரமாத்மா மறைந்திருப்பதை த்யானம் செய்து அறிந்து உபாஸிக்க வேண்டும். த்யானம் செய்பவருக்கு கர்மானுஷ்டானம் முக்கியம். விஷ்வக்ஸேனர், ஆசார்யன் இவர்களின் அநுக்ரஹத்தைப் பெற வேண்டும். பகவானை ஸ்தோத்தரித்து, அவன் அருளாலே, அவனிடம் மனதைப் பதிய வைக்கவேண்டும்.

தலை, கழுத்து, மார்பு இவற்றை நன்கு நிமிர்த்தி, சுத்தமான இடத்தில் தகுந்த ஆஸனத்தில் அமர்ந்து புலன்களை அடக்கி , ப்ராணாயாமங்களைச் செய்து, மனஸ்ஸை பரப்ரம்மத்திடம் நிறுத்த வேண்டும்.

அக்ஷரங்கள் யாவும் அகரத்திலிருந்து உண்டாகின்றன. அகரத்தின் பொருளான பரமாத்மாவிடமிருந்து எல்லா

உலகங்களும் உண்டாகின்றன. அவன் அனைத்துக்கும் அந்தராத்மா. அவன் மாயன். மாயை "மூலப்ரக்ருதி". அவனுடைய அம்சங்களே ஜீவாத்மாக்கள். இவனைச் சரணம் அடைய வேண்டும். ஜ்ஞானம், கர்மம் இரண்டாலும் அவனை ஆராதிக்க வேண்டும். இந்த ஜீவாத்மா ஆணல்ல, பெண்ணல்ல, அலியுமல்ல. எந்த உடலை, கர்ம வினையால் பெறுகிறதோ, அதன் அடிப்படையில் ஜென்மாக்களில் இந்த ஜீவன் அழைக்கப்படும். இவற்றையெல்லாம் தெளிந்து, பரமாத்மாவை ஆராதிப்பவர் அவன் திருவடியை அடைவர்.

பரமாத்மா ஜகத்காரணன். பந்த பாசங்களிடமிருந்து விடுபட்டு, அவனையே கதி என்று நினைப்பவருக்கு மோக்ஷம் உண்டு. பரமாத்மா - ஆறு விதமான - எட்டுகளை உடையவன்.

(1) அஷ்டமாசித்தி
(2) எட்டு திக்குகள்
(3) எட்டு திக்பாலகர்கள்
(4) எட்டு ப்ரக்ருதிகள் (பூமி, ஜலம், ஆகாசம், நெருப்பு, வாயு, மனஸ், புத்தி, அஹங்காரம்)
(5) எட்டு தேவதைகள் (ப்ரஹ்மா, ப்ரஜாபதி போன்றவர்கள்)
(6) எட்டு வஸுக்கள்
(7) எட்டு திருக்கல்யாண குணங்கள் (இந்த ஏழில் ஏதேனும் ஆறு)

மூன்று மார்க்கங்களை உடையவன்.

(1) மோக்ஷத்திற்குச் செல்லும் தேவயாநம்
(2) கர்மலோகத்திற்குச் செல்லும் பித்ருயாநம்
(3) க்ஷுத்ர ஜந்துக்களுக்கான மார்க்கம்

ச்வேதாச்வதரர், தன் தபோபலத்தாலும், தெய்வ அநுக்ரஹத்தாலும், ப்ரம்மத்தை அறிந்து பலருக்கு இப்படி உபதேசித்தார்.

## 12 -அதர்வசிர உபநிஷத்து

தேவதைகள், ஸ்வர்க்கத்திற்குச் சென்று, ருத்ரனைப் பார்த்து, "நீர் யார்?" என்று கேட்க, அவர், "நான் ஒருவனே முதலில் இருந்தேன்: இப்போதும் இருக்கிறேன். இனிமேலும் இருக்கப் போகிறேன் என்னைத் தவிர வேறொன்றும் இல்லை" என்றார்.

தேவதைகள், பகவான் சொல்ல வேண்டியதை இவர் சொல்கிறாரே என்று நினைத்தனர்.

ருத்ரன், "தேவதைகளே! நீங்கள் நினைத்த அந்த பகவான் ஸூக்ஷ்மத்திற்கும் ஸூக்ஷ்மமானவன். எங்கும் பரந்து உள் புகுந்து இருப்பவன். எனக்கும் அந்தர்யாமி. இவ்வாறே எனக்குள் புகுந்திருப்பதால், நான் என்றேன்" என்று சொன்னார்.

ருத்ரன், பகவானின் பக்தன். தேவதைகள் இவ்வாறு ருத்ரனைத் துதித்தனர். ப்ரணவம், அதற்கு விளக்கம்-இது ஒரு உபாஸனா மார்க்கம் என்று சொல்லப்பட்டது.

இந்த்ரன், நான்முகன், ஆதித்யன், பசுபதி, யாவருக்கும் பகவான் அந்தர்யாமி . இது ஒருவகை உபாஸனம்.

## 13 - அதர்வ சிகோபநிஷத்து

பைப்பலாதர் மற்றும் பல மஹரிஷிகள், "அதர்வா" என்பவரிடம் சென்று "த்யானத்திற்கு மந்த்ரம் எது? த்யானமானது எது? த்யானம் செய்பவன் யார்? த்யானம் செய்யப்படும் தத்துவம் என்ன?" என்று கேட்டனர்.

அதர்வா பதில் சொன்னார். "த்யானத்திற்கு மந்த்ரம் ப்ரணவம். அது நான்கு பாதம் உள்ளதாய் ப்ரம்மமாகும். அகார, உகார, மகாரங்கள் அவற்றின் மேல் அரை மாத்திரை - இதுவே வேதங்கள். இதுவே லோகங்கள் மற்றும் பலவிதமாக இது புகழப்படுகிறது . இந்தப் ப்ரணவம் ஹ்ரஸ்வம், தீர்க்கம், ப்லுதம், எனவும் பிரிக்கப்படும். இந்த நான்கு மாத்திரைகளை மனிதனுக்கு உள்ள விழிப்பு, ஸ்வப்னம், உறக்கம், மோக்ஷம் என்கிற நான்கு தசைகளாகச் சொல்வர். இந்தப் ப்ரணவமே த்யானத்திற்குச் சாதனம். த்யானத்தை விஷ்ணுவாகப் பாவிக்க வேண்டும். த்யானத்திற்கு அதிஷ்டான தேவதை விஷ்ணு. த்யானம் செய்பவனை ருத்ரனாகப் பாவிக்க வேண்டும். ஸர்வ ஐச்வர்யம் உள்ள எல்லாவற்றிற்கும் காரணனான முன்பு அரை மாத்திரையில் தேவதையாகச் சொல்லப்பட்ட பரம புருஷனே எல்லோருக்கும் சுகம் அளிப்பவன். அவனே உபாஸிக்கப்படவேண்டியவன்.

ஓம்-உபாஸனா மந்த்ரம். இதில் பரமாத்மா என்கிற எண்ணம் வேண்டும்.

ஓம் - இதற்கு நான்கு பாதங்கள்- அகாரம், உகாரம், மகாரம், நாதம்.

அகாரம் - பாஸ்வதீ என்றும் பெயர். ப்ருத்வி லோகம்; சிவப்பு, மஞ்சள் நிறம்; ருக் வேதம்; ப்ரஹ்மா தேவதை; அஷ்ட வஸுக்கள்; காயத்ரீ சந்தஸ்; கார்ஹபத் அக்னி; என்று த்யானித்தல்.

உகாரம் - வித்யுமதீ என்றும் பெயர். அந்தரிக்ஷ லோகம்; யஜுர்வேதம்; கருப்பு நிறம்; விஷ்ணு தேவதை; ஏகாதச

ருத்ரர்கள்; த்ருஷ்டுப்சந்தஸ்; தக்ஷிணாக்னீ; என்று த்யானிக்க வேண்டும்.

மகாரம் - "சுபாசுபா" என்றும் பெயர். ஸாம வேதம்; வெளுப்பு நிறம்; ருத்ரன் தேவதை; பன்னிரண்டு ஆதித்யர்கள்; ஜகதீ சந்தஸ்; ஆஹவநீயாக்னி; என்று த்யானிக்க வேண்டும்.

நாதம் - "வித்யுமதி" என்றும் பெயர். அதர்வ வேதம். அர்த்த மாத்திரை; ஸோம லோகம்; எல்லா நிறங்களும்; மருத் தேவதைகள்; விராட் சந்தஸ்; ஏகர்ஷி என்கிற அக்னி; என்று த்யானிக்க வேண்டும்.

## 14 - கௌஷீதகி உபநிஷத்து

இதில் பர்யங்க வித்யை, ப்ரதர்தந வித்யை, பாலகி வித்யை சொல்லப்படுகிறது. இவை யாவும் வித்யைகளில் சொல்லப்பட்டுள்ளது.

## 15 - மந்த்ரிகோபநிஷத்து

ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களால் மூல ப்ரக்ருதியானது, பரப்ரம்ம ஸ்வரூபத்தை மறைக்கிறது. ரஜஸ், தமோ, குணம் ஒழிந்து ஸத்வ குணம் மேலோங்கியவர்கள் ஹ்ருதயத்திலே அந்தர்யாமியாக ப்ரம்மத்தை தரிசிப்பார்கள்.

உலகில் ப்ரம்மத்தைச் சிலர் 26வது தத்துவமாயும், 27வதாகவும், 24-ஆகவும், இன்னும் எவ்வெவ்வாறோ பார்க்கிறார்கள். எல்லாம் அவனிடமிருந்து பிறந்து அவனிடமே மறைகின்றன. இந்த ப்ரம்மத்தை அறிந்து உபாஸிப்பவர் அவனிடம் சேர்ந்து விளங்குவர்.

## 16 - ஸுபாலோபநிஷத்து

16 அத்யாயங்கள் உடையது. நாராயணனே பரதத்துவம் என்பதைச் சொல்கிறது. "கோராங்கர்" என்பவர் ரைக்வருக்குச் சொன்னது இது.

சேதனங்கள், அசேதனங்கள், சேதனா சேதனங்கள் இவைகளுக்கு கார்யமாக இல்லாத ஒன்றிலிருந்து "தமஸ்" தோன்றியது. தமஸ்ஸிலிருந்து பஞ்ச பூதங்களுக்குக் காரணமான தாமஸ அஹங்காரம், இதிலிருந்து ஆகாசம், இதிலிருந்து வாயு, வாயுவிலிருந்து அக்னி, இதிலிருந்து ஜலம், ஜலத்திலிருந்து மண் இப்படியாகத் தோன்றி இதெல்லாம் ப்ரம்மாண்டமாக ஆயிற்று.

கொஞ்சகாலத்திற்குப் பிறகு, இந்த ப்ரம்மாண்டம் பிளக்கப்பட்டு, மேல் பாகம் - ஸ்வர்க்கம், கீழ் பாகம் பூமியாகவும் ஆயிற்று. நடுவில் ப்ரம்மாவுக்கு அந்தர்யாமியான மஹா புருஷன். அவன் ப்ராணிகளுக்கு ம்ருத்யுவைப் படைத்தான். அவன்தான் ருத்ரன். (கண்ட பரசு என்றும்பெயர்). அந்த ம்ருத்யு ப்ரம்மாவிடத்தில் புகுந்து மறைந்தான். ப்ரஹ்மா, மானஸ புத்ரர்களாக ஏழு பேரைப் படைத்தான். அவர்கள் புத்ரர்களைப் படைத்தனர் (ப்ரஜாபதி எனப்படுபவர்கள்). முகத்திலிருந்து ப்ராம்மணனும், கைகளிலிருந்து க்ஷத்திரியர்களும், தொடையிலிருந்து வைச்யர்களும், கால்களிலிருந்து சூத்ரர்களும் உண்டானார்கள். மனஸ்ஸிலிருந்து சந்த்ரனும், கண்ணிலிருந்து ஸுர்யனும் காதிலிருந்து காற்றும், ப்ராண வாயுவும், ஹ்ருதயத்திலிருந்து மற்ற எல்லாமும் உண்டாயிற்று.

நெற்றியிலிருந்து கோபத்தினால் ருத்ரன் உண்டானார். எல்லா உலகங்களையும் தனதாக்கிக் கொண்ட ஹிரண்யகர்ப்பன், ஸ்த்ரீ, புருஷன் இரு உருவமாகப்பிரிந்து, தேவ - ரிஷி - யக்ஷ - ராக்ஷஸ - கந்தர்வ ஜாதிகளையும், மிருகங்களையும் மற்றப் பிராணிகளையும் ச்ருஷ்டித்தான்.

ப்ரளய காலத்தில் அவனே அக்னியாகி எல்லாவற்றையும் எரிக்கிறான். அப்போது பூமி, ஜலத்திலும், ஜலம், நெருப்பிலும், நெருப்பு, காற்றிலும், காற்று, ஆகாசத்திலும் லயிக்கின்றன.

ஆகாசம், இந்த்ரியங்களோடும், இந்த்ரியங்கள், தன்மாத்ரைகளோடும், தன்மாத்ரைகள், அஹங்காரத்திலும், அஹங்காரம், மஹத்திலும், மஹத், அவ்யக்தத்திலும், அவ்யக்தம், அக்ஷரத்திலும், அக்ஷரம், தமஸ்ஸிலும் லயிக்கின்றன. தமஸ் பகவானுடன் ஒன்றி மறைகிறது.

இப்படிப்பட்ட பகவானை அடைய பலனில் பற்றில்லாமல், ஸத்யம், கொடை, தவம், ப்ரம்மச்சர்யம், வைராக்யம், யஜ்ஞம், என்கிற ஆறு அங்கங்களைக் கொண்டு உபாஸிக்க வேண்டும்.

ஹ்ருதயத்தின் நடுவே, மாம்ஸ பிண்டம் ஒன்று உள்ளது. (புரிதத்து) . அதில் தாமரைப் பூ போல ஓர் அவயவம் உள்ளது. அங்கே நாடிகளின் வாயாக பத்து த்வாரங்கள் உள்ளன. அவற்றில் ப்ராண, அபான முதலிய வாயுக்கள் உலவுகின்றன. யோகி, அந்தந்த வாயுவின் ஸகாயத்தால் எல்லா லோகங்களையும் யக்ஷ, ராக்ஷஸ, கந்தர்வர்களையும் மற்ற எல்லாவற்றையும் பார்க்கிறான்.

முக்யமான இந்த பத்து நாடிகள் ஒவ்வொன்றுக்கும் 72,000 சிறிய நரம்புகள் உள்ளன. ஜீவாத்மா இந்த நாடிகளில் இருக்கிறான் (விழித்திருக்கும்போது). ஸ்வப்ன தசையில், ஸ்வப்னம் காண்பது, உறக்கத்தில் உடலைக் காப்பது, ரத்தத்தை எல்லா நாடிகளிலும் பரப்புவது, ஹிதை எனப்படும் நாடிகளோடு சேர்ந்த "புரிதத்து" என்கிற ஹ்ருதயாகாசத்தில் போய் உறங்குவது எல்லாமே இதன் செயல். கண், காது, மூக்கு, நாக்கு, த்வக் (தோலில் எங்கும் உள்ளது) மனஸ், புத்தி, அஹங்காரம், சித்தம், வாக்கு, கை, கால், மலேயந்திரியம், மூத்திரேந்திரியம்-ஆக 14 இந்த்ரியங்கள். இவைகளுக்குத் தனித்தனியாக உள்ள விஷயம் - இவற்றுக்கான தேவதை-இப்படி 14 உபாஸனைகள். நாடி, ப்ராணன், அதனால் உண்டாகும் அறிவு அப்போது ஏற்படும் ஆநந்தம், ஹ்ருதயாகாசம் ஆகிய 8 இடங்களில் பரந்து உள்ளவனாக-பகவானை உபாஸிக்க வேண்டும்.

எல்லாவற்றையும் நிர்வஹிப்பவன். கட்டளையிடுகிறவன். எல்லா ஜீவாத்மாக்களுக்கும் ஆத்மா. ப்ராணனுக்கும் ஆத்மா. அறிவுக்கு எட்டாதவன். பலபடியாக வருணிக்கப்படும் பரமாத்மா-

ஸ்ரீமன்நாராயணன். ஆதித்யர்கள், ருத்ரர்கள் அவனே. காரணமும் அவனே. அவனுக்கு எல்லாப் பூமிகளும் உடல். பரமபதத்தில் எழுந்தருளியிருப்பவன். எல்லாம் உடலாய், பகவான் எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியாய் -ஆத்மாவாய் இருக்கும் இந்த வித்யையை உபதேசமாகப் பெற்றார். இது வேத ரஹஸ்யம்.

உடம்பில் உள்ள நாடிகளில் நான்கு நாடிகள் முக்கியமானவை. ரமை, அரமை, இச்சை, அபுநர்பவை - புண்ய லோகம், பாப லோகம், நினைத்த இடம், மோக்ஷ ஸ்தானம், என்கிற இடங்களுக்கு இவை முறையே வாயில்கள். நான்காம் நாடி வழியாகப் புறப்பட்டு, ஹ்ருதயகோசம், தலைக்கபாலம் இவற்றைப் பிளந்து கொண்டு, ப்ருத்வி முதல் எல்லா தத்துவங்களையும் கடந்து ஜீவன் மேலே செல்கிறான். இப்படிப்பட்ட வித்யையை புத்ரன், சிஷ்யன் தவிர வேறு யாருக்கும் உபதேசிக்கலாகாது.

## 17 - அக்னி ரஹஸ்யம்

சுக்ல யஜுர் வேதத்தில், சதபத ப்ராம்மணத்தில் இது ஒரு பாகம். இது உபநிஷத்து அல்ல.

யாகங்கள், ஹோமங்கள் செய்பவர் வைதீகமான அக்னியை ஆதானம் என்பதை அனுஷ்டித்து ஸம்பாதிக்கிறான். இவன் "ஆயிதாக்னி" எனப்படுகிறான். ஸோம யாகம் செய்யும்போது கருடன் முதலான உருவில் இடம், நிர்மாணிக்கப்பட்டு, ஆஹவநியாக்னி வைக்கப்படுகிறது. புருஷனுடைய ஆயுட்காலம் 36,000 நாட்கள். ஒவ்வொரு நாளிலும் செய்யும் கடமைகளை, யாகத்துக்கு வேண்டிய அங்கங்களாக பாவித்து க்ரது (யாகம்) செய்ய வேண்டும். (ஸ்தோத்ரங்கள், பூஜை உட்பட ஒவ்வொருவரும் செய்யும் கடமைகள்). இது வித்யாமயக்ரது எனப்படும். (வைச்வாநர வித்யை - சாண்டில்ய வித்யை தனியே சொல்லப்பட்டுள்ளது)

## 18- மஹோபநிஷத்

நாராயணன் ஒருவன்தான் ச்ருஷ்டிக்கு முன்பு இருந்தான். ப்ரம்மன், ருத்ரன், ஜலம், அக்னி, ஸோமன், ஸ்வர்க்கம், பூமி,நக்ஷத்ரம், ஸூர்யன், சந்த்ரன் முதலிய எதுவும் இல்லை, தனியாக இருப்பதில் த்ருப்தி இல்லாத நாராயணன் த்யானம் செய்ய 14 பிள்ளைகள். (10 இந்த்ரியங்கள், மனஸ், அஹங்காரம், ப்ராணன், ஆத்மா (உடல்). புத்தி 15வது இப்படியாக பிறந்தன. பிறகு 5 பூதங்கள் 5 தன்மாத்ரைகள், 25வது தத்துவமாக ஜீவன் பிறந்தன. பரமாத்மா எல்லாவற்றையும் ஒன்றாக்கி ஜீவனை அதில் புகுத்தி ஸ்ருஷ்டி செய்தான். இப்படி எல்லா ஜீவ ஸ்ருஷ்டிக்கும் காரணம் நாராயணன். நெற்றியிலிருந்து ருத்ரன், இவனிடம் சத்யம், ப்ரம்மச்சர்யம், வேதம் மற்றும் பல செல்வங்கள் சேர்ந்தன. ஆகவே அவன் ஈசானன், மஹாதேவன் எனப்பட்டான். அவன் நாராயணனை தியானம் செய்ய நெற்றியில்வியர்வை உண்டாயிற்று. அது எங்கும் பரவி நீராக ஆயிற்று. அதில் ப்ரம்மாண்டம் உண்டாயிற்று. ப்ரம்மன் அங்கு தோன்றினான். பிறகு அந்தந்த லோகங்கள், தேவதைகள் பிறந்தன. இதற்கெல்லாம் காரணம் நாராயணன். அவனை ஆச்ரயித்தே எல்லா உலகமும் உயிர்களும் உள்ளன. தாமரை மொட்டுபோன்ற ஹ்ருதயத்தில் அக்னி ஜ்வாலை உள்ளது. அதனிடையில் பரமாத்மா இருக்கிறான். ப்ரம்மன், சிவன், இந்த்ரன் எல்லோருடைய ஹ்ருதயத்திலும் இருக்கிறான். இதற்கு மேல் ச்லோகரூபமாக இந்த உபநிஷத் உள்ளது.

உபநிஷத்துக்களில் 32 ப்ருஹ்ம வித்யைகள் விளக்கப் படுகின்றன. ப்ருஹ்ம ஸூத்ரம் இதைச் சொல்கிறது. இப்படி, இதுவரை வேதங்கள், சாகைகள், வேதத்திற்கான அங்கங்கள், ஸ்ம்ருதி, புராணம், இதிஹாஸம், மந்த்ரபாகம், ப்ராம்மண பாகம், முக்ய உபநிஷத்துக்கள்போன்ற எல்லா விஷயங்களையும் சுருக்கமாகத் தெரிவிக்கப்பட்டது.

வேதம்- பெரிய பர்வதம். வேதாந்தம் என்கிற உபநிஷத் - மலைக்குள் இருக்கும் குகை. இந்த குகைக்குள் நம்மை அழைத்துப் போய் நமக்கு வழிகாட்டுபவர்கள் ஆசார்யர்கள். வேதத்தை அத்யயனம் செய்தால் மட்டும் போதாது.

வேதாங்கங்களையும் கற்க வேண்டும் (வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், கல்பம், சிக்ஷா , ஜோதிடம்).

மஹரிஷிகள், ருக் வேதத்தை புத்தியாகிற மத்தினால் கடைந்தார்கள். எட்டு அக்ஷரம் கிடைத்தது. இப்படியே யஜுர் வேதம் கடையப்பட்டது. இதிலிருந்து எட்டு அக்ஷரம் கிடைத்தது. இப்படியே ஸாமவேதம் கடையப்பட்டது. இதிலிருந்து எட்டு அக்ஷரம் கிடைத்தது. இந்த 24 அக்ஷரங்கள் தான் காயத்ரீ மந்த்ரம். இதையும் சுருக்கினார்கள். ருக் வேத 8 அக்ஷரங்களிலிருந்து பூ:, யஜுர் வேத 8 அக்ஷரங்களிலிருந்து புவ:, ஸாமவேத 8 அக்ஷரங்களிலிருந்து ஸுவ:

பூ:, புவ:, ஸுவ: - வ்யாஹ்ருதி மந்த்ரம் என்று பெயர். இதை மேலும் சுருக்கினார்கள்.

ருக் .. பூ:. ... என்பதிலிருந்து அகாரம்
யஜுர் .. புவ : ... என்பதிலிருந்து உகாரம்
ஸாம .. ஸுவ: ... என்பதிலிருந்து மகாரம்

மூன்றையும் சேர்த்தார்கள். "ஓம்காரம்" பிறந்தது. வேதத்திற்கு இதுவே சிரஸ்.

யஜ்ஞ ப்ரகரணத்தில் உத்கீதத்தாலே (ஸாம வேதம்) தேவதைகளையும், பகவானையும் அழைக்க வேண்டும். ருக் வேதத்தாலே அப்படி வந்தவர்களை ஸ்தோத்ரம் பண்ண வேண்டும். யஜுர் வேத மந்த்ரங்களால் இப்படி இப்படி அழைக்கப்பட்டு வந்துள்ள தேவதைகளுக்கும் பகவானுக்கும் ஹோமம் பண்ண வேண்டும். அதர்வ வேதமானது ப்ரஹ்மாவாக இருந்து இந்த யஜ்ஞத்தை நடத்தி வைக்கிறது.

வேதமும், ஸ்ம்ருதிகளும் என் கட்டளைகள். அவற்றை மீறி நடப்பவன் என் கட்டளையை மீறியவனாவான். அவன் என்னிடம் பக்தி கொண்டாலும் ஏற்கப்படாது என்று ஸ்ரீவிஷ்ணு தர்மத்தில் பகவானே அருளியிருக்கிறார்.

## வேதாபாஸனா - ஏன்?

“வேதோபஸனா” என்கிற தலைப்பில் சொல்லப்பட்ட விஷயங்கள்-எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும், நமது கலாச்சாரத்தின் அரிய பொக்கிஷம் பண்டித நடைப்பாஷைகளால் புரிந்து கொள்ள முடியாமல் ஒதுக்கி விடக் கூடாது என்பதற்காகவும், வரும் தலைமுறைகள் (ஏன் இப்போதைய தலைமுறையும் சேர்த்து) வேதங்களை அப்யஸிக்க வேண்டும்; அதில் ஈடுபாடு கொள்ள வேண்டும்; எந்த துறையில் பணியாற்றினாலும் வேத அத்யாயியாகவும் திகழ வேண்டும் என்பதற்காகவும், மிகவும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

இந்த வேதோபாஸனாவை உபாஸனம் செய்யும் ஆஸ்திகர்கள் முதலில் தன் வேதத்தின் ஸ்வசாகை, பஞ்சஸூக்தங்கள், தைத்திரீயம், இவற்றை அத்யயனம் செய்தல் நல்லது. இவற்றை அத்யயனம் செய்து விட்டீர்களானால், வேத புருஷனின் ஆசீர்வாதம் நிச்சயம் கிடைக்கும். பிறகு க்ரமேண வேத அத்யயனம் செய்ய உங்களுக்கே ஆர்வம் வந்து விடும். **வேதத்தை உபாஸிப்பது, பகவானை உபாஸிப்பதற்குச் சமம்.**

## உதவிய முக்ய க்ரந்தங்கள்

வேதோபாஸனாவிற்கு உதவிய நூல்கள் ஏராளம். முக்யமான நூல்களின் விவரம் :

(1) ஸ்ரீசாரீரக மீமாம்ஸா பாஷ்யம் (வைகுண்ட வாஸி, புரிசை நடாதுூர் ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸனம் ஸ்ரீ உ.வே.க்ருஷ்ணமாச்சார்யர் ஸ்வாமி அருளியது)

(2) ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரம் (ஸார விஸ்தரம்) வைகுண்ட வாஸி உத்தமூர் அபிநவ தேசிக ஸ்ரீ உ.வே.வீரராகவாச்சார்யர் அருளியது)

(3) உபநிஷத் ஸாரம் (இதே ஸ்வாமி அருளியது)

(4) வடுவூர் ஸ்ரீ உ.வே.நாராயணன் இயற்றிப் பதிப்பித்த ருக், யஜுர், ஸாம, அதர்வண வேதங்களும் 10 உபநிஷதங்களும்

இதைப் போன்று இன்னும் அநேக க்ரந்தங்கள் உதவியிருக்கின்றன.

ஸ்ரீநாராயண உபநிஷத் மந்த்ரத்தைச் சொல்லி
வேதோபாஸனத்தை நிறைவு செய்கிறோம்.

ஓம் அத புருஷோ ஹவை நாராயணோ காமயத ப்ரஜாஸ் ஸ்ருஜேயதி| நாராயணாத் ப்ராணோ ஜாயதே| மனஸ்ஸர்வேந்த்ரியாணிச| கம்வாயுர் ஜ்யோதிராப: ப்ருதிவீ விச்வஸ்ய தாரிணீ| நாராயணாத் ப்ரஹ்மாஜாயதே| நாராயணாத் ருத்ரோ ஜாயதே| நாராயணாதிந்த்ரோ ஜாயதே| நாராயணாத் த்வாதாசா தித்யா ருத்ரா வஸவ: ஸர்வாணிச சந்தாகும்ஸி| நாராயணாதேவ ஸமுத்பத்யந்தே| நாராயணாத் ப்ரவர்த்தந்தே| நாராயணே ப்ரலீயந்தே| அத நித்யோ நாராயண:| ப்ரஹ்மாச நாராயண:| சிவஸ்ச நாராயண:| சந்ரஸ்ச்ச நாராயண:| காலஸ்ச்ச நாராயண:| ஊர்த்வம்ச நாராயண:| அதஸ்ச்ச நாராயண:| அந்தர் பஹிஸ்ச நாராயண:| நாராயண ஏவேதகும் ஸர்வம்| யத்பூதம் யச்சபவ்யம்| நிஷ்களங்கோ நிர்விகலபோநிராஞ்ஜநோ நிராக்யாத: ஸூத்தோதேவ ஏகோ நாராயண:| நத்விதியோஸ்தி கஸ்சித்| ய ஏவம் வேத| ஸவிஷ்ணுரேவபவதி ஸவிஷ்ணுரேவ பவதி|

ஓமித்யக்ரே வ்யாஹரேத்| நம இதி பஸ்சாத்| நாராயணாயேத்யுபரிஷ்டாத்| ஓமித்யோகாக்ஷரம் | நம இதி த்வே அக்ஷரே | நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி | ஏதத்வை நாராயண-ஸ்யாஷ்டாக்ஷரம் பதம் | யோஹவை நாராயணஸ்யாஷ்டாக்ஷரம் பதமத்யேதி | அனபப்ருவ: ஸர்வமாயுரேதி | விந்ததே ப்ராஜாபத்யம் ராயஸ்போஷம் கௌபத்யம் | ததோம்ருதத்வமச்நுதே ததோ-ம்ருதத்வ மச்னுத இதி | ய ஏவம் வேத | இத்யுபநிஷத்|

ப்ரத்யகானந்தம் ப்ரம்ஹபுருஷம் ப்ரணவஸ்வரூபம் அகார உகார மகார இதி | தானேகதா ஸதபவத்ததோமிதி | யமுக்த்வா முச்யதே யோகீ ஜன்ம ஸம்ஸார பந்தனாத் | ஓம் நமோ நாராயணாயேதி மந்த்ரோபாஸக:| வைகுண்டலோக புவனம் கமிஷ்யதி| ததிதம் பரம் புண்டரீகம் விக்ஞாநகனம் | தஸ்மாத் ததிதாப மாத்ரம்| ப்ரம்ஹண்யோ தேவகீ புத்ரோம் ப்ரம்ஹண்யோ மது ஸூதனோம் | ஸர்வபூதஸ் தமேகம் நாராயணம் | காரண ரூப மகாரம் பரம்ப்ரஹ்மோம் | ஏதத தர்வதிரோயோ தீயதே | ப்ராதரதீயானோ ராத்ரிக்ருதம் பாபம் நாசயதி | ஸாயமதீயானோ

சிவஸ்க்ருதம் பாபம்நாசயதி| மாத்யந்தின மாதித்யாபி முகோதீயான: | பஞ்சபாதக உபபாதகாத் ப்ரமுச்யதே| ஸர்வவேதபராயண புண்யம் லபதே | நாராயண ஸாயுஜ்யமவாப்னோதி | ய ஏவம் வேத | இத்யுபநிஷத் |

|| ஹரி: ஓம் ||



ஸமஸ்தபரிவாராய ஸ்ரீமதே நாராயணாய நம:

அநேக விஜ்ஞாபநம்

அடியேன், இளம்பிராயம் முதற்கொண்டே வேதபாராயணம் நடக்கும் இடத்தில் அமர்ந்து பாராயணம் முடியும்வரை ச்ரவணம் செய்து வந்ததால், வேதகோஷத்தால் ஈர்க்கப்பட்டேன்

ஆனால் காலம் செல்லச்செல்ல வேதபாராயணம் அருகிவருகிறது. வேதாத்யாயிகள் குறைந்து வருகின்றனர். முக்யமாக, வைணவர்கள், இதில் அதிகமாக ஈடுபாடு கொள்வதாகத்தெரியவில்லை.

இவர்கள் லௌகிக வேலைகளில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு, மனம் ஆன்மீகத்தில் திரும்பும் போது, இவர்களுக்கு, திவ்யப்ரபந்தம் சந்தை சொல்வதும், பிறகு பாராயணத்தில் அன்வயிப்பதும் சுலபமாக இருக்கிறது. பஞ்ச ஸூக்தங்கள் கூடத்தெரிவதில்லை.

வேதம் தமிழ்செய்த மாறன் சடகோபன் என்றும், வேதம் அனைத்துக்கும் வித்தாகும் என்றும், தமிழில் உள்ள திவ்ய ப்ரபந்தந்தங்களைக் கொண்டாடினாலும், இவைகளுக்கு எல்லாம் மூலமான வேதங்களைமறப்பதோ ஒதுக்குவதோ ந்யாயமா? வேதங்களின் அருமையும், அவற்றின் பெருமையும் உணர்ந்தால், எப்பாடுபட்டேனும் வேத அத்யயனம் செய்வதில் ஈடுபாடு வரும் என்கிற ஆவலால், அடியேன் இதில் இழிந்தேன். ஸ்ரீ கோசங்கள் பலவற்றைப் படித்தேன். பல வித்வான்களிடம், பல விஷயங்களைத்தெரிந்து கொண்டேன்.

## படித்த ஸ்ரீ கோசங்களில் முக்யமானவை

1. ஸ்ரீ சாரீரக மீமாம்ஸா பாஷ்யம் (வைகுண்டவாஸி புரிசை நடாதூர் ஸ்ரீபாஷ்யஸிம்ஹாசனம் ஸ்ரீ உ.வே. கிருஷ்ணமாச்சார்யர்)
2. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம்-ஸாரவிஸ்தரம் (வைகுண்டவாஸி உத்தமுர் அபிநவதேசிக ஸ்ரீ உ.வே. வீரராகவாச்சார்யர்)
3. உபநிஷத் ஸாரம் (இதே ஸ்வாமி அருளியது)

4. ஸ்ரீ விஷ்ணு புராணம்
5. ஸ்ரீ மஹாபாரதம்
6. ஸ்ரீ அஹோபில மடம் 43ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் ஸப்ததி மலர்
7. ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஸதாபிஷேக மலர்-1987
8. ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் விஜய யாத்ரா மலர்-1996
9. உபன்யாஸ சக்ரவர்த்தி ஸ்ரீ உ.வே.முக்கூர் லக்ஷ்மிநரஸிம்ஹாசார்யரின் "குறையொன்றுமில்லை" புஸ்தகங்கள் மற்றும் பல
10. மஹரிஷிகள் சரிதம் (ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் தேவநாதாசார்யர் - வைகுண்டவாஸி
11. வேத விஜ்ஞானம்
12. தி வேதாந்த ஸூத்ராஸ் (ஆங்கிலம்-1961)
13. ஸ்ரீ ராமாயண தத்வார்த்த தீபிகை
14. ஸ்ரீ பரவாக்கோட்டை ஆண்டவன் ஸதாபிஷேக மலர்
15. ஸ்ரீ மதுராந்தகம் ஸ்வாமி நூற்றாண்டு விழா மலர் - 2000
16. ஸ்ரீ உத்தமூர் ஸ்வாமி சதமான மஹோத்ஸவ மலர்
17. உபநிஷத் ஸாரம் - ஸ்ரீராமகிருஷ்ணா மிஷன்
18. ஸ்ரீ ஸுதர்ஸந சதகம் - ஸ்ரீகூர நாராயண ஜீயர்
19. ஸ்ரீ பௌண்டரீகபுர ஆஸ்ரம வெளியீடான

    1. சதாபிஷேக ரத்னமாலா
    2. ஸ்ரீ ரஹஸ்யத்ரயஸாரம்
    3. சில்லறை ரஹஸ்யங்கள்
    4. இராமபிரானைக் கற்போம்

20. அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை
21. வடுவூர் ஸ்ரீ உ.வே.நாராயணன் இயற்றிப்பதிப்பித்த "ருக், யஜுர், ஸாம, அதர்வண வேதங்களும் 10 உபநிஷதங்களும்"

    மற்றும் பல.

இவற்றைத் தவிர

1. 45ம் பட்டம் ஸ்ரீமதழகிய சிங்கர் உபன்யாஸங்கள்

2. கருநிலம் ஸ்ரீ உ.வே. நரஸிம்ஹாசார்யர் உபன்யாஸங்கள், காலக்ஷேபங்கள்
3. திருப்புட்குழி ஸ்ரீ உ.வே. நரஸிம்ஹதாதாசார்யர் சம்பாஷணைகள்
4. முக்கூர் ஸ்ரீ உ.வே.லக்ஷ்மிநரஸிம்ஹர்சார்யர் உபன்யாஸங்கள்
5. தூப்புல் ஸ்ரீ உ.வே. லக்ஷ்மிநரஸிம்ஹர்சார்யர் உபன்யாஸங்கள் மற்றும் பல மஹா வித்வான்கள்

அவற்றின் தொகுப்பே இந்த வேதோபாஸனா.

ஸமஸ்தபரிவாராய ஸ்ரீமதே நாராயணாய நம:
ஸர்வம் ஸ்ரீஹயக்ரீவ ப்ரீயதாம்

அடியேன்,
உருப்பட்டூர் ஸௌந்தரராஜன்